
Supplimentary for nNew Cine Today Special Tamil ovel Rs. 8/-2009 R.Dis. No.1980/2005



Uploaded by Naghu

# 1

மாவிலைத் தோரணங்களும், மாலை அலங்காரமுமாய் அந்த மண்டபமே ஜொலித்துக் கொண்டிருந்தது. மேள தாளங்கள், காதைப் பிளக்கும் இன்னிசை ஒலிகள், சேர்களை இழுத்துப் போட்டுக் கொண்டு விளையாடும் வாண்டுகள், பட்டுப்புடவை சரசரக்க விரைந்தோடும் பெண்கள், விதவிதமான நகைப்பொலிகள். எல்லாவற்றையும் ரசித்தவாறு உள்ளே நடந்தாள் உதயரேகா.

"உயிர்த் தோழி கல்பனாவுக்கு இன்று திருமணம். கண்டிப்பாக நீ காலையிலே வந்துவிட வேண்டும். இல்லாவிடில் உன்னை..." என கல்பனா உரிமையாய் அழைத்து முறைத்தபோதே சம்மதம் சொல்லியிருந்தாள்.



கடந்து போகிறவர்களின் பார்வை ஒருமுறை அவள் மேல் நிதானித்து விட்டு அகலுகையில் குனிந்து தன்னையே ஒருமுறை பார்த்தாள். பச்சை நிற ஜரிகை பார்டர். சின்னதாய் பூக்கள் வைத்த டிசைன். அம்மாவின் பிடிவாதத்திற்காக, "கல்யாண வீடு... நாலு பேர் பார்க்கிற இடம், நீ நன்றாக இருக்கவேண்டாம்?" என்ற வற்புறுத்தலுக்காக கட்டிக் கொண்டாள்.

அதிகப்படியான அழகாய் தெரிகிறதோ? என நினைத்தாள்.

எப்போதும் அடக்கமாய் அமர்த்தலான அழகு செய்வதே அவளுக்குப் பிடித்தும்கூட பேஸ் க்ரீம், லோஷன் என்றெல்லாம் போகாமல் பயத்தம் மாவும், சந்தனமுமே போதும் என நினைப்பாள். நாசிற்கு இனிமையான சுகந்தமான ஜவ்வாது இருக்கையில் உயர்ரக செண்ட் வகைகள் தேவையில்லாதது என்பது அவள் கருத்து.

"உன் அழகுக்கு அந்த ஒற்றை ஸ்ப்ரிங் முடியை நெற்றியில் புரள விட்டவாறு நீ ஒரு பார்வை பார்த்தாலே போதும். பார்ப்பவர்கள் க்ளீன் போல்ட்!" என தங்கை நீலா அடிக்கடி சொல்லும்போது உள்ளூர ரசித்தாலும், "ச்சு... சும்மா இருடி..." என அடக்கி விடுவாள்.

இப்போது இங்கு கிளம்பும்போது கூட, "உன் பச்சை வண்ண சேலைக்கு... இந்த ஜூவாலை வடிவம் அழகாய் இருக்கும்..." என மின்னும் ஸ்டிக்கர் பொட்டை நெற்றித் திலகமாய் அவள்தான் ஒட்டி விட்டாள்.

"பார்... அப்படியே... ஜொலிக்கிறாய்.. எத்தனை ஆண்கள் விழப் போகிறார்களோ?" என்று சீண்டியபோது,

"ப்ளஸ் டு படிக்கும் உனக்கு இது அதிகப்படியான பேச்சுதான்....." என செல்லமாய் கண்டிக்கவே செய்தாள்.

ஆயிற்று. ஒரு வழியாய் குதூகலமும் சந்தோஷமுமாய் பொதுமிய கல்யாண நெரிசல்களை கடந்து மணமகள் அறைக்குள் நுழைந்தபோது கல்பனா ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

"வாடி, வருகிற நேரமா?" என கடிந்தபடி சளசளவென பேச்சை ஆரம்பித்து விட்டாள். மாப்பிள்ளை சொந்த அத்தை பையன் என்பதால் மணப் பெண்ணுக்குரிய எந்த பரபரப்போ பதட்டமோ அவளிடம் இல்லை. சொல்லப் போனால் "இரண்டு மூன்று முறை என் அலங்காரத்தை அது வந்து எட்டிப் பார்த்துப் போயிற்று. தெரியுமா?" என மாப்பிள்ளையையும் ஒரு பிடி பிடித்து கேலி செய்து கொண்டிருந்தாள்.

கல்பனாவின் சளசளப்பை, "ஐயோ கல்பனா, நீ மணப்பெண். பேச்சைக் குறை. இன்று ஒரு நாளாவது போலியாய் வெட்கப்பட்டு நடி...!" என செல்ல அதட்டு ஒன்று போட்டு நிறுத்தினாள். அவளை உட்கார வைத்து பின்புற முடி அலங்காரங்களை சரி செய்தாள்.

Uploaded by Naghu

கல்பனாவின் நீள முகவெட்டிற்கு நெற்றிச்சூடி பொருத்தமாய் இருக்கும் என வீட்டிலிருந்து தான் கையோடு கொண்டு வந்திருந்ததை எடுத்து அவளுக்கு மாட்டினாள்.

அதற்குள் காலை உணவிற்காக நடக்கும் பந்தியில் பரிமாறுவதற்காக ஆள் குறைவதாக யாரோ வந்து சொல்ல... கல்பனாவிடம் சொல்லிவிட்டு உடனடியாக அங்கு விரைந்தாள்.

சொன்னது போல் அங்கு இலையுடன் எல்லோரும் காத்திருக்க... பரிமாறிக் கொண்டிருந்த இரண்டு பேரும் சமாளிக்க முடியாமல் தவிக்கத்தான் செய்தனர். சட்டென குனிந்து இட்டிலி தட்டுகளை எடுத்தாள். வாளியை எடுத்தாள். மின்னல் வேகத்தில் பரிமாற ஆரம்பித்தாள்.

பத்து பதினைந்து நிமிடங்களில் நிலைமை சரியாகியது. பரிமாற வேறு ஆட்களும் வந்து விட... நெற்றியின் சின்ன வியர்வைத் துளிகளை துடைத்தவாறு அங்கிருநது அகலப் போனவள் அப்போதுதான் கவனித்தாள்.

எதிர்புறம் உள்ள தூணின் ஓரமாய் கைகளைக் கட்டியபடி ஒக்ருவன் நின்று கொண்டு அவளையே பார்த்தபடி.

அவளுக்கு ஒரு கணம் சந்தேகமாகவும் இருந்தது.

ஒருவேளை வேறு யாரையும் பார்க்கிறானா? என திரும்பிப் பார்த்தாள்.

யாரும் இல்லை. அவன் அவளைத்தான், அவளது நடவடிக்கைகளைத்தான் உற்று கவனித்துக் கொண்டிருக்கிறான்.

யாரிவன்? என அவளும் பார்வையை கூர்மையாக்கினாள்.

நெடுநெடு உயரத்தில் .... நீள.. ஃபுல் சூட் கோட்டில் பணக்காரத்தனமாய் தெரிந்தான். கண்களில் ஸ்டைலான கூலிங் கிளாஸ் வேறு. அதை மீறி அவனது பார்வை தன்னை துளைப்பது போல் உணர்ந்தாள்.

சட்டென அவள் உற்றுப் பார்த்ததும் அவன் பார்வையை விலக்குவான் என்று பார்த்தால்... அவன் கொஞ்சமும் அசராது அதே உறுத்த பார்வை பார்த்தது அவளை எரிச்சலாக்கியது.

ம்கூம்! இவனை என்ன பார்ப்பது...? என முகத்தை திருப்பியவள் அவனை பொருட்படுத்தாது விறுவிறுவென நடந்தாள்.

மணமேடைப் பக்கம் சிதறிக் கிடந்த உட்காரும் இருக்கைகளை சேர்களை ஒழுங்கு படுத்தினாள்.

பந்தி நடக்கும் இடம் தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு வழிகாட்டினாள்.



மணமேடை மாலைகளை இழுத்து பிய்த்துக் கொண்டிருந்த சில குறும்பு வாண்டுகளை செல்லமாய் தடுத்து வழிப்படுத்தினாள். கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பவும் முதுகை யாரோ பார்வையால் துளைப்பது போல் உணர திரும்பிப் பார்த்தவள் அதிர்ந்தாள்.

அவன்தான்!

பின்னாலே... அவளைத் தொடர்ந்து வந்து மணமேடைப் பக்கம் நின்று கொண்டு.

அதே போல் கைகளைக் கட்டிக்கொண்டு, கண்ணாடியை கழற்றியிருந்தான்.

சந்தேகமில்லை! அந்த விழிகள் ஒருவித வசீகரத்தோடு அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன.

தெரிந்த அடர்ந்த மீசையில் இறுக்கமான உதடுகளில் ஒருவித அலட்சியத்தனம் தெரிந்தது. அதற்கேற்றாற் போல் அவன் யாரையும் சட்டை செய்யாது மற்றவர்கள் பார்ப்பார்கள்.... என்ற உணர்வு கொஞ்சமும் இன்றி அவளை வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

சரிதான் ரோமியோவா..?

அவளைக் கண்டதும் காதல் தீ குபீரென பற்றிவிட்டதோ! ஒரு கணம் வியந்து யோசித்தவள் அவன் உடைகளிலும் உருவிலும் அப்படி ஒரு விடலைத்தனம் இல்லாதது கண்டு தெளிந்தாள்.

இவன் அந்த ரகம் இல்லை.

பின் வேறு யார்?

யாராயிருந்தால் நமக்கென்ன..? மறுபடியும் அவள் பாட்டுக்கு நடந்தாள். கல்யாண களேபரங்களில் பரபரப்பாயிருந்த பெண்கள் கூட்டத்தில் கலந்து விட்டுப் போன சாமான்கள், ஐயர் ஹோமத்திற்கு வேண்டிய பூஜைப் பொருட்கள் என ஆள் ஆளுக்கு ஞாபகப்படுத்திக் கொடுக்க.. வாங்கி மணமேடையில் அடுக்கினாள்.

பரபரப்பாய் வேலைகளில் ஆழ்ந்தாலும் வெளிப்புறமாய் இடைஇடையே அவளது பார்வை சுழன்று அவளையறியாமல் பின்புறம் பார்த்தது.

அவன்.... விடாது... அவளைத் தொடர்ந்து பார்வையால் விரட்டியபடி!

இம்முறை எரிச்சலாக உணர்ந்தாள்.

என்ன... இது... ஓாசுத்தனம்? நாலு பேர் பார்ப்பார்கள் என்ற உணர்வே இல்லாமல்.... பொது இடத்தில் இப்படி ஒருவன் நடந்து கொள்வானா?

யோசித்தவள் நிமிர்ந்து அவன் பக்கம் நன்றாய்த் திரும்பினாள். தன் மைவிழிக் கண்களால் ஒரு முறைப்பு பார்வை பார்த்தாள்.

அவனோ.. ம்கூம்! அதைக் கொஞ்சமும் சட்டை செய்த மாதிரியில்லை. சொல்லப் போனால் முன்பை விட அவனது இடுக்கிய கண்களை விரித்து நன்றாகப் பார்த்தான்.

அந்த... அவனது உதடுகள்... இறுக்கம் தளர்ந்து சிரிப்பது போல் கூட பாவனை செய்தன.

சரிதான்.... இளிப்பு வேறா..?

கொதிப்பாய் நினைத்தவள் அதற்கு மேல் பொறுக்க முடியாதவளாய் விறுவிறுவென அவனை நோக்கி நடந்தாள்.

அவள் தன்னை நோக்கி வேகமாய் வருவதை உணர்ந்தும் அவன் மிரளவில்லை. அப்படியே... நின்று... அதே போல் உரித்த பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

பக்கத்தில் போய் சட்டென நின்றவள் நிமிர்ந்தாள். கண்களை அகல விரித்து அவனையே உறுத்துப் பார்த்தாள்.

"உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும். வருகிறீர்களா?"

அவள் கைகள் வெளிப்புறமாய் யாருமில்லாத பகுதியை நோக்கி சுட்டிக் காட்டியது.

"புரிந்துகொள்வான்..." என்றபடி முன்னால் அதே விரைசல் நடையுடன் நடந்தாள். அவனும் எவ்வித மறுப்பில்லாமல் பின் தொடர்ந்தான்.

இருவரும் மண்டபத்தின் ஓரமாய் உள்ள வெட்டவெளி பகுதிக்கு வந்து நின்றனர்.

அவள் திரும்பி அவனை நன்றாகப் பார்த்தாள்.

நல்ல உயரத்தில்... திடகாத்திரமான உருவத்தில் முகத்தில் ஒருவித வசீகரத்தனத்துடன் கம்பீரமாகவே இருந்தான். ஆனால். அவனது பார்வை... அது... மீண்டும்... மீண்டும்... அவளையே துளைத்தபடி.

எரிச்சலாய் உணர்ந்தவள், "மிஸ்டர்..." என குரலை உயர்த்தினாள்.



"பொது இடத்தில்... எப்படி நடந்து கொள்ள வேண்டும்... என உங்களுக்குத் தெரியாது? இப்படியா ஒரு பெண்ணை விரட்டும் பார்வை பார்ப்பது? என்ன விஷயம்? சொல்லுங்கள்...?" என்றாள் கடுமையாய்.

அவன் விரட்டலுக்கு அதிர்வான் திணறுவான் என்று அவள் எதிர்பார்த்தது பொய்யாயிற்று.

கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாது கட்டியிருந்த கைகளை விலக்கி சிரித்தான்.

"ம்ம்..நீ... சொல்வது சரி. ஆனால் இதையெல்லாம் எதிர்பபார்த்துதான் நான் அப்படிச் செய்தேன்..." என்றான் அமர்த்தலாய்.

அவனது பதில் அவளை துணுக்குறச் செய்தது.

அதைவிட அவன் ஒருமையில் விளித்தது...

"மிஸ்டர்... முதலில்... கொஞ்சம் மரியாதை...?"

அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்பே, "நீ என்னை விட ஓரிரு வயது சிறியவள்தான். நான் அழைப்பதில் தப்பில்லை..."

இம்முறை அவன் குரல் உயர்ந்தபோது... இவன் சாதாரண ரகம் இல்லை என்பது அவளுக்குப் புரிந்தது.

அத்தோடு நில்லாமல் அவன் விளக்கவும் செய்தான்.

"உன்னை இப்படித் தனியே சந்தித்துப் பேசத்தான், வேண்டுமென்றே அப்படி ஒரு பார்வை பார்த்தேன். நான் நினைத்த மாதிரியே வந்து விட்டாய்... நீ..."

அவளை ஏதோ பொறி வைத்து பிடித்த மாதிரி பெருமிதமாய் அவன் சொன்னது அவளை மீண்டும் எரிச்சலடைய வைத்தது.

"சரி.. மிஸ்டர், என்ன விஷயம்? அதைச் சொல்லுங்கள்!" என்றாள் கோபம் விலகாதவளாய்.

"அவசரப்படாதே... சொல்கிறேன்..." என்றபடி அவன் குனிந்து தன் பாக்கெட்டிலிருந்து அதை வெளியெடுத்தான்.

அது... ஒரு புகைப்படம. அதை எடுத்து அவள் முன் அவன் நீட்டியபோது அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

சிரித்தபடி இருக்கும் அவளது போட்டோ!

இது... எப்படி... இவனிடம்... இவனது... கைகளில்..?

அவள் திகைக்க, "தரகர் பொன்னுசாமி இதை கொடுத்தார். உன் தந்தை உனக்கு வரன் தேட அவரிடம் கொடுத்திருக்கிறார். அவரும் என்னிடம் நல்ல குணவதியான பெண் இது... என கொடுத்தார். ஆனால்..."

அவன் ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு முகத்தில் திரும்பவும் அந்த அலட்சியப் பார்வையை ஓடவிட்டான்.

"ஆனால்... எனக்கு... பெண்ணை, அதாவது.. உன்னை... பிடிக்கவில்லை..!"

அழுத்தந்திருத்தமாய் அவன் சொல்ல அதிர்ந்துதான் போனாள்.



## 2

உதயரேகா அவன் சொன்னதையெல்லாம் கேட்டு திடுக்கிட்டுத்தான் போனாள்.

என்னவோ.... ஏதோ... சொல்லப் போகிறான்... என்று பார்த்தால்.. அவனிடம் போட்டோ கொடுத்து கெஞ்சிய மாதிரியும்... அவன் அதை நிராகரிப்பது போலவும் அல்லவா சொல்கிறான்?

ஒரு கணம் தன்னைக் கேட்காமல் தரகரிடம் போட்டோ கொடுத்து வரன்தேட ஆரம்பித்த தந்தை மீது சினம் கொண்டவள், மறுகணமே அப்படி தரகர் மூலம் தந்தை கொடுத்திருந்தாலும் அதை இப்படியா இந்தச் சூழ்நிலையிலா வெளிப்படுத்துவது?

கல்யாண வீட்டில்... அவளை தனியே அழைத்து வந்து... என்ன ஒரு திமிர் இவனுக்கு!

மிஸ்டர்... என்றபடி குரலை உயர்த்தியவள், உங்களுக்கு இங்கிதம் என்பது கொஞ்சமும் கிடையாதா? எதை.. எங்கு பேசுவது.. எங்கு சொல்வது.. என்ற அடிப்படை அறிவு கூட இல்லாமல் இப்படி முட்டாள்தனமாய் நடந்து கொள்வதுதான் உங்களது லட்சணமா?

அவள் கடுமையாகக் கேட்டாலும் அதை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தோள்களை குலுக்கினான் அவன்.

இதோ... பார்... நீ சொல்லும் இங்கிதம், லட்சணம் எல்லாம் எனக்கும் தெரியும். ஆனால்.. நான் நீ நினைப்பது போல் சாதாரணவன் இல்லை. மிக பிஸியானவன். நேரம் போதாத... தொழிலதிபன். எல்லாவற்றுக்கும் மேல் நான் ப்ராக்டிக்கலாக யோசிப்பவன். காரில் வந்து கொண்டிருந்த நான் நீ இந்த திருமண மண்டபத்தில் நுழைவதைப் பார்த்து.. காரை நிறுத்திவிட்டு பின்னாலே வந்துவிட்டேன்...

எதற்கு.. அப்படி கழுகுப் பார்வை... பார்க்கவா?



அவள் குறுக்கிட... கைகளை உயர்த்தியபடி பேசியவன், அவசரப்படாதே. நான் பார்த்தது வெறும் பார்வை அல்ல. உன்னை என் மனைவியாய் ஏற்றுக்கொள்ள முடியுமா, எனக்கு ஒத்து வருமா.. என வெவ்வேறு கோணங்களில் உன்னைப் பொருத்திப் பார்த்தேன். இரண்டு நாள் உன் போட்டோவைப் பார்த்து முடிவெடுக்கமுடியாமல் திணறிய மனம். நேரில் பார்த்ததும் தெளிவடைந்து முடிவும் எடுத்துவிட்டது. அதனாலே.. நேரம் கடத்தாமல் நான் எடுத்த முடிவை உடனே உன்னிடம் சொல்லியும் விட்டேன்...

அவன் பாட்டுக்கு கதை போல் பேசிக் கொண்டு போக... எரிமலையாய் சிவந்து கொண்டிருந்தாள் அவள்.

ஸ்டாப்... தட்... ப்ளடி... என்றாள் ஆவேசமாய், முட்டாள் தனமாய் ஒன்றைச் செய்துவிட்டு அதற்கு நியாயம் வேறு கற்பிக்கிறாயோ..? உன்னைப் பற்றி மனதில்... அப்படி என்னதான்...

மறுபடியும் அவள் பேச முடியாதபடி குரலை உயர்த்தி இடைமறித்தான் அவன்.

உன் பேச்சையெல்லாம்.. பொறுமையாய்.. நின்று கேட்க எனக்கு நேரமில்லை. இதோ.. எனது விஸிட்டிங்கார்டு. எதுவானாலும் அங்கு வந்து பேசிக்கொள்... படபடவென சொல்லியபடி பைக்குள் இருந்த விசிட்டிங்கார்டு ஒன்றை எடுத்து அவளை நோக்கி விசிறிவிட்டு... திரும்பிப் பார்க்காமல் நடந்தான் அவன்.

தன்னை கொஞ்சமும் சட்டை செய்யாமல் செல்லும் அவனை மூச்சு வாங்க முறைத்தவள், அந்த கொதிப்பு அடங்காமலே.. அவன் விசிறியடித்துக் கீழே கிடந்த அந்த விசிட்டிங் கார்டை ஆத்திரமாய் மிதிக்கப் போனாள்.

விடக்கூடாது.. இவனை..! இவனை.. இவன் இடத்திற்கு... இவன் அலுவலகத்திற்குச் சென்று மூக்கை உடைக்க வேண்டும். அப்போதுதான்... புத்தி வரும்!

டக்கென அந்த கார்டை எடுத்தவள் எரிக்கும் பார்வையுடனே அதைப் படித்தாள்.

நரேந்திரன், எஸ்.எம்.எக்ஸ்போர்ட்ஸ்... என எழுதப்பட்டிருந்தது.

மனதில் ஆணியடித்தது போல் அவன் பெயரும் அந்த முகவரியும் அவளுக்கு பதிந்து போயிற்று.

பின் இயல்பு நிலைக்குத் திரும்பி.. மண்டபத்தினுள் நுழைந்து புன்னகை ததும்ப தன்னை தோழியின் கல்யாணச் சடங்குகளில் ஈடுபடுத்திக் கொண்டாள்.

ஆனாலும் அவள் மனம் முழுவதும் மறுநாள் அவனை வாங்கு வாங்குவென வாங்குவதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தது.

அன்று வீடு திரும்பியதும் தந்தையிடம் இதுபற்றிக் கேட்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

உதயரேகாவின் தந்தை குருநாதர். பத்திரிகை அலுவலகம் ஒன்றில் கணக்கராய் வேலை பார்த்து வந்தார். தாய் அன்னபூரணி. தங்கை சுபா... என அளவான குடும்பம் அவளிது.

உதயரேகா கம்ப்யூட்டர் சயின்ஸில் மாஸ்டர் டிகிரி படித்த கையோடு ஸாப்ட்வேர் கம்பெனி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்து விட்டாள்.

மாதம் பதினைந்தாயிரம் சம்பளம். அலவன்ஸ் அது... இது.. என்று கம்பெனி அவளுக்கு வாங்கியபோது... அவளைவிட அதிகம் ஆச்சரியம் அடைந்தது அவளது தந்தைதான்!

முப்பது வருட சர்வீசுக்குப் பின் நான் எட்டிப் பிடிக்கும் சம்பளத்தை ஒரே நாளில் தொட்டு விட்டாயேம்மா.. என வியந்தார். தான் வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்குள் உதயரேகாவின் கல்யாணத்தை நடத்தி விட வேண்டும் என்பது அவரது தீராத ஆசை.

அதனாலே, என்னப்பா அவசரம்? வேலைக்குச் சேர்ந்து ஆறு மாதங்களே ஆகிறது. இன்னும் இரண்டு வருடங்கள் போகட்டுமே..! என ரேகா சிணுங்கியபோது அவளது நீள கூந்தலை பரிவாய் தடவி, இல்லை கண்மணி... இது.. காலாகாலத்தில் நான் செய்ய வேண்டிய கடமை. மேலும் பேரப் பிள்ளைகளை கொஞ்ச எனக்கு மட்டும் ஆசையிருக்காதா? என்பார்.

உதயரேகா தந்தையிடம் இதுபற்றி மேலும் மறுத்து வாதிட விரும்பாதவளாய் யோசித்தவள், உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். ஆனால் வேகம் வேண்டாம். மெதுவாகவே வரன் தேடுங்கள்... என சொல்லவும் செய்தாள்.

குருநாதரும் அதற்கு சம்மதம்தெரிவித்து மகளின் விருப்பத்திற்கேற்ப தீவிரம் காட்டாமல் மெல்ல மெல்லவே நல்ல வரன்களை விசாரித்து தேடிக்கொண்டிருந்தார்.

உதயரேகாவை அந்த விஷயம்தான் ஆச்சரியமும் படுத்தியது. தந்தை தெரிந்தவர்கள் மூலம் தான் தேடிவந்ததாய் சொல்லியிருந்தார். தரகர் மூலம் மாப்பிள்ளையைத் தேடும் அளவுக்கு அவர் அவசரமும் காட்டவில்லை. பின் எப்படி...?

அதைவிட... அந்த கோணல் புத்திக்காரன் போல் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்தாலே... பணத்திமிரும், ஆணவமும் கொண்டவனாய்த் தெரிகிறது. அப்படிப் பட்ட மேல் தட்டு பகட்டு மனிதர்களுக்கு மிடில்



கிளாஸான அவள் எப்படி பொருத்தம் ஆவாள். அந்தத் தரகர் ஏன் அவனிடம், போயும்... போயும் அவனிடம் தன் போட்டோவை கொடுத்து கேட்டிக்க வேண்டும்?

விடை தெரியாமல் யோசித்தவளுக்கு அன்று மாலை தந்தை குருநாதர் வேலை முடிந்து திரும்பியதும்தான் விடை கிடைத்தது.

தந்தையிடம் விஷயம் முழுவதையும் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்ததும் அவர் பதறத்தான் செய்தார்.

ஐயோ! என்னம்மா முழுவதையும் ஒன்று விடாமல் சொல்லி முடித்ததும் அவர் பதறத்தான் செய்தார்.

ஐயோ! என்னம்மா... இது? ஒரு இங்கிதம் கூட இல்லாமல் நேருக்கு நேராய்... உன்னைப் பார்த்தா அப்படி சொல்ல வேண்டும்? என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? நான் ஒரு எட்டு போய் அவனிடம் நாலு வார்த்தை கேட்டு வந்து விடட்டுமா? என படபடத்தார் அவர்.

தந்தையை அமைதிப்படுத்தியவள், அதை அப்படிவிடுங்கள். அவன் சரியான திமிர் பிடித்த கோணல் புத்திக்காரன். அவனிடம் பேசி எவ்வித பிரயோஜனமம் இல்லை. நீங்கள் எப்படி போட்டோவை தரகரிடம் கொடுத்தீர்கள்? அதுதான் புரியவில்லை...! என்றாள். அதற்கு குருநாதர் பதறினார்.

ஐயோ, அவர் ஒன்றும் தரகர் இல்லையம்மா. என்னுடன் வேலை பார்க்கும் ஒரு நண்பர்தான். அவர்தான், ஒரு பெரிய இடம் இருக்கிறது. போட்டோவை கொடுங்கள் காட்டிவிட்டு வருகிறேன்... எனக்கூறி வாங்கிவிட்டு போனார். ஆனால் இப்படி எல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால் போட்டோவை கொடுத்திருக்கவே மாட்டேன். என்னை மன்னித்து விடு அம்மா. என்னால் உனக்கு வீண் அவமானம் ஏற்பட்டு விட்டது...

குருநாதர் அவளது கைகளைப் பிடித்தபடி நிஜமாகவே வருந்த அவரை ஆறுதல் படுத்தி அமைதியாக்கினாள் உதயரேகா.

அன்று இரவு வழக்கம் போல் மொட்டைமாடி சென்று நடைப் பயிற்சிக்காக குறுக்கும் நெடுக்கும் நடந்தவள் அவனைப் பற்றியே யோசித்தாள்.

என்ன ஒரு ஆணவம் அவனுக்கு! எவ்வளவு ஸ்தைரியம் இருந்தால் அவளைப் பிடிக்கவில்லை... என அவளிடமே சொல்வான்!

பிடிக்கவில்லை.. என்றால்.. எது பிடிக்கவில்லை? அவளைப் பிடிக்கவில்லையா... இல்லை அவளது அழகைப் பிடிக்கவில்லையா?

உன்னைப் பிடிக்கவில்லை.. என்று சொன்ன அந்த ஆள் நிச்சயம் குருடனாய்த்தான் இருப்பான்டி! என அன்புத் தங்கை தன் காதுபடச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. பின் என்ன காரணமாயிருக்கும்?

யோசித்தபடியே அன்றைய தினம் தூங்கிப் போனாள். மறுநாள் முதல் வேலையாய் தன் அலுவலகத்திற்கு ஒரு மணி நேர விடுப்பு வாங்கிக் கொண்டு அவனைச் சந்திக்க கிளம்பினாள்.

விடக் கூடாது.. அவனை! எவ்வளவு அலட்சியமாய். அதுவும் பொது இடத்தில், கல்யாண வீட்டில் வந்து அவளை அவமானப்படுத்தியிருக்கிறான்?

கொதிப்பாகவே... கிளம்பியவள் அவன் கொடுத்த விசிட்டிங் கார்டை புரட்டி அட்ரஸ்ஸைப் பார்த்தாள். நகரின் மத்தியப் பகுதியில் இருக்கும் காம்ப்ளெக்ஸ் ஒன்றின் முகவரி குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆட்டோவில் ஏறி... அந்த காம்ப்ளெக்ஸ் முன் இறங்கினாள்.

அந்த காம்ப்ளெக்ஸில் சிறுசிறு அறைகளில் வரிசையாய் பல தொழில் நிறுவனங்கள். அதில் ஒன்றாய் முதல் தளத்தில் ஓரமாய் அவனது எஸ்.எம்.எக்ஸ்போர்ட்ஸ்!

சரிதான்! இப்படி ஒரு இடுங்கிய அறையில் அலுவலகத்தை வைத்துக் கொண்டுதான் இந்தத் துள்ளு துள்ளியிருக்கிறானா?

நினைத்தபடியே... உள்ளே நுழைந்தாள்.

அவள் கணித்தது போலவே... உள்ளே ஒரு சிறிய ரிசப்ஷன் அறையும் அதை அடுத்து விஸ்தாரமான ஹால் ஒன்றுமே இருந்தது.

ரிசப்ஷனில் இருந்த பெண் நிமிர்ந்து வினவ, மிஸ்டர் நரேந்திரனைப் பார்க்க வேண்டும்.... என்றாள் கம்பீர குரலில்.

அவள் குனிந்து இன்டர்காமில் பேசிவிட்டு அனுமதிகொடுக்க... கண்ணாடிக் கதவுகளைத் திறந்து உள்ளே நுழைந்தாள் உதயரேகா.

உள்ளே... குஷன் ஸீட்டில்... கம்பீரமாய் அவன்!

அவளைப் பார்த்ததும் புருவம் உயர்த்தி அதே அலட்சியப் பார்வை பார்த்தான்.

நீ... வருவாய்... என்று தெரியும்! நான் எதிர்பார்த்தது தான்...! என்றான் கைகளை மடித்தபடி.

அவன் சொன்னதற்கு எவ்வித பதிலும் சொல்லாமல் அவனுக்கு எதிரே இருந்த இருக்கையை இழுத்துப் போட்டு அமர்ந்தாள் அவள்.

ஓரிரு நிமிடம் பேசாமல் அவனையே முறைத்து பார்த்தாள்.



அந்த நெடு நெடு உயரமும், திடகாத்திர ஆஜானுபாகுவான உடம்பும், பரந்த நெற்றிக்கு கீழே தெரியும் இடுங்கிய கண்களின் கூரான பார்வையும், அந்த முறுக்கு மீசையின் கீழ் இருக்கும் இறுக்கமான உதடுகளும் அவனை ஒரு ஆணவக்காரனாகவே அவளுக்கு பறைசாற்றின.

அவள் தன்னையே கண்கள் விரிய உறுத்துப் பார்ப்பது கண்டு அவனது முகத்தில் கேலி கூடியது.

என்ன.. அப்படிப் பார்க்கிறாய்? இப்படி ஒரு கம்பீர பர்ஸனாலிட்டியை... இப்போதுதான் உன் வாழ்க்கையில் சந்திக்கிறாயா?

மறுபடியும் திமிர்க் கேள்வி!

இவன்... அவள் வாழ்க்கையில் சந்தித்திராத கம்பீர பர்ஸனாலிட்டியாம்...!

என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? ஆணவம் இருக்க வேண்டியதுதான். அதற்காக இப்படியா?

அவள் பார்வையை விலக்கி சுற்றும் முற்றும் அந்த அறையை அளவெடுத்தாள்.

ஓரமாய் பெரிய அலமாரி. தண்ணீர் கேன். ரேக் ஒன்றில் பலதரப்பட்ட புத்தகங்கள். அவனது பெரிய மேஜையில் ஐந்தாறு பைல்கள்.

இதுதான் அவனது ஆபீஸ்! இதில் அப்படி என்ன தொழில் செய்கிறானோ? இதை வைத்துக்கொண்டு இந்த வரத்து வருகிறான்!

அவள் அப்படி பதில் சொல்லாமல் தன்னையும் ரூமையும் அளவெடுத்துக் கொண்டிருந்தது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

டக்கென எழுந்து அவள் மைவிழிக் கண்கள் முன் சொடுக்கிட்டான்.

ஹலோ... உன்னைத்தான்.... என்றான்.

அவளும் கோபமாய் நிமிர்ந்தாள்.

என்ன?

பேசு... வந்ததை பேசு. நீ பாட்டுக்கு இடித்த புளி போல் உட்கார்ந்திருந்தால் என்ன அர்த்தம்..ம்ம்..?

இடித்தபுளி! அவளா இடித்தபுளி?

அவள் முறைப்பதை கொஞ்சமும் சட்டை செய்யாமலே பார்த்தான்.

அவளுக்கும் கோபம் கூடியது. அவனை எரிச்சல் படுத்த நினைத்தாள்.

நீங்கள்... ஒரு முட்டாள்... என்றாள் தெளிவாய் உயர்ந்த குரலில்.

இம்முறை அவன் முகம் அதிர்ந்தது.

என்ன சொல்கிறாய்.. நீ?

சொன்னது புரியவில்லை? நீங்கள்... ஒரு முட்டாள் அதுவும்... எங்கு எதைப் பேச வேண்டும் என்பது தெரியாத வடிகட்டிய முட்டாள்...!

அவன் ஸீட்டை விட்டு எழுந்தான். கைகளைக் கட்டியபடி அவள் பக்கம் வந்தான்.

ம்ம்.. ஏன் நிறுத்ததி விட்டாய்? சொல்ல வந்ததைச் சொல்... என்றான் அதிகாரமாய்.

அவளுக்கென்ன பயம்? படபடவென பேச ஆரம்பித்து விட்டாள் உதயரேகா.

அவன் மண்டபத்தில்... பின் தொடர்ந்தது... போட்டோவை கொடுத்து அலட்சியப்படுத்தியது... எல்லாவற்றையும் விளக்கியவள் கடைசியில் அந்தக் கேள்வியையும் கேட்டாள்.

ஆமாம். பிடிக்கவில்லை. என்று சொன்னீர்களே. ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா?

அவன் அலட்சியமாய் தோள்களைக் குலுக்கினான்.

உன்னை... உன் அழகைப் பிடிக்கவில்லை...

அழகா?

அவள் திடுக்கிட அவன் அத்தனை பற்களையும் காட்டினான்.

ம்ம்.. அழகு... எனக்குப் பிடிக்காத விஷயம். ஏதோ தேர்போல எண்ணி தங்களை அலங்கரித்துக் கொண்டு மினுக்குக் காரிகளாய்... தலுக்கி குலுக்கி நடை போட்டுக் கொண்டு... ச்சே.. சே!

அவன் அலுக்க, நான் ஒன்றும் மினுக்குக்காரி இல்லை! என்றாள் அவள் சூடாக.

ஆனால்.. உன்.. அழகில் ஒரு மினுக்குத்தனம் இருக்கிறது. அது எனக்குப் பிடிக்காத விஷயம்! அதைவிட முக்கியமாய் ஒன்று... எனக்கு மனைவியாய் வர இருப்பவளுக்கு என்று ஒரு வரை முறை வைத்திருக்கிறேன். அது உன்னிடம் இல்லை... தெரியமா?

நான் ஒன்று உங்கள் மனைவியாக வேண்டும் என தலையை விரித்துப் போட்டுக் கொண்டு அலையவில்லை... அவள் கேலி செய்ய... அவனும் விடவில்லை.



பிறகு... எதற்கு தரகரிடம் உன் போட்டோவைக் கொடுத்தாய்...? அதுவும் இயென இளித்தபடி..?

அவளும் விடவில்லை. பதிலுக்குக் கொடுத்தாள்.

நான் அப்படிக் கொடுத்தது நல்ல மாப்பிள்ளையாய் ஒருவரைத் தேடச் சொல்லித்தான்...

அவன் இம்முறை கைகளை விரித்தான்.

நான் ஒன்றும் கெட்ட மாப்பிள்ளை இல்லையே...

அவளுக்கு அவனை எப்படியாவது மட்டம் தட்ட வேண்டும் என்ற ஆவேசம் ஆத்திரமாக்கியது.

ஆனால்... நீங்கள் முட்டாள் வடிகட்டிய முட்டாள்..!

இம்முறை அவன் முகம் மாறியது. வாயில் விரல் வைத்தபடி அவளைக் கடுமையாயப் பார்த்தான்.

உஷ்... வார்த்தைகளை அளந்து பேசு. என்னை கோபப்படுத்தி விடாதே...

அவனது கோபம் அவளுக்கு இனித்தது. ஆஹா..! இது தான் நம்மை மட்டம் தட்டி ரஸித்தவனை பழி வாங்க சரியான சந்தர்ப்பம்.!

சந்தேகமில்லை. தெளிவாய் உறுதியாய்ச் சொல்கிறேன். நீங்கள் முட்டாள் தான்...! முட்டாளேதான்...!

உரத்த குரலில் ஏறக்குறைய கத்தவே செய்தாள் அவள். அவனோ கண்களை வேகமாய் உருட்டினான்.

மறுபடியும எச்சரிக்கிறேன். என்னிடம் விளையாடாதே. நான் ரொம்பவும் மோசமாய் நடந்து கொள்ள வேண்டியிருக்கும்..

அவன் அப்படி ஆத்திரப்படுவதை அவள் வெகுவாய் ரஸித்தாள். அட... ஆத்திரம்.. ஆவேசம் கூட இவனுக்கு வருகிறதா? நன்றாக வரட்டும்!

மிஸ்டர், முட்டாளை... முட்டாள் என்று அழைக்காமல் வேறு எப்படி அழைக்க முடியும்...? அதனால் நீங்கள் முட்டாள்தான்! முட்டாளேதான்!

அவள் அழுத்தந்திருத்தமாய்ச் சொல்ல... ஒரு கணம் அவன் வேண்டுமென்றே தன்னைச் சீண்டுகிறாள் என்பதை உணர்ந்த அவன் சட்டென அமைதியானான்.

முகத்தை சாதாரணமாய் வைத்துக் கொண்டு அவளை உற்றுப் பார்த்தான்.

நீ ரொம்பவும் பேசி விட்டாய். இதற்காக நீ மன்னிப்பு கேட்டாக வேண்டும். மரியாதையாக என்னிடம் மன்னிப்பு கேட்டு விடு...

மன்னிப்பா...? நானா? என்றவள் புருவம் உயர்த்தி,

அப்படியொரு வார்த்தையே என் வாழ்க்கை அகராதியில் கிடையாது...

நீ.. மன்னிப்பு மட்டும் கேட்காவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா?

என்ன நடக்கும்?

முதலில்... நீ... எங்கு வேலை பார்க்கிறாய்? அதைச்சொல்லு...

சொன்னால்... என்ன.. என் ஸீட் கிழிந்து விடுமா?

நீ... பயம் இல்லாவிட்டால் சொல்லு....

எனக்கென்ன பயம்? நான் வேலை பார்ப்பது எஸ்.எம். ஸாப்ட்வேர் கம்பெனியில் புரோக்ராம் அனலிஸ்ட் எனது வேலை. உங்களால் என்ன செய்ய முடியும்...?

உன் பேச்சுக்கு, நீ மன்னிப்பு கேட்காததற்கு நான் சரியான தண்டனை தர முடியும்...

இன்னமும் அப்படி வேறு நினைப்பு ஓடுகிறதோ? அவள் ஏளனமாய் கேட்டு கேலியுடன் அவனைப் பார்க்க... அவனோ உறுதியான குரலில் சீறினான்.

உன் ஸீட்டை கிழிக்கிறேன். உன்னை வேலையை விட்டு விரட்டுகிறேன். இது கண்டிப்பாக நடக்கும்...! என்றான்.



## 3

பார், உன் ஸீட்டை கிழித்து விடுகிறேன்... என்று அவன் கத்தி சவால் விட்டதை உதயரேகா பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை. தன்னைப் பிடிக்கவில்லை... எனக் கூறி குமைச்சல் கொடுத்தவனுக்கு சரியான பதிலடி கொடுத்து அவனை ஆத்திரப்படுத்தி விட்டதாகவே நினைத்தாள்.

அதனாலே அதற்கு மேல் அவன் முன் நிற்காமல் தோள்களை அசட்டையாய் குலுக்கிக் கொண்டு விடுவிடுவென வெளியேறி விட்டாள். கண்ணாடிக் கதவுகளை திறந்து அவள் வேகமாய் சாத்தும்போது, உன்னை சும்மா விட மாட்டேன்... என அவன் பெரிதாய் கர்ஜிப்பது காதில் விழுந்தது.



சரிதான்.. அடிபட்ட.... புலி... என சிரிப்புடன் நடையை எட்டிப் போட்டாள். அவளுக்கு ஒரு கணம் மகாபாரதத்தில் தன்னை யாரும் வெல்ல முடியாது என நினைத்த திமிரான மகத நாட்டு மன்னன் ஜராசந்தன் கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

மகாபாரதத்தில் ஜராசந்தனின் கொட்டத்தை அடக்க கண்ணன் திட்டமிட்டான். அதற்காக பீமனை தயார் செய்து அவனுடன் போரிட வைத்தான். பீமனும் ஜராசந்தனும் கடுமையாக மற்போர் செய்யத் தொடங்கினார்கள். பதிமூன்று நாட்கள் தொடர்ந்து போர் நடந்தது.

பதினான்காம் நாள் ஜராசந்தன் தளர்ச்சி அடைந்தான். இதுதான் சமயம் என பீமன் கடுமையாய் போரிட்டு அவன் உடலை இரு பாதியாய் கிழித்து எறிந்தான். ஆனால் அவனுக்கு ஒரே வியப்பு! ஜராசந்தனின் கிழிந்த இரண்டு பாதிகளும் உடனே இணைந்தன. மறுபடியும் உடலாகி, அந்த உடலுக்கு உயிர் வந்து ஜராசந்தன் மறுபடியும் போரிட ஆரம்பித்தான்.

பீமன் திகைத்துப் போக அவனைப் பார்த்தார் கண்ணன். பின் ஜாடையாய் கீழே தரையில் இருந்த புல் ஒன்றை எடுத்தார். அதை இரண்டாக கிழித்து அதன் தலைப் பகுதியையும் கால் பகுதியையும் மாற்றி மாற்றி வைத்தார்.

கண்ணன் செய்ததை குறிப்பால் உணர்ந்து கொண்ட பீமன் அதன்படியே மறுபடியும் போரிட்டு ஜராசந்தனின் உடலை இரண்டாய் கிழித்தான். ஆனால் இம்முறை அத்தோடு விட்டு விடாமல் தலைப் பகுதியையும் கால் பகுதியையும் மாற்றி வைத்து ஓட்டினான்.

பீமன் இப்படிச் செய்ததால் ஜராசந்தனின் உடல் பாதிகள் மறுபடியும் இணைய முடியாமல் போய் அவன் இறந்தும் போனான். பீமன் கண்ணன் உணர்த்தியது மூலம் திமிரான ஜராசந்தனுக்கு சரியான பதிலடி கொடுத்தான்.

அதே போல் திமிரான இந்த கொழுப்பெடுத்த நரேந்திரன் இந்த முட்டாள் வடிகட்டிய முட்டாள் பட்டம் சரியான பதிலடி என நினைத்தாள் உதயரேகா.

ஆனால் மூன்று நாள் கழித்து அலுவலகத்தில் நடந்த அந்த சம்பவம் பதிலடி கொடுத்தது அவளல்ல... அவன் தான்! என்பதை உதயரேகாவிற்கு திகிலாய் உணர்த்தியது.

அன்றும் வழக்கம் போல் அலுவலகத்தில் அவளுக்குரிய வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் வேலை பார்க்கும் எம்.எஸ்.ஸாப்ட்வேர் பல லட்ச ரூபாய் லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கும் மென் பொருள் கம்பெனி. அவளைப் போலவே ஐம்பது பெண்கள் அங்கு புரோகிராமர்களாக வேலை பார்த்து வந்தனர்.

அன்றாடம் நடக்கும் கம்பெனியின் வரவு செலவுகளை புரோகிராம் செய்து கணினியின் சி.டி.யில் பதிவு செய்வதே அவளது வேலை. இதற்காக சி.டிக்களை பத்திரப்படுத்தும் ஸ்டோரேஜ் ரேக் ஒன்றும் அதற்கான லாக் சிஸ்டமும் அவளிடம் இருக்கும்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் அவள் சாவி கொண்டு திறந்து சி.டி.க்களை அந்த லாக் சிஸ்ட அமைப்பில் பத்திரப்படுத்தி விட்டுத்தான் வருவாள். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அந்த சி.டி.க்களை எல்லாம் வரி தணிக்கை செய்வதற்காக ஆடிட்டர் ஆபீஸிற்கு அனுப்ப வேண்டியிருக்கும்.

அப்படித்தான் அன்றும் கம்பெனியின் சீனியர் மேனேஜர் அவளைக் கூப்பிட்டு தணிக்கை செய்ய சி.டி.க்களை எல்லாம் ஆடிட்டர் அலுவலகத்திற்கு கொடுத்துவிட உத்தரவிட்டார். தலையசைப்புடன் வெளிவந்த உதயரேகாவும் தனது ஹாண்ட் பேக்கில் இருந்த சாவியை எடுத்துக்கொண்டு லாக் சிஸ்ட அமைப்பைத் திறந்தாள்.

அவளுக்கு பெரும் அதிர்ச்சி!

உள்ளே... அவள் பாதுகாப்பாய் வைத்திருந்த சி.டி.க்கள் எதுவுமே இல்லை. வெற்றிடமாய் காணாமல் போயிருந்தன சி.டிக்கள்.

உதயரேகா திடுக்கிட்டுத்தான் போய் விட்டாள்.

நேற்று வரை அவள் கண் பார்த்து பாதுகாப்பாய் வைத்திருந்த சி.டி.க்கள்... என்னாயிற்று? எப்படி திடீரென மாயமாக முடியும்?

பதறியவளாய்.. மேஜை, டிராயர், பைல் ஷெல்ப் என ஒன்று விடாமல் அத்தனை இடங்களையும் கிளறினாள். தேடிப் பார்த்தாள்.

ம்ஹூம்....! சி.டி.க்களை காணவில்லை!

எங்கே போயிற்று? யார் எடுத்தார்கள்?

அவள் விசாரித்துப் பார்த்தாள். எல்லோரும் கை விரித்தார்கள். பெரும் ஆபத்தில் சிக்கிக் கொண்ட அவளை பரிதாபமாய் பார்த்தார்கள்.

கடைசியில் மேனேஜர் கூப்பிட்டு, அவை எவ்வளவு முக்கியமான சி.டிக்கள்? உன் பொறுப்பில் இருந்த அவற்றுக்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்? என கோபமாய் சீறியபோது அவள் பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்தாள்.

இரண்டு நாள்... என்கொயரி... சி.டி.க்கள் பற்றிய விசாரணை என அவளிடம் நடத்தப்பட்டு மூன்றாம் நாள், வேலையில் பொறுப்பற்ற தன்மையில் அவள் நடந்து கொண்டதை காரணம் காட்டி அவளை டிஸ்மிஸ் செய்வதாக அறிவித்தார்கள்.

நடப்பதை, நடந்ததைக் கண்டு அதிர்ந்து போனாள் உதயரேகா.



அவளால் கொஞ்சமும் ஜீரணிக்க முடியவில்லை.

அவளாவது வேலையில் கவனக் குறைவாய், பொறுப்பற்ற தன்மையாய் நடப்பதாவது. பின் அந்த சி.டி.க்கள் என்னவாயிற்று?

பத்திரப்படுத்தி பூட்டி வைத்த சி.டி.க்கள் எப்படி காணாமல் போகமுடியும்?

இதில் என்னமோ விஷயமிருக்கிறது.

யாரோ... விஷமத்தனமாய் வேலையை செய்து அவளை மாட்டி வைத்திருக்கிறார்கள்.

யாராக இருக்கக்கூடும்?

சிந்தித்தவளுக்கு, தன் வேலையைக் கிழிப்பதாய் சவால் விட்ட நரேந்திரனின் நினைவு திடும்மென உதித்தது.

ஒருவேளை... இது... அவன் வேலையா...? அவன்தான் சொன்னபடி இப்படிச் செய்து விட்டானா?

அப்படி நினைத்துப் பார்த்தவள் மறுகணமே தலையை வேகமாய் வெட்டினாள்.

ச்சீ... அப்படி இருக்காது... எங்கோ இருக்கிற அவன் எப்படி அவள் அலுவலகத்திற்கு வரமுடியும்? வந்து அப்படி அந்த சி.டி.க்களை களவாடுவதுதான் சாத்தியமா?

அவள் அப்படி நினைத்துக் கொண்டிருக்க... மறுநாள் வேலை போன அதிர்ச்சியில் சோர்வாய் அவள் சாலை ஓரமாய் நடந்து கொண்டிருக்கும்போது சரக்கென பக்கத்தில் வந்து கிறீச்சிட்டது அந்த விலையுயர்ந்த பென்ஸ் கார்.

யார்.... இது... இப்படி மோதுவது போல் நிறுத்துவது? என அவள் கோபமாய்த் திரும்பிப் பார்க்க...

உள்ளிருந்து சூட்கோட்டில் கம்பீரமாய் இறங்கினான் அவன்.

என்ன... மகாராணிக்கு வேலை போயிற்றா?

கிண்டலான அவன் குரல் இடிபோல் அவளுள் இறங்கியது.

கடவுளே! அப்படியானால்... அது இவனுடைய வேலை தானா?

அவள் அதிர்ந்து போய்ப் பார்க்க... கடகடவென சிரித்தான் அவன்.

என்ன பார்க்கிறாய்? அது... என்னுடைய திருவிளையாடல்தான்! சொன்னபடியே உன் சட்டை கிழித்து விட்டேன்...! என்றான் கொக்கரிப்பாய்.

மறுபடியும் அவன் ஆணவச் சிரிப்பு சிரிக்க அவவளை எரித்து விடுவது போல் பார்த்தாள் அவள்.

மிஸ்டர்... உண்மையாக... அது.. உன்... வேலைதானா? நீயா அப்படிச் செய்தாய்?

அவள் நம்ப முடியாதவளாய் கேட்டு அவனையே உற்றுப் பார்த்தாள்.

இன்னும் சந்தேகமா? அந்த முக்கியமான சி.டி.க்களை மாய மந்திரம் போட்டு மறை வைத்தது நான்தான். அவை என்னிடம் பத்திரமாய் இருக்கின்றன. பார்க்கிறாயா..? என்றபடி காருக்குள் கை விட்டு அவைகளை எடுத்தான்.

அவள் முன் கைகளால் தூக்கிக் காட்டினான். பார்த்தாயா..? ஒரே நாளில் உன் தலையெழுத்தை மாற்றி விட்டேன்! கேவலம் ஆயிரம் ரூபாய் பணத்திற்காக... உன் அலுவலக பியூன் செய் கைங்கர்யம்.. இது...

அவன் விவரிக்க.. விவரிக்க... அவளுக்கு எல்லாம் புரிந்தது. அவளது அலுவலக பியூன் முனுசாமியிடம் அவள் அடிக்கடி சாவி கொடுத்து சி.டி.க்களை சில சமயங்கள் எடுத்து வரச் சொல்வாள்.

அப்படியானால்...?

பணத்திற்கு ஆசைப்பட்டு பியூன் முனுசாமி செய்த காரியம்!

அதைக் கொஞ்சமும் அறியாமல் கவனக் குறைவாய் இருந்திருக்கிறாளே!

அவளுக்கு அதைவிட நயவஞ்சகமாய் இப்படி சூழ்ச்சி செய்த அவன் மேல் கோபம் எகிறிற்று.

என்ன... ஒரு குறுக்குப் புத்தி! அவளைப் பழி வாங்க இப்படி வெறியாய் அலைந்திருக்கிறானே!

அவள் திகைத்து நிற்பதை ரொம்பவும் ரசித்துப் பார்த்தபடி ஓரிர மறை அவளையே சுற்றி வந்தான் நரேந்திரன்.

என்ன.. மகாராணி... பேச்சையே காணும்? பெரிதாய்... சவால் ஏல்லாம் விட்டீர்களே....?

அவன் சொல்லியபடி வெடிச் சிரிப்பு சிரிக்க... திரும்பி அவனை கடுமையாய் முறைத்தாள் அவள்.

அவன் சிரிப்பு மாறாமல் தொடர்ந்தான்.

இதோ... பார் இப்போதும் ஒன்றும் கெட்டுப் போவில்லை. நான் சொன்ன மன்னிப்பு விஷயத்தை கேட்டு சரணாகதி அடைந்தால் போதும். பாவம் நீ.. பிழைத்து விட்டுப் போகட்டும்... என விட்டு விடுவேன்... என்ன சொல்கிறாய்?



அவள் சீறும் புலியாய் நிமிர்ந்தாள்.

மன்னிப்பா... நானா? அதுவும்.. உங்களிடமா? அது... இந்த ஜென்மத்தில்... இல்லை!

திடமாய் அவள் பேசியதைக் கேட்டு அவனது முகம் சிவக்க ஆரம்பித்தது.

சரிதான்... இன்னும்... திமிர் அடங்கவில்லை...

திமிர்... எனக்கா... உங்களுக்கா?

உனக்குத்தான்...

குறுக்கு வழியில் கோணல் புத்தித் தனமாய் எனது வேலையை பறித்தது நீங்கள்தானே? அது.. எவ்வளவு.. பெரிய சூழ்ச்சி?

ம்ஹூம்... அது.. சூழ்ச்சி இல்லை.., ராஜதந்திரம்..! ம்ம்.. உன்... பெயர்.. என்ன... ம்..ம்.. உதயரேகாவா? இதோ பார் ரேகா, என்னோட வீணாக மோதாதே. அப்புறம்... நான்...

அவள் அலட்சியமாய் தோள்களைக் குலுக்கினாள்.

ம்ஹூம்..! மோதுவது.. வேலை வெட்டியில்லாமல் என்னுடன் வம்பிழுத்து சண்டையிடுவது.. நீ.. நீங்கள்தான்..!

அவன் முறைப்பைக் கூட்டினான்.

இது போல் திமிராய் பேசி... மேலும் என் எரிச்சலை அதிகப்படுத்தாதே... பின் என்ன நடக்கும் தெரியுமா?

என்ன நடக்கும்?

நீ... கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்...

அவன் புலியாய் உறும.. அவள் கண்களை இன்னும் நன்றாய விரித்து அவனை அதிசயமாய்ப் பார்த்தாள்.

ஓ... அப்படி.... ஒன்றுகூட இருக்கிறதா?

இந்தக் கேலி... கிண்டல் எல்லாம் என்னிடம் வேண்டாம் நான்... கடுமையானவன்.

அவன் சிலுப்ப பதிலுக்கு அவளும் சிலிர்த்தாள்.

நானும் கடுமையானவள்தான்!

அவன் இப்போது சுட்டு விரலை உயர்த்தி அவளை நோக்கி நீட்டினான்.

நான் உன்னை எச்சரிக்கிறேன்...

அவளும் அதே போல் செய்தாள்.

நானும் உங்களை எச்சரிக்கிறேன்...

இனி... நீ... உன் தவறுகளுக்கு மன்னிப்பு மட்டும் கேட்டால் போதாது. வேறு ஒன்றையும் நீ செய்ய வேண்டும் அப்போதுதான் உன்னை மன்னிப்பேன்.

அவள் பேசாமல் அவன் என்னவும் சொல்லிவிட்டுப் போகட்டும் என்ற நினைப்பில் உதட்டைக் கடித்தபடி இருந்தாள்.

விடுவிடுவென குனிந்தபடி நடக்க ஆரம்பித்தாள்.

அவள் போவதையே குறும்புப் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவன் மனதில் இன்னொரு திட்டம். விபரீதமாய் உருவாக ஆரம்பித்தது.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் உதயரேகாவிற்கு சோதனையாய்த்தான் இருந்தது. அவளும் நாலைந்து கம்பெனிகளில் ஏறி இறங்கி விட்டாள்.

ஒன்று வேலை.. இல்லை.. என்றார்கள். இல்லையெனில், உனக்கு... எதும் பிரச்சினைகள், எதிரிகள் உண்டா....? என்றார்கள்.

அவள் புரியாமல் விழிக்க... விவரித்தார்கள்.

உன்னை இன்டர்வியூ செய்து விட்டு நீ போன அரைமணி நேரத்தில் தொலைபேசி மிரட்டல் வருகிறது உனக்கு வேலை கொடுக்கக்கூடாது. கொடுத்தால் வீண் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும்...என்று...

நீங்கள் மிரட்டல்களுக்கு பயப்படுகிறீர்களா?

நாங்கள் பயப்படவில்லை, ஆனால்... எங்களுக்கு இது போன்ற பிரச்சினைகள், தொல்லைகள் தேவையில்லை நீ வேறு இடம் பார்க்கலாம்.. எல்லோரும் கிளிப்பிள்ளையாய் பதில் சொல்லி அவள் பேச்சை நிராகரித்தனர்.



## 4

உதயரேகா திகைத்துதான் போனாள்

அவள் வேலை கேட்டு சென்ற இடங்களில் எல்லாம் இன்டர்வியூ நடத்தப்பட்டு அப்பாயின்மெண்ட் ஆர்டர் கொடுக்கும் அளவுக்கு நெருங்கும் சமயத்தில் சட்டென்று தடைபெற்று நின்றது.

ஏதேதோ... காரணங்களைச் சொல்லி, ஸாரி... வேலை இல்லை... என முகத்திலடித்தாற்போல் சொன்னார்கள்.



என்ன காரணம்? எதற்காக... இன்டர்வியூவில் தேர்வு பெற்றதாய் எல்லாம் சொல்லிவிட்டு கடைசியில் இல்லை என மறுக்கிறீர்கள்.. என கேட்டும் பார்த்தாள்.

ம்ஹூம்! யாரும் பதில் சொல்லக் காணும், ஸாரி.. நீ... போகலாம்.. என்பதற்கு மேல் ஒரு வார்த்தை பேச விருப்பமில்லாதவர்களாய் முகத்தை திருப்பிக் கொண்டனர்.

உதயரேகா இப்படி தேர்வு பெற்றதாய் சொல்லி கடைசியில் இல்லை என கை விரித்த மென்பொருள் கம்பெனி ஒன்றின் நிர்வாகியை கெஞ்சி காரணத்தைக் கேட்டாள்.

வயதான அவர் உதயரேகாவின் கெஞ்சலைப் பார்த்து மனமிரங்கி அந்த அதிர்ச்சியான விஷயத்தைச் சொன்னபோது அவள் ஸ்தம்பிக்கத்தான் செய்தாள்.

அவள் வேலைக்குத் தேர்வு செய்து மறுநாள் அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் கொடுப்பதாகத்தான் வைத்திருந்தார்களாம். ஆனால் மறுநாள் வந்த ஈமெயில்களின் விபரம் அவர்களின் முடிவை மாற்றி விட்டதாம்.

ஈமெயில்களா... என்ன சொல்கிறீர்கள்?

உதயரேகா திகைக்க விளக்கினார் அவர்.

அதானம்மா... கணினி மூலம் வரும் கடிதங்கள். அவை ஒன்று இரண்டல்ல... சுமார் நூறு இ.மெயில்கள் வெவ்வேறு முகவரியுடன் எல்லாமே உன்னைப் பற்றியதுதான்....

என்ன என்னைப் பற்றியா?

ஆமாம்... நீ.. ஒழுக்கம் இல்லாதவளாம். ஒழுங்காக வேலை பார்க்க மாட்டாயாம். உன்னை வேலைக்கு வைத்தால்.... வேலையில் கவனம் செலுத்தாமல் பாய் பிரண்ட் அது இதுவென எப்போதும் சுற்றிக் கொண்டு இருப்பாயாம். என உன்னைப் பற்றி கண்டபடி புகார் தெரிவித்து டுமெயில்கள் குவிந்து விட. எங்களது எம்.டி.எதற்கு வம்பு என உனக்கு வேலை கொடுப்பதை கான்சல் செய்யச் சொல்லி விட்டார். இதுதானம்மா நடந்தது......

அந்த நிரவ;வாகி விளக்க உதயரேகாவிற்கு புரிந்தது. எல்லோரும் வேலை தருவதாய் சொலலிவிட்டு கடைசியில் கை விரித்ததன் காரணம் தெரிந்தது.

ஆக யாரோ... மொட்டைக் கடிதம் போடுவது போல் அவள் வேலை தேடும் கம்பேனிகளுக்கெல்லாம் அவளைப் பற்றி தவறான தகவல்களை ஈமெயில் மூலம் அனுப்பியிருக்கிறார்கள்.

அந்தக் கம்பெனிகளும் அவற்றைக் கண்டு எதற்கு நாம் ரிஸ்க் எடுக்க வேண்டும் என்றுறு செலக்ட் ஆன அவளை நிராகரித்திருக்கிறது.

அப்படி அவளைக் குறி வைத்து மொட்டைக் கடிதாசு போல் அபாண்டமாய் ஈ மெயில்கள் அனுப்பியது யார்?

யாராக இருக்கும்?

தனது அழகான தலையைச் சாய்த்து உதயரேகா ரொம்பவும் குழம்ப அவளது கேள்விக்கான விடை மறுநாள் மாலை கிடைத்தது.

மாலை அவள் வழக்கமாய் செல்லும் லைப்ரரி பக்கம் அவனது கார்!

அவள் பக்கத்தில் வந்ததும் ஸ்டைலாய் கார் கதவுகளை திறந்தபடி இறங்கினான்.

வேறு யார்? நரேந்திரன்தான்!

புருவம் உயர்த்தி கோணல் பார்வையும் குறும்புச் சிரிப்புமாய் நரேந்திரன் இறங்குவதைப் பார்த்ததுமே அவளுக்குப் புரிந்து விட்டது.

ஈ மெயில் மொட்டை கதாநாயகன் நரேந்திரன்தான் என்று!

பாவி! இவனது வேலைதானா அது?

அவள் கண்கள் விரித்து திடுக்கிட கெக்கலிப்பு பார்வையுடன் சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

என்ன மகாராணி, உங்கள் வேலை தேடும் படலம் என்னவாயிற்று? எல்லோரும் கதவை இழுத்து மூடி துரத்தி அடித்திருப்பார்களே...?

அவள் பதில் சொல்லாமல் முறைக்க, சிரிப்பை அதிகப் படுத்தியவன், என்ன அப்படிப் பார்க்கிறாய்? இதுவும் வழக்கம் போல் ஐயாவின் திருவிளையாடல்தான்! என்றான் ஆணவம் பொங்க.

அவளுக்கு அவன் சொன்ன அதிர்ச்சியை விட திகைப்பே அதிகரித்தது.

ஏதோ... விளையாட்டுப் போல் மோத ஆரம்பித்து சண்டை போடுகிறான், சவால் விடுகிறான் என்று நினைத்தால்... இவன் மிக சீரியஸாய் நம்மைப் பழி வாங்குவதையே முழு நேரத் தொழில் போல் நினைத்து அலைய ஆரம்பித்து விட்டானே!

மிஸ்டர், உங்களுக்கு வேலை வேலையே கிடையாதா?

இல்லை.. அல்லிராணி... இதுதான் எனது வேலை...!

என்ன நினைத்துக் கொண்டு இப்படியெல்லாம் செய்கிறீர்கள்.? ம்ம்...?



அவள் கோபமாய் கண்களை உருட்ட அசால்ட்டாய் சிரித்தான் அவன்.

வேறென்ன...? உன்னைப் பழி வாங்கத்தான்!

அதான் எதற்கு...?

அவள் திகைத்துக் கேட்டு அவனையே உறுத்துப் பார்க்க... கைகளைத் தட்டினான் அவன்.

அட... அதற்குள் மறந்து விட்டாயா? எவ்வளவு திமிராகப் பேசினாய்? உன்னை ஒன்றும் செய்து விட முடியாது, என என்னவெல்லாம் சொல்லி என்னிடம் சவால் விட்டாய்? ஒரு ஆறடி நீள உடம்பை அப்படியும் இப்படியும் பெரிய அழகி போல் மினுக்கி வைத்துக் கொண்டு என்னிடம் மன்னிப்புக் கேட்க மறுத்து எவ்வளவு அடம் பிடித்தாய்.

அவன் அடுக்கிக் கொண்டே போக அவள் ஸ்தம்பிக்கத்தான் செய்தாள். அவன் சொல்வதைப் பார்த்தால்.. அவன் விளையாட்டாய் அல்ல. மிக சீரியஸாய் ஒரு எதிரியைப் பார்ப்பது போல் ஒரு எதிரியை பழி வாங்குவது போல்... அவளை நினைத்து அல்லவா காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறான்.

அவன்தான் இப்படி ஏதோ ஜென்ம விரோதி போல் நினைக்கிறான்.

ஆனால்.. அவள்.. அவள்.. அப்படி நினைக்கவில்லையே...!

ஏதோ... சீண்டலாய் விளையாடுகிறான். திமிராய் பேசுகிறான்.. என பதிலுக்கு பதில் கொடுத்தாள். அவ்வளவே...!

அதை ஏதோ அவனுக்கு பெரிய அவமானம் நேர்ந்து விட்டதைப் போல் அல்லவா வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வருகிறான்!

ஒருவேளை... வேறு வேலை வெட்டி எதுவுமில்லாமல் அலையும் பணக்கார லூசாய் இருப்பானோ?

அதனால்தான் அவள் சீண்டியதும் அவளே எதிரி என குறி வைத்து அவளைப் பின் தொடர்ந்து அவளது வேலைக்கு.. அவளது வேலை தேடும் முயற்சிகளுக்கு... வேட்டு வைத்துக் கொண்டு...?

ஒரு கணம் தீவிரமாய் யோசித்தவள், இப்போது இவனது பிரச்சினை என்ன? சவால் விட்ட அவள் சரணாகதி அடைய வேண்டும். இவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவ்வளவுதானே?

இது போன்ற பணக்கார லூசுகளிடம் மோதுவதை விட பேசாமல் சரணாகதி அடைந்து கௌரவம் பார்க்காமல் மன்னிப்பு கேட்டு விடுவது நல்லதுதானே?. அவள் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடுமே!

யோசித்தவள் பொறி தட்டியவள் போல் உணர்வுக்கு வந்து தனது முகபாவனையை மாற்றி குரலையும் மென்மையாக்கினாள்.

இதோ... பாருங்கள்... சார்... நீங்கள் நினைப்பது போல் நான் திமிர் பிடித்தவளோ ஆணவக்காரியோ... அல்ல. அன்று ஏதோ ஒரு கோபத்தில் அப்படியெல்லாம் பேசிவிட்டேன். உளறிவிட்டேன். என நினைத்துக் கொள்ளுங்கள். அதற்காக உங்களிடம் எனது மிகத் தாழ்மையான மன்னிப்பையும் கேட்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே நீங்கள்...

போலியாய் பவ்யம் காட்டி அவள் பாட்டுக்கு சொல்லிக்கொண்டு போக... அதற்கு மேல் கேட்கப் பிடிக்காதவன் போல் கைகளை வேகமாய் உயர்த்தினான் அவன்.

நிறுத்...து.. என்றான் அதே அதிகார கர்ஜனை குரலில் அவள் அதிரும்படி.

உன் மன்னிப்பு... யாருக்கு வேண்டும்? அதை போய் குப்பையில போடு! நான் ஒன்றும் வேறு வேலை வெட்டியில்லாமல் உன்னைச் சுற்றி வந்து சீண்டவில்லை. உன்னைப் போன்ற திமிரான பெண்களை அடக்கி வழிக்கு கொண்டு வருவது எனது கடமை. அதனால் உன்னை இன்னும் விரட்டுவேன், இன்றும் நிறைய துன்பங்கள் கொடுப்பேன். சொல்லப் போனால் உன்னை நிம்மதியாய் இருக்கவே விடமாட்டேன்... நீ... உலகத்தில் எந்த மூலைக்கு ஓடினாலும் உன்னை விடாது துரத்துவேன்....

அவன் பாட்டுக்கு திரும்பவும் பேசிக்கொண்டே போக எரிச்சலான உதயரேகா இது திருந்தாத திமிர் பிடித்த கேஸ், இவனையெல்லாம் திருத்தவே முடியாது. இவனிடம் இனி பேசி பிரயோஜனமில்லை... என்ற சலிப்புடன் டக்கென திரும்பினாள். விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.

ஹேய்.. என்ன.. என் பேச்சை அலட்சியம் செய்து விட்டு நடக்கிறாயா? பார்... இன்னும் என்னவெல்லாம் செய்கிறேன்.. பார்....

அவள் விருட்டென அகலும் போது தூரமாய் அவன் கர்ஜித்து கத்துவது அவள் காதுகளில் விழுந்தது.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் என்ன செய்ய? ஊசுத்தனமாய் நடக்கும இவனிடமிருந்து எப்படி தப்பிப்பது..? என்ற சிந்தனையுடனே கழித்தாள்.

தந்தையிடம் தாயிடம் இந்த விஷயத்தைச் சொல்லலாமா.. என்று நினைத்தவள் வீணாகச் சொல்லி அவர்களை கலவரப்படுத்டத வேண்டாம் என்று முடிவெடுத்து சொல்வதைத் தவிர்த்தாள்.



மூன்று நாள் கழித்து ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் ஒன்றிற்கு பொருட்கள் வாங்க அவள் சென்று விட்டு வந்த போதும் நரேந்திரனின் பளபள கார் தன்னை பின் தொடர்வதை கவனித்தாள்.

சரிதான், இதே வேலையாகத்தான் அலைகிறான். இவனிடமிருந்து இவன் பார்வையில் இருந்து எப்படியாவது விலகியாக வேண்டும்.

எப்படி விலக..? எப்படித் தப்பிக்க?

மேலும் ஐந்து நாட்கள் யோசனையிலே சென்றது.

ஆறாம் நாள் தற்செயலாய் கல்லூரித் தோழி புவனாவிடம் பேசும்போது.... தான் வேலை தேடும் விவரத்தைச் சொன்னாள்.

புவனாவும், தென்காசிப் பக்கம் பொதிகை மலை அடிவாரமா; குடகு மலை எஸ்டேட் என்று ஒன்று இருக்கிறது. அந்த தேயிலை எஸ்டேட்டை பெண்மணி ஒருவர் தான் நிர்வகித்து வருகிறார். அவருக்கு உதவியாய் எஸ்டேட்டை கவனிக்க பெண் உதவியாளர் ஒன்று தேவையாம். உனக்கு சம்மதமா? அந்த வேலைக்கு போகிறாயா? நான் ஏற்பாடு செய்கிறேன்! எனவும் உடனே கொஞ்சமும் யோசியாமல், சம்மதம்... என்று சொன்னாள் உதயரேகா.



## 5

ஒரு கணம் உதயரேகாவிற்கு தாந் நரேந்திரனுக்கு அஞ்சி, அவனுக்கு பயந்து இப்படியெல்லாம் வெளியூரில் போய் வேலை பார்க்க ஓடி ஒளிகிறோமோ... என்று கூடத்தோன்றியது.

அவளுக்கு மகாபாரதத்திலி; கிருபாச்சாரியரிடம், என் கடைசி மூச்சு வரை போராடுவேன்... என்று சொன்ன துரியோதனின் நிலைதான் ஞாபகம் வந்தது. பாரதப் போரின் பதினெட்டாம் நாளன்று துரியோதனனுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

சல்லியனை தருமன் கொல்கிறான். நண்பன் சகுனியை சகாதேவன் கொல்கிறான். அவனது தம்பியர் அத்தனை பேரையும் பீமன் கொல்கிறான். போர்க்களத்தில் இதைக் கண்டு மயங்கி விழுந்த துரியோதனனை அவனது குதிரை சுமந்து சென்றது.

வெகு தொலைவு சென்ற அது ஒரு பொய்கையின் அருகே நின்றது. மயக்கம் தெளிந்து துரியோதனன் அந்தப் பொய்கையைப் பார்த்தான். உடல் சூட்டை தணிப்பதற்காக அதற்குள் மூழ்கினான். தண்ணீருக்கு உள்ளேயே அப்படியே இருந்தான்.

பாண்டவர்களுக்கு அவன் இருப்பிடம் தெரிந்தது. கண்ணனுடன் அங்கு வந்தார்கள். துரியோதனா, கோழையைப் போல் ஏன் ஒளிந்திருக்கிறாய். வெளியே வா! என பீமன் கேலியாய் அழைத்ததும் கோபாவேசமாய், நான் ஓடி ஒளிகிற கோழை இல்லை. போரிடத் தயார் என்று சொல்லியபடியே வெளியே வந்தான். அதுபோல் சுத்த வீரனாய் இருந்தும் சூழ்நிலைக்காக குளத்தில் பதுங்கிய துரியோதனனைப் போல் சூழ்நிலைக்காக நரேந்திரன் கண்களில் இருந்து தப்பித்து எஸ்டேட் வேலையில் சேர்ந்து விட திட்டமிட்டாள் உதயரேகா.

மேலும் தோழி புவனாவிற்கு ரொம்பவும் வேண்டியவர்கள் சாந்தினி அம்மாள். அந்த குடகுமலை எஸ்டேட் என்று சொல்லப்படும் பெரிய தேயிலைத் தோட்டத்தின் உரிமையாளர். பரம்பரை பரம்பரையான பணக்காரக் குடும்பம்.

கணவரின் மறைவுக்குப் பின் சாந்தினி அம்மாளே மேனேஜர்கள், பணியாளர்கள் உதவியுடன் டீ தயாரிப்புத் தொழிலை கவனித்து வந்தாள். உற்பத்தியாகும் மொத்த டீத்தூள்களும் ஏற்றுமதி நிறுவனம் ஒன்றுக்கு காண்டிராக்ட் முறையில் அனுப்பப்பட்டு வருவதால் பெரிதாய் கணக்கு வழக்குகள் இல்லை.

எஸ்டேட் பராமரிப்பு, தொழிலாளர்கள் சம்பளம், பிரச்சினை என சிறு விஷயங்களே கவனித்துச் செய்ய வேண்டியிருந்தது. சாந்தினி அம்மாளுக்கு நோயால் ரத்தக் கொதிப்பும் சர்க்கரையும் வந்து சேர்ந்துவிட தினம் மருந்த மாத்திரைகள் என வேளை தவறாமல் சாப்பிட்டு உடம்பையும் கவனிக்க வேண்டிய சூழ்நிலை.

அதனாலே சரியான பெண் உதவியாளர் தேவை என தனக்குத் தெரிந்தவர்களிடம் சொலலி வைக்க. தோழி புவனா அவ்விஷயத்தை கேள்விப்பட்டு வேலை தேடிக் கொண்டிருந்த உதயரேகாவிடம் விபரம் தெரிவிக்க... உதயரேகாவும் குஷியாகி விட்டாள்.

சென்னையை விட்டு ஆயிரம் மைல்கள் தூரத்தில் உள்ள குடகுமலை எஸ்டேட்டில் கண்காணா இடத்தில் வேலை என்றதும் ரொம்பவும் உற்சாகமாகி விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

வேலைை பிடிக்கிறதோ... இல்லையோ.. முதலில் ஓரகத்தனமாய் தன்னையே சுற்றி பழி வாங்கத் துடிக்கும் இந்த பணக்காரக் கோமாளி நரேந்திரனிடம் இருந்து தப்பித்து விடலாமே!

அதே எண்ணத்தில் அப்பா அம்மாவிடம் பிடிவாதம் பிடித்து அனுமதியும் வாங்கினாள். இருவருக்கும் அவளைப் பிரிய மனமில்லைதான். என்னவோம்மா... நீ ஆசைப்படுகிறாய்... என அனுப்பி வைக்கிறேன். அங்கு பத்திரமாய் உன்னையும் உடம்பையும் பார்த்துக் கொள்ளம்மா... என எச்சரிக்கையோடு அனுப்பி வைத்தார் தந்தை.

அவளுக்கு பிரிந்து போய் தவிப்பதில் வருத்தம்தான்! ஆனால் தற்போதைய சூழ்நிலையில், தினம் தனக்கு ஆபத்துகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நரேந்தினிடமிருந்து தப்பிப்பதற்காகவாவது அவள் வேறு இடத்தில் இருப்பது நல்லது.

அந்த நினைப்புடனே ஊரை விட்டு எல்லோரிடமும் விடைபெற்று பிரிய மனமில்லாமல் கிளம்பினாள். தோழி புவனா ஊர்ப் பெரியவர் மூலம் உதயரேகா பற்றி சாந்தினி அம்மாளுக்கு முன்பே தெரிவித்திருந்தபடியால் எஸ்டேட் உதவியாளர் வேலையும் அவளுக்கு உடனே கிடைத்தது.

சாந்தினி அம்மாளுக்கும் இன்முகமும் அழகுமாய் புன்னகை ததும்ப இருக்கும் உதயரேகாவை பார்த்த உடனேயே பிடித்துப் போயிற்று. அதனாலே உதவியாளருக்கென முன்புற அவுட் ஹவுஸ் ஒன்றை ரெடி பண்ணி வைத்திருந்தவள், அது வேண்டாம் என சொல்லி விட்டு, ரேகாவை தன்னுடன் தன் பங்களாவிலே தங்கிக் கொள்ளும்படி அன்புக் கட்டளையிட்டு விட்டாள்.

சாந்தினி அம்மாளும் தனியாக அந்த பெரிய பங்களாவில் இருக்கவில்லை. உற்றார் உறவினர் என ஒரு பெரிய குடும்பப் பட்டாளத்தை அரவணைத்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

பெங்களூர் அத்தை ரமாமணி, அவள் வயிற்றுப் பேத்தி சுதாராணி, சித்தி சங்கர வடிவு, கௌரிப் பாட்டி, வாண்டுகள் பப்பி சேகர், பம்பளிமாஸ் பூமா என ஒரு பெரிய உறவினர் கூட்டத்துடன் ஜோதியோடு ஜோதி கலப்பது போல் உதயரேகாவும் கலந்து விட்டாள்.

எல்லோருக்கும் ஒரே வாரத்தில் அவளையும் பிடித்துப் போயிற்று. கலகலவென சிரிக்கும் இன்முகமாய் அன்பொழுகப் பேசி நடமாடும் உதயரேகா சீக்கிரமாகவே அவர்கள் மனதிலும் இடம் பிடித்து விட்டாள். அவள் வேளை பார்க்கும் பணியாள் போல் நடத்தாமல் தங்கள் குடும்ப உறுப்பினர் போலவே நினைத்து அப்படியே பாவிக்கவும் தொடங்கினர்.

உதயரேகாவிற்கும் சாந்தினி அம்மாளையும் குடும்பத்தாரையும் மட்டுமல்ல, வேலையையும் ரொம்பவும் பிடித்துப் போயிற்று. காலை மதிய நேரங்களில் எஸ்டேட்டின் வரவு செலவு கணக்குகளை எஸ்டேட்ட அலுவலகத்தில் சென்று கவனிப்பாள். மாலை ஆனால் சாந்தினி அம்மாளை கவனிப்பது....அவர்களுக்கு தேவைப்படும் மருந்து மாத்திரைகளை கொடுத்து பணிவிடை செய்வது என நேரம் ஓடிடும். அந்த உறவினர் படை சூழ்ந்த குடும்பச்சூழ்நிலையில் எல்லோரிடமும் சிரிக்கச் சிரிக்கப் பேசுவது, வாண்டுகளுடன் நேரம் போவது தெரியாமல் விளையாடுவது என எல்லாமே

உதயரேகாவிற்கு புதுவித அனுபவமாய், மனதிற்கு ரொம்பவும் மிகழ்ச்சி தருவதாய் இருந்தது.

புது.. வேலை எப்படி இருக்கிறது? நீ எப்படி இருக்கிறாய்...? என்றெல்லாம் கவலைப்பட்டு வினவிய தாய் தந்தையருக்கு உடனடியாய் லெட்டர் மூலம் தான் மிகுந்த சந்தோஷமாய் இருப்பதாய் தெரிவித்தாள்.

இப்படியாக ஒரு மாதம் குதூகலமும் சந்தோஷமுமாய்ச் சென்ற அவளது மகிழ்ச்சியான நிலைக்கு சோதனை சாந்தினி அம்மாளின் மகன் உருவில் அபாயமாய் வந்தது.

சாந்தினி அம்மாளுக்கு ஒனரு மகன் இருப்பதாகவும் அவன் எஸ்டேட் வேலைகளை பார்க்கப் பிடிக்காமல் சென்னையில் சொந்தமாக பிஸினஸ் செய்து வருவதாகம் கேள்விப்பட்டிருந்தாள்.

ஒரு மாத விடுமுறைக்காகவும், தாயாரைப் பார்ப்பதற்காகவும் அவன் மறுநாள் எஸ்டேட் திரும்புகிறான் என்பதைக் கேள்விப்பட்டு அவனைப் பார்க்க ஆவலாய்த்தான் இருந்தாள்.

ஆனால்... மறுநாள் லெதர் சூட்கேஸுடன் கையுமாய் பந்தாவாய் வந்து இறங்கிய சாந்தினி அம்மாளின் மகனைப் பார்த்ததும் அவள் இதயமே ஒரு கணம் துடிக்க மறந்து... ஸ்தம்பித்தது.

காரணம் மகனாய் வவந்து இறங்கியது சாட்சாத்.. அந்த நரேந்திரன்தான்!

## 6

என் மகன் நரேன் இவன்தான்.... என சாந்தினியம்மாள் நரேந்திரனை கை காட்டியபோது உதயரேகா அதிர்ந்துதான் போய்விட்டாள்!

நரேந்திரனை அந்த இடத்தில் அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதிலும் சாந்தினி அம்மாளின் வாரிசாக அவன் இப்போது அவள் கற்பனையில் எதிர்பாராதது.

யாருக்குப் பயந்து ஊரை விட்டு ஓடி ஒளிய நினைத்தாளோ... அவன்தான் இந்த வீட்டின் சொந்தக்காரன்.. எஜமான்!... என்ன அநியாயம் இது!

நம்ப முடியாமல் கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

அதே... சுருள்முடி, பரந்த நெற்றி, முறுக்கிய மீசை, கூரான கண்கள், சந்தேகமில்லை... அது அவன் நரேந்திரன்தான் அவனுக்கும் அதிர்ச்சிதான்!



அவள் பேசாமல் இருப்பதைப் பார்த்து, நீ பேச வந்ததைப் பேசலாம்.. என்றான் அதே உயர்ந்த தொனியில்.

உதயரேக வறண்டிருந்த உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள்.

அது... அது... உங்களிடம் நான்... மன்னிப்பு... கேட்க வேண்டும்... என்றாள் படபடவென வார்த்தைகளைக் கொட்டியவாறு.

மன்னிப்பா...? என்றபடி அவன் எழுந்து கொண்டான்.

அவன் முகத்தில் ஆச்சரியம் படர்ந்தது. அப்படியே குனிந்து அவளை உறுத்துப் பார்த்தான். எதற்கு மன்னிப்பு? என்றான் ஒன்றுமே தெரியாதவன் போல்.

அவன் வேண்டுமென்றே கேட்டாலும் அவள் விளக்கித்தான் ஆக வேண்டும்.

மறந்து விட்டீர்களா? எனது பேச்சால் நீங்கள் கோபமடைந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நீங்கள் சொன்னது நான்.... கேட்க மாட்டேன் எனறு பிடிவாதம் பிடித்தது.

அவள் சொல்லிவிட்டு நிறுத்த அவன் தலையை வேகமாய் அசைத்தான். புரிகிறது. அப்போதெல்லாம் வராத ஞானோதயம் இப்போது திடீரென வந்து விட்டதா...? என்றான் குத்தலாய்.

அவனின் இந்த குத்தலுக்கு மற்ற நேரமென்றால் பதிலடிகொடுத்திருப்பாள். ஆனால் இப்போது வெள்ளைக் கொடியை பிடித்தபடி அல்லவா வந்திருக்கிறாள்?

அவனே ஆச்சரியப்படும்படி அவளும் அமைதியாக தலையசைத்தாள்.

நீங்கள் சொல்வது சரி. எனக்கு.இப்போதுதான் அந்த ஞானோதயம் வந்திருக்கிறது.. என்றாள் அவன் பாணியிலே.

அவன் மட்டும் சும்மாவா? குனிந்தவளை குட்டாமல் விடுவானா?

மர மண்டை... என்றான் அமைதியாக.

அவள் திடுக்கிட, அவளை அமைதியாக் பார்த்தவன், இப்படி டியூப் லைட் போல் லேட்டாக உணர்பவர்களை மரமண்டை என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்... என்றான்.

ஏசி.. விட்டு... அதற்கு விளக்கம் வேறு! வேறு வழியில்லை. தலையை நன்றாக கொடுத்தாயிற்று. அவன் எத்தனை குட்டுகள் குட்டினாலும் வாங்கித்தான் ஆக வேண்டும்!

அவள் அவன் முகத்தையே கூர்ந்து பார்க்க நரேந்திரன் ஏதோ யோசிப்பது போல் முகத்தை வைத்துக்கொண்டிருந்தவன், அவளை நோக்கித் திரும்பினான்.

நீ மன்னிப்பு வேண்டுமானால் கேட்கலாம், ஆனால்.. என்றபடி ஒரு கணம் நிறுத்தி நீளமாய் மூச்சிழுப்பு செய்தவன், நான் மன்னிக்கும் மனநிலையில் இல்லை.. என்றான் விட்டேறியாய்.

அவன் சொன்ன பதிலைக் கேட்டு உதயரேக அதிரத்தான் செய்தாள்.



## 7

ஒரு வாரம் கழிந்திருந்தது.

அன்று காலை முதல் பெரும் ஆச்சரியம்தான் உதயரேகாவிற்கு. வழக்கம் போல் கிளம்பி காரை எடுக்கப் போன நரேந்திரன் நிதானமாய் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றியபடி நின்று கொண்டிருந்த அவள் பக்கம் வந்தான்.

அவன் வருவதை உணர்ந்தவள் முகத்தை அசூயையாய் மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

ஐ...ம்...ஸாரி.. உதய்.... என்ற அவனது வார்த்தைகள் காதில் விழுந்தபோது அவளது தலை வீராப்பை மறந்து தானாகத் திரும்பியது.

முகத்தில் அந்த கடுகுத் தனமும் கோபமும் இல்லாமல்... மென்மை தவழும் முகத்துடன் சினேகமாய் சிரித்தபடி... நரேந்திரனா.. அது? அவளது மை விழிகள் அவளையறியாமல் சற்று அகல விரிந்தது. நம்ப முடியாத ஆச்சரியத்துடன் அவனையே பார்த்தது.

உன்னிடம் மன்னிப்பைக் கோருகிறேன்... என்றான் நரேந்திரன் தெளிவான உச்சரிப்பில் குரலில் மெய்யான வருத்தம் தொனிக்க.

இப்போதும் அவளுக்கு உடன் பேச்சு வரவில்லை. வியப்பான திகைப்பில் அவனது கம்பீரமான காந்த விழிகளையே உற்றுப் பார்த்தாள். இமைகளுக்குள் உள்ள அவனது அழகிய கரு விழிகளும் நிஜமாகவே வருந்துவதற்கு அடையாளமாய் அவளது கண் விழி வீச்சை சந்திக்க முடியாமல் கீழ் நோக்கி தாழ்ந்தது.

குற்ற உணர்வில் குனிவது போல் தலையை கவிழ வைத்திருந்த நரேந்திரன் நிலை அவளை என்னவோ செய்தது. அவளுக்கு அவனிடம் பிடித்ததே அந்த கம்பீரம்தானே? சீறும் சிங்கமாய் பிடரியை உலுக்கியபடி அவன் கோபமாய் கர்ஜித்தாலும் அதை உள்ளூரசித்தவள்தானே!



அப்படிப்பட்டவள் அவன் இப்படி மருகித் தவிப்பதை சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அவளும் பதற்றமாகி, ஐயோ! மன்னிப்பெல்லாம் தேவையில்லை. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் உணர்ந்து கொண்டால் சரி.. என்றாள்.

அவள் சொன்ன வார்த்தைகளை நன்கு உள் வாங்கியவன் போல் நரேந்திரனும் தலையசைத்தான்.. நீ சொல்வது சரி. நான் உணர்ந்து கொண்டேன். என்னையே இப்போது தான் நான் நன்கு உணர்ந்து கொண்டேன்... என்றான் அதே வேகமாக தலையையசைப்புடன்.

அவள் புரியாமல் பார்க்க நீளமாய் மூச்சிழுத்துவிட்ட அவன் திரும்பி அவளை நோக்கிப் புருவங்களை உயர்த்தினான்.

நான் உன்னிடம் இன்று நிறைய பேச வேண்டும் பேசப் போகிறேன். அலுவலகம் வருகிறாயா?

அவள் கேட்டதும் அவசரமாகவே தலையசைத்தாள். கண்டிப்பாக வருகிறேன்... என்ற வார்த்தை முத்துக்களை வீசினாள்.

அங்கு வைத்து பேசுவோம். வருகிறேன்... என்றபடி நரேந்திரன் திரும்பியவன் அதே வேகத்தில் விடுவிடுவென காரில் ஏறிச் சென்று விட்டான்.

கொஞ்ச நிமிடங்களுக்கு முன் வரை அவன் செய்கைகளுக்காக அவனைக் கடித்துகு; குதறி துவம்சம் செய்யும் மனநிலையில் கொதிப்பாய் இருந்தவள் குளிர்ந்த நீரூற்று போல்.. பல்லைக் காட்டிக் கொண்டு அவன் செல்வதை அதிசயமாய் ரசித்துப் பார்த்துக் கொண்டு..?

சட்டென மாறிய தனது நிலை கண்டு அவளுக்கே எரிச்சலாகத்தான் இருந்தது. வேறு ஒரு ஆணை விட்டு அவளிடம் வம்பிழுக்க வைத்தவனை... அப்படி கீழ்த்தரமாக நடந்தவனை எவ்வளவு சீக்கிரத்தில் மன்னித்து விட்டாள்? வெறி பிடித்தாற் போல் அவளைப் பழி வாங்க தொடர்ச்சியாய் அலைந்தவன் அப்படித் திடீரென புத்திவந்து ஒரே நாளில் திருந்தி விடுவானோ? என்ற கேள்வியும் எழுந்தது.

ஆனால் இன்று அவன் முகமும் சரி, அந்த பேச்சும் சரி இதுவரை அவள் கொஞ்சமும் பார்த்திராதது நிஜமாகவே அவன் வருந்தியது அவனது அந்தக் காந்தக் கண்களில் தெரிந்ததே... என்றும் நினைத்தாள்.

ஆனால்.. அவன் இப்படி சட்டென மாறியதற்கு என்ன தான் காரணமாக இருக்கும். யாரும் அவன் புத்தியில் உரைக்கும்படி சொன்னார்களா? எப்படி இது நிகழ்ந்திருக்கக் கூடும்...? என தன் அழகான தலையைச் சாய்த்தபடி ரொம்ப நேரம் யோசித்தவள் பதில் வராமலே அலுவலகத்திற்குக் கிளம்பினாள்.

அலுவலகத்தில் அவள் வருகைக்காக காத்திருப்பது போல் தயாராகத்தான் இருந்தான் நரேந்திரன். வழக்கமான சிடுசிடுப்பு இல்லாமல் அவளைப் பார்த்ததும் மென்மையாய் புன்னகைத்த அவனது அழகே அவளுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

பைல்களுடன் நுழைந்து எதிர் இருக்கையில் அமர்ந்தவள் எஸ்டேட்டின் வழக்கமான கணக்கு வழக்குகளை எல்லாம் காட்டி அவன் ஒப்புதலுக்கு வைத்தாள். கம்பெனிகளுக்கு அனுப்ப வேண்டிய பேங்க் செக்குகள், ஏற்றுமதி நிறுவனங்களுக்கு கட்ட வேண்டிய நிலுவைத் தொகை பற்றியெல்லாம் குறிப்பு எழுதியிருந்தவள் அவைகளை எல்லாம் காட்டி விளக்கம் சொல்லி செக்குகளில் அவன் கையெழுத்தை வாங்கினாள்.

மற்ற நேரம் என்றால் நரேந்திரன் அது பற்றி அவனுக்குத் தெரிகிறதோ இல்லையோ.. அது.. என்ன.... இது.. என்ன.. என்று கேட்டு அவளைக் குடைந்து விட்டுத்தான் கையெழுத்தைப் போடுவான்.

ஆனால் இன்றோ அவள் நீட்டிய இடத்தில் எல்லாம் கிளிப்பிள்ளையாய் தன்[illegible]படி கையெழுத்திட்டான். பின் அதே புன்னகையும் நிமிர்ந்து அவளை உற்றுப் பார்த்தான்.

அலுவலகப் பணி அவ்வளவுதானே? என்றான்.

அவ்வளவுதான்... ஸார்...

அவள் வேண்டுமென்றே குரலில் போலி பவ்யம் காட்டினாள்.

அவன் டக்கென சிரித்து விட்டான்.

இந்த சார் மோரையெல்லாம் விடு... நரேந்திரன் என்று கூப்பிடு அது... கொஞ்சம் நீளமாக. நீட்டமாக இருப்பதாக உனக்குப் பட்டால் வாலைக் கட் பண்ணிவிட்டு நரேன் என்று கூப்பிடு. என்ன என்ன சொல்கிறாய்?

இலகுவாக பேசி அவன் மறுபடி சிரிக்க... அட இவனால் இப்படியெல்லாம் கூட பேச முடியுமா என அவள் வியந்தாள். அவனது திடீர் செய்கையைப் போல பேசும் பேச்சும் மாறி ஸ்னேகமாய் தேன் தடவியது போல் இனிமையாய் பேச ஆரம்பித்து விட்டானே... என மலைப்புத்தான் அவளுக்கு...!

இப்போது புரிந்ததா? என்றான்.

எதையோ கண்டு பிடித்து விட்டது போன்ற அவனது ஊடுருவும் பார்வையும், அந்தக் கேள்வியும் அவளை திகைக்க வைத்தாலும் அவள் ஒன்றையும் வெளிக்காட்ட விரும்பாதவளாகவே அவனைப் பார்த்தாள்.

நீங்கள்... நீங்கள்.. என்ன சொல்கிறீர்கள்.? கிளிப்பிள்ளை குரலில் அவள் திக்கித் திணறி கேட்டதை ரொம்பவும் ரசித்தவன் மறுபடியும்,



உனக்குப் புரிந்ததா... இல்லை புரியவே.. இல்லையா? என்றான் குறுஞ்சிரிப்பு ஒன்று இதழ்களில் படர.

அவனது குறுஞ்சிரிப்பையும் கேலியான பார்வையையும் பார்த்தவளுக்கு சினமே உருவானது.

எனக்கு ஒன்றும் புரியவில்லை... என்றாள்.

என்ன.. புரியவில்லையா? அப்படியானால் விளக்கமாய் நான் சொல்லட்டுமா? என்றான்.

சொல்லுங்கள்...

நரேந்திரன் மெல்ல அவள் மலர்க்கரங்களைப் பற்றி தன் நெஞ்சுப் பகுதியில் வைத்தான்.

இந்த இதயம் உன்னை விரும்புகிறது என்று தான் அதற்கு அர்த்தம்...

நிதானமாய் வார்த்தைகளை அழுத்தமாய் உச்சரித்து மறுபடியும் பார்வையால் அவன் ஊடுருவியபோது அவள் ஸ்தம்பித்துதான் போனாள்.

அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கடைசியில் அந்த வார்த்தைகளை அவள் எதிர்பார்த்ததை பட்டென உடைத்துச் சொல்லிவிட்டானே!

இதற்கு என்ன பதில் சொல்வது...? நாணிச் சிவக்கும் முகத்தை எந்த மாதிரிதான் வைத்துக் கொள்வது?

அவள் புருவம் உயர்த்தி விழிக்கத்தான் செய்தாள்.

அவன் அவள் தோள்களை இறுகப் பற்றி உலுக்கத்தான் செய்தான்.

அட... இன்னும் உனக்குப் புரியவில்லையா? ஏன் இப்படி கண்கள் அகல விரித்து... இந்த விழி விழிக்கிறாய்...? என்றபோதும் உதடுகளில் வார்த்தைகள்வராமல் அவனையேதான் பார்த்தாள்.

அவன் நரேந்திரனோ அவளிடம் எதையோ கண்டு பிடித்தவன் போல் மறுபடியும் அவளை அப்படியே அணைத்தான். சூடேறிய அவளது காதுபக்கம் அவனது வார்த்தைகள் விழுந்தது.

நான் ஒரு மடையன்... காதலர்களின் மொழியே... மௌனமும்... அணைப்பும்தானே? அதைக் கூட புரிந்து கொள்ளாமல் எதை எதையோ உன்னிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்.. பார்...!

அவன் பேசியது ஒருபுறம் இனிமையாய் இனிய அதிர்வாய் உடம்பை ஊடுருவி நரம்புகளை அப்படியே இசையாய் மீட்டிச் சென்றது.

காதலர்களாமே..! காதல் என்றே முடிவு பண்ணிவிட்டானா? பாவி. வெளிப்படையாக வேறு சொல்லி விட்டானே!

இனி.. என்ன செய்வது?

நாமும்ட ஒப்புக் கொள்வதா... இல்லை அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை எநன விலகி ஒடுவதா?

இவனுக்கு என்ன பதில் சொல்ல? எப்படி இவனை சமாளிக்க?

இதுநாள் வரை அவனிடம் எதை ஆவலாய், ஆசையாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாளோ... அது.. சட்டென அவள் எதிர்பாரா நேரத்தில் கிடைத்ததும். அது பற்றிய ஆசையை வெளிப்படுத்துவதா. வெட்கத்தை விட்டு தன் நிலையை உணர்த்துவதா.. என்ற தயக்கமே அவளுள் ஏற்பட்டு, அவளை திகைப்படையச் செய்தது.

அவனே அதையெல்லாம் உணராமல் அவளை வேகமாய் இறுக்கியவன் இம்முறை தனது இதழ்களை மெல்ல அவளது பட்டான கன்னங்களில் ஒற்றியெடுக்கவும் செய்தான்.

ஒருகனம் உதரயரேகாவிற்கு நடப்பதை எல்லாம் நம்புவது கஷ்டமாகத்தான் இருந்தது. நேராய் வந்தவன் தன்னை அணைப்பதும் கன்னங்களில் முத்தமிடுவதும், அவன் நெஞ்சுப் பக்கம் கைகளைக் கொண்டு போய், உன்னை விரும்புகிறேன் புரியவில்லையா? என ரோமியோ டயலாக் பேசுவதுமனு;.. இந்த நரேந்திரன்தானா...? என்று நம்ப ஆச்சரியமாயிருந்தது.

பத்து நாட்களுக்கு முன் வரை சிடுசிடுவென அவளை விரட்டி மிரட்டி மகிழ்ந்தவன் அடியோடு மாறி காதலன் போல்.. காதலன் போல்... இதோ காதலனாகவே ஆகிவிட்டானே! இந்த அவனது முகம் அவளைப் பார்த்டதும் சிவந்து கண்களை உருட்டியது... இன்று கனிவும் புன்னகையும் ததும்ப வெண்பற்கள் அத்தனையையும் காட்டியபடி ஏறக்குறைய, இளிச்சவாயத்தனமாகவே மாறி விட்டதே!

அவள் திகைக்ககையிலே அவள் நினைப்பு முழுவதையும் யூகித்தவன் போல்,

என்ன ஆச்டசரியமாய்.. நடப்பது நம்ப முடியாமல் தானே இருக்கிறது..? என்றான்.

அவள் மேலும் வியந்து தலையசைக்க, எனக்கும் அப்படித்தான்...! எனக் கூறி அவளை முழுதுமாய் அதிரவைத்தவன், அதற்குக் காரணம் என்ன என்பது இப்போதுதான் புரிகிறது. என்றான் பிடிவையாய்.

மேலும் கண்களை அகல விரித்தவளை நன்கு உற்றுப் பார்த்டதவன், இந்டத அழகான முகம், மை விழிகளின் அபார வீச்சு, கன்னகக் கதுப்புகள் சூடேற தலை சாய்த்து நீ அந்த ஸ்ப்ரிங் முடிக்கற்றைகள்,



உதட்டோர சிறிய நட்சத்திர மச்சம்.. அது... என்ன... ஒரு வண்டிப் பூக்களை தலையில் சொரிவது போல் இதழ் விரியும் அந்த இனிமையான சிரிப்பு... அவன் மேற்கொண்டு சொல்ல முயல்கையில், போதும்... போதும்... என கைகளை உயர்த்தி நிறுத்தினாள்.

இந்த ஸ்ட்ராபெரி ஐஸ் மலையில் தலையே சுழன்று விடும் போல இருக்கிறது. இதற்கு மேலும் வேண்டாம்... ஐயோ... நிறுத்துங்கள்!

அவள் அலறாத குறையாய் சொல்லி விட்டுச் சிரிக்க அவனும் சிரித்தான்.

இல்லை... ரேகா.. நான் சொல்வது வெறும் புகழ்ச்சியில்லை.. உண்மை...!

அப்படியா? இவ்வளவு நாள் தெரியாத உண்மை இன்றுதான் தெரிந்ததாக்கும்? அவள் விடாமல் கேலிக்குரலுடன் பார்த்தாள்..

நரேந்திரன் அதற்கும் தலையசைப்பு செய்து சமாளித்தவன், அதற்கும் காரணமிருக்கிறது.. என்றான்,

என்ன காரணம்?

அவள் கேட்டதற்கு புருவம் உயர்தறி அவளையே நேராய் பார்த்தான். என்னுடைய ஆசையை வெளிப்படுத்துவதற்கு முன் உன் மனதை படிக்க நினைத்தேன். அது.. இன்றுதான் முடிந்தது.

அவன் சாதாரணமாய் சொன்னாலும் அவள் திடுக்கிடத்தான் செய்தாள். என்ன உள் மனதை படித்து விட்டாணா? என்ன சொல்கிறான் இவன்?

என்ன சொல்கிறீர்கள்? என்றாள்.

புரியவில்லை... உன்னுடைய மனதில் என்ன ஓடுகிறது என்று தெரிந்தால் தானே என்னுடைய ஆசையை வெளிப்படையாய் வெளிப்படுத்த முடியும். அது இன்று தான் தெரிந்தது.... என்றான் மறுபடியும்

எப்படி.. எப்படித் தெரிந்தது?

அவள் கேட்டதற்கு பதில் சொல்லாமல கரங்களால் அவளை தன் பக்கம் இழுத்து மீண்டும் ஒரு பூக்குவியல் அணைப்பு செய்தான்! இது போன்ற அணைப்பை எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் நீ அனுமதிக்கும் போதுதான் உன் நினைப்பு உன் உள்மன ஆசை எல்லாம் எனக்குத்தெரிகிறது என்னால் புரிந்து கொள்ள முடிகிறது...

இம்முறை அவன் பேச்சுக்கு முகம் சிவக்க, அவளால் தலை குனியத்தான் முடிந்தது. ஒரு சின்ன அனுமதிப்பில் எல்லாவற்றையும் புரிந்து கொண்டானா? என வியந்தவள், எளிதில் விழுந்தாற் போல் மயங்கி விட்ட தன் நிலையைக் கண்டு அதிரவும் செய்தாள். என்ன நினைத்திருப்பான்...?

தொட்டு அணைத்ததும் நீயே.. சுதி.. என ஒட்டிக் கொண்டு விட்டாள் என்று முடிவும் பண்ணியிருப்பானோ...?

அவள் திகைப்பிற்கு பதில் சொல்வது போல் இருந்தது அவனது பேச்சு. உதயரேகா, நம் இரண்டு பேர் செய்கையும் சரி.. திடீரென இப்போது இந்த சூழ்நிலையில் ஏற்பட்டு வெளிப்படுத்தியது அல்ல. நெடுநாளாய்வெறும் ஆசையாய் நம் உள் மனதில் ஓடிக்கொண்டிருந்த விஷயங்கள். இன்றுதான் தைரியமாய் உருப்பெற்ற வெளிவந்திருக்கின்றன. புரிகிறதா...? என்றான் அவள் தலைப் பகுதியை செல்லமாய் தட்டிட நரேந்திரன் சிரிப்புடன்.

அதற்கு மேல் அவன் முன் வெட்கமின்றி அவளால் நிற்க முடியவில்லை. மை விழிகளால் தரை தாழப் பார்த்துக் கொண்டிருந்தவள் அப்படியே ஒரு முறை நிமிர்ந்து அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு அந்த ரூமை விட்டு ஓடினாள்.

அவள் வெட்கமாய் விலகி ஓடுவதை ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்த நரேந்திரனின் முகம் அவள் சென்றதும் மாறியது. அதில் விஷமமான புன்னகையொன்று விசித்திரமாய் பரவ ஆரம்பித்தது.



## 8

அதற்குப்பின் வந்த இரண்டு வாரங்களும் எவ்வித குழப்பமுமில்லாமல் நல்ல மனநிலையிலே உதயரேகவாவிற்கு போயிற்று.

மூன்றாம்நாள் ... காலையில் நரேந்திரன் அவளைத் தேடி வந்தான்.

ஒரு முக்கியமான விஷயம்... என்றான்.

என்ன...? என்றாள் அவள் விழி விரியும் ஆவலோடு.

இன்று மாலை நான்கு மணிக்கு நீ என்னுடன் இரயில் நிலையத்துக்கு வர வேண்டும். இன்று ட்ரெயினில் நம்மைச் சந்திக்க முக்கிய விருந்தாளி ஒருவர் வரப்போகிறாள்....

முக்கிய விருந்தாளியா... யாரது?

அவள் ஆவலாய்க் கேட்க ஓரிரு நிமிடம் பதில் சொல்லாமல் அவளையே உற்றுப் பார்த்தான் நரேந்திடிரன்.

அதை யாரென்று இப்போது சொல்ல மாட்டேன். நீ நேரிடையாக பார்த்து தெரிந்து கொள். ஆனால்.. அந்த விருந்தாளி உனக்கு நன்கு தெரிந்தவர்தான் உனக்கு அறிமுகமானவர்தான்... என்று சொன்னபோது அவள் குழம்பத்தான் செய்தாள்.



நரேந்திரனும் அதற்குப் பின் ஒரு விநோதமான சிரிப்பு சிரித்து விட்டுச் சென்றுவிட்டான்.

அவள்தான் யாரது? யாராயிருக்கும்? என நினைத்து பார்த்துக் கொண்டே இருந்தாள்.

ஆனால் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒன்றையும் யூகிக்க முடியவில்லை.

மதியம் மூன்று மணி வாக்கிலே அவளை அழைத்துப் போக ரூமிற்கு தேடி வந்து விட்டான் நரேந்திரன்.

ரெடியாக இருக்கிறாய்...? ரெயிலில் வரும் விருந்தாளியை வரவேற்று அழைத்து வருவோம்.... வா..! என அழைத்ததும் உடனே கிளம்பிவிட்டாள் உதயரேகா.

இருவரும் காரில் கிளம்பினார்கள்.

அரைமணிநேர பயணத்தில் ரெயில் நிலையத்தை அடைந்துவிட்டார்கள்.

பிளாட்பார இருக்கைகளில் அமர்ந்தபடி காத்திருக்க ஆரம்பித்தனர்.

உதயரேகா, தான், அந்த விருந்தாளி யார்? என அறிந்து கொள்ளும் பரபரப்பில் இருந்தது போல் நரேந்திரனும்

ஒருவித பதட்டத்துடன் இருப்பதைக் கவனித்து துணுக்குறவே செய்தாள்.

நேரம் விரைந்தது.

நான்கு மணி.

அந்த எக்ஸ்பிரஸ் ரயில் பிளாட்பார லைனில் நுழைந்து நின்றது.

நரேந்திரன் விடுவிடுவென முன்னால் ஓடிப் போனான்.

சரியான பெட்டியை கண்டுபிடித்து ஏறினான்.

சிறிது நொடிகளில் லக்கேஜ்ஜும் கையுமாய் அந்த விருந்தாளியை அழைத்துக் கொண்டு இறங்க.

உதயரேகா... யாரது? என்று ஆவலாய் உற்றுப் பார்க்க.

பார்த்தவள்...

அப்படியே அதிர்ந்தாள்!

அவள் கால் வைத்திருந்த தரை பிளந்து பூமியே விழுங்குவது போலிருந்தது.

மூளைப் பகுதிகளில்... எரிமலைக் குன்றுகள் வெடித்தது போல் நெருப்புத் துண்டங்களாய் நரம்புகள் நெளிந்தது.

அது... அங்கு.. வந்து கொண்டிருந்தது.. ரதிதேவி என சொல்லப்படும் மின்னல்குமாரி... மின்னல்குமாரியே தான்..!

யாரை இனி தன் வாழ்க்கையில் சந்திக்கக்கூடாது.. பார்க்கக்கூடாது.. என்று நினைத்தாளோ.. அதே மின்னல் குமாரிதான்!

யார்.. தன்னைப் பழிவாங்குவதாய் சவால் விட்டுச் சொன்னாளோ... யார்... தன்னை உலகின் எந்த மூலைக்குப் போனாலும் விரட்டி வந்து பழி வாங்குவதாய் சொன்னாளோ... அதே... மின்னல்குமாரிதான்..!

அவள்... தான் நரேந்திரன் சொன்ன விருந்தாளியா? திடுக்கிட்டுப் பார்த்தவளின் மருண்ட கண்கள் மேலும் மிரண்டது.

என்ன இது..? நரேந்திரனும் அவள் மின்னல்குமாரியும் நெருக்கமாய் ஒருவரோடு ஒருவர் தோளால் அணைத்தபடி... கைகளால் அணைத்துக் கொண்டு.. சிரிக்கச் சிரிக்க... பேசிக்கொண்டு...

அப்படியானால்..?

என்ன... இது..?

இங்கு என்னதான் நடக்கிறது..?

மின்னல்குமாரி நரேந்திரனோடு நடந்து கொள்வதைப் பார்த்தால் காதலி போல் அல்லவா நடந்து கொள்கிறாள்...?

அப்படிப் பார்த்தால்... அவர்கள் இருவரும் கூட்டு சேர்ந்திருக்கிறார்களா..?

தன்னைப் பழி வாங்க நரேந்திரனோடு சேர்ந்து கொண்டு மின்னல்குமாரி செய்த ஏற்பாடு தானா இது...?

இதற்கு நரேந்திரனும் ஒத்துக் கொண்டானா?

அப்படியானால் இவ்வளவு நாள் நரேந்திரன் போட்டது காதலன் வேஷமா?

அப்படியே அதிர்ச்சியில் சிலையானாள் உதயரேகா.

இப்படி மின்னல்குமாரி நரேந்திரனை தன் கைப்பாவையாக்கி இப்படியொரு சூழ்ச்சி செய்து, இப்படி ஒரு கேவலமான காதல் நாடகம் நடத்துவாள் என உதயரேகா கனவிலும் எதிர்பார்க்கவில்லை! ஆனால் அப்படி நடந்திருக்கிறதே! கண் முன் நடந்து கொண்டு இருக்கிறதே!



மின்னல்குமாரியும் நரேந்திரனும் அவளைப்பார்த்து இகழ்ச்சியாய் சிரித்து பரிகாசப் பார்வை பார்த்து, தோளாடு தோள் உரசி, கரங்களால் ஒருவரது இடுப்பை ஒருவர் அணைத்தபடி... கடவுளே! இவர்கள் காதல்களா? நிஜமாக நரேந்திரன் காதலிப்பது இவளைத்தானா?

அப்படியானால்... இவ்வளவு நாள் நரேந்திரன் பெரிய ரோமியோ போல் காதல் நாடகம் போட்டது... வேஷமா...? கைதேர்ந்த நடிப்புதானா?

எதற்காக?

நினைக்க நினைக்க... உடம்பே நடுங்குவது போலிருந்தது உதயரேகாவிற்கு. கீழுதட்டில் பற்களை அழுந்தக் கடித்து நடுக்கத்தை நிறுத்தினாள். அதிர்ச்சியில் மூளையின் நரம்புகள் விண்ணென தெறித்து விழுவது போல் இருந்தது.

நெற்றியையும் கன்னத்தையும் ஒருசேர கைகளால் தாங்கிக் கொண்டே நம்ப முடியாமல்அவர்களைப் பார்த்தாள்.

அவளது அந்த தவிப்பான திகைப்பு நிலையை ரொம்பவும் ரசித்து பார்த்த மின்னல்குமாரி நரேந்திரனின் தோள்களை செல்லமாய் தட்டி குலுங்காத குறையாய் சிரித்தவள், பார் நரேன், பேக்கு மாதிரிதான் விழித்துக் கொண்டிருக்கிறாள். அவள் மரமண்டைக்கு நீ போய் புரிகிற மாதிரி நாலு வார்த்தை பேசினால்தான் கொஞ்சமாவது விளங்கும். போ.. டியர்...! சொல்லியபடி தன் உடம்பால் இடித்தே நரேந்திரனை அவள் பக்கமும் தள்ளினாள் அவள்.

உதயரேகாவிற்கோ மின்னல்குமாரி தன்னை பேக்கு, மரமண்டை என்றெல்லாம் விளித்ததை விட நரேந்திரனை உரிமையாய் ஒருமையில் அழைத்து டியர் கியர் என கொஞ்சியதுதான் நெருப்புக் கீற்றாய் உள்ளத்தை பிளப்பது போல் பாய்ந்தது.

அவள் தன் நிலையை உணர்ந்து உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி சுதாரிக்கும் முன்பே நரேதிரன் அவள் பக்கத்தில் வந்து விட்டான்.

'என்ன...இது...? அவளைப் பார்த்து அலட்சியப் பார்வை... உதடுகளில் ஏளனமான இளிப்பு...? அப்படியானால்,... கடவுளே! இவனுக்கு எவ்வித குற்ற உணர்வும் இல்லையா?

அவள் கண்கள் விரித்து திகைத்துப் பார்த்ததை அதே அலட்சியத்தோடு பார்த்தவன், என்ன பார்க்கிறாய்...? இவ்வளவு நாள் நடந்தது நாடகம்! காதலிப்பது போல் இருந்தது நடிப்பு. எல்லாம்.. என்னோட டியருக்காக... என்... உண்மையான காதலி மின்னல்குமாரிக்கா... புரிந்து கொள்...! என பெரிதாய் விளக்கம் கொடுத்தவன் போல் திரும்பிப் பார்க்க... பின்னால் நின்ற மின்னல்குமாரி ஓடி வந்து அவனுடன் ஒட்டிக் கொண்டாள்.

அதே போல் இடுப்போடு அணைத்துக் கொண்டு. கரங்களோடு இறுக கோர்த்துக் கொண்டு அவளை, அவள் தவித்து திணறுவதை ஆசை தீர பார்த்தான். அந்த பூரிப்பில், சந்தோஷத்தில் அவன் முகமே வெடித்து விடுவது போல இருந்தது.

தலையில் இடி விழுந்ததைப் போல்தான் உணர்ந்தாள் உதயரேகா.

என்ன.. சொல்கிறான்... என்ன சொல்கிறான்..? அவன் காதலிப்பதாய் அவளிடம் சொன்னது நாடகமாம்! நடிப்பாம்..! என்ன ஒரு வார்த்தைகள்!

எவ்வளவு ஈசியாய் சுலபமாய் ஒற்றை வரியில் சொல்லிவிட்டான். இதுவெல்லாம் நிஜம்மானா? நடப்பதெல்லாம் உண்மைதானா? உண்மையிலே அவன் அப்படி சொன்னானா.. இல்லை வேறு எதுவும் தவறாக அவள் காதுகளில் விழுந்து விட்டதா?

நம்ப முடியாதவளாய் நிமிர்ந்து நரேந்திரனின் அசைந்த உதடுகளை உற்று நோக்கினாள். அதில் இகழ்ச்சியான புன்னகையொன்று ஓடியது நடப்பதெல்லாம் நிஜம்தான் என அவளுக்கு உணர்த்தியது.

அதைவிட ஆங்காரம் ஜொலிக்க மின்னல்குமாரி பார்க்கும் அந்த கெக்கலிப்பு பார்வை... எதையோ பெரிதாய் சாதித்து வெற்றி பெற்று விட்டது போன்ற அந்த அலட்டலான நயவஞ்சகம்... கடவுளே...! இதுபோன்ற ஈனப்பிறவிகள் முன் இன்னமும் உயிரோடு நின்று கொண்டிருக்கிறேனே:.! என் உயிரை எடுத்து விடு அல்து இவர்கள் முன் இருக்கும் என்னை அப்படியே மறைய வைத்துவிடு...!

மனமுருக.. வேண்டித் தவித்தவள் தாங்க மாட்டாதவளாய் மறுபடியும் நரேந்திரனைத்தான் கண்களை பெரிதாக்கி உற்றுப் பார்த்தாள்.

கடைசியில், இவ்வளவு.... கேவலமாக போய் விட்டானா... இந்த நரேந்திரன்? ஆரம்பத்தில் இருந்தே வெறிபிடித்தது போல் அவளைத் துரத்திச் சீண்டியது, மன உளைச்சல்கள் செய்து துன்புறுத்தியது, எல்லாவற்றுகம் மேலாய் நல்லவன் போல் திருந்திவிட்டதாய் சொல்லி காதல் நாடகம் போட்டது.... எல்லாம்.. எதனால்? இந்த மின்னல்குமாரிக்காகவா இவ்வளவையும் செய்தாள்? அவள் ஆட்டுவித்தால்தான் இப்படியெல்லாம் நடந்து காதல் ஆட்டம் ஆடியிருக்கிறான்? கேவலம் ஒரு பெண்ணைப் பழி வாங்குவதற்காக காதல் நாடகம் நடத்தும் அளவுக்கு தரம் கெட்டவனா இந்த நரேந்திரன்?

அவள் நினைக்க அவளது நினைப்புகளை எல்லாம் மெய்யாக்கியபடி விளக்கமும் கொடுக்க ஆரம்பித்தான் அவன்.

உதயரேகா, நான் சொல்லப்போவது கதை போல்தான் இருக்கும். ஆனாலும் உண்மை... அது... நான் டெக்ஸாஸ் யூனிவர்ஸிட்டியில் படித்தது...



என் ப்ரியமான ரதி தேவியைப் பார்த்து காதல் வயப்பட்டது பற்றியெல்லாம் பத்மினி உன்னிடம் சொல்லியிருந்தாளே... அதுவெல்லாம் உண்மை... நிஜம்மான.. நிஜம். ஆனால் அதன் பின் அவள் என் காதலை நிராகரித்து விட்டாள். நான் அவளை மறந்துவிட்டேன்... என நீ கேள்விப்பட்டது தான் பொய். எங்கள் காதல் அப்படியே யாருக்கும் தெரியாமல் வளர்ந்தது. என் ப்ரிய ரதிதேவி அழகுக் கலை சம்பந்தமான இரண்டு வருட படிப்பொன்றை படித்து வருவதால் அது முடிந்தபின் எல்லோருக்கும் காதலை தெரிவித்து கல்யாணம் செய்து கொள்வதாக ஏற்பாடு. இதில் தற்செயலான... புரோக்கர் மூலம் உன் புகைப்படம் எனக்கு கிடைக்க... அதைப் பார்த்த என் டியர் ரதிதேவி நீ அவளுக்கு துரோகம் செய்த கதைகளைப் பற்றியெல்லாம் விவரித்தாள். திமிறும் ஆணவமும் பிடித்த உன்னைப் பழிவாங்க வேண்டிய அவசியத்தை உணர்த்திதனாள். அதனாலே நாங்கள் இருவரும் பிளான் போட்டோம். உன்னைப் பழி வாங்கவே.. உன்னை.... முதன்முதலாய் கல்யாண மண்டபத்தில் பார்த்து சீண்டினேன். நீ நான் நினைத்த மாதிரியே என்னுடன் சண்டை போட மறுநாள் என் அலுவலகத்திற்கே தேடி வந்தாய்.

உன்னை அப்படியே தினம் தினம் வம்பிக்கிழுத்து உனக்கு இன்னல்களை கொடுத்தேன். உன்னை வேலையை விட்டு ஓடச் செய்தேன். நீ என்னிடமிருந்து தப்புவதாக நினைத்து விட்டில் பூச்சி போல் என் எஸ்டேட்டுக்கே வேலைக்கு வந்தாய். அதை என் டியரிடம் தெரிவித்த போதுதான் உன்னை இறுதி கட்டமாக பழி வாங்க அவள் ஒரு அருமையான யோசனையைச் சொன்னாள்....

நரேந்திரன் நீளமாய் பேசி முடித்து அதே ஏளனப்புன்னகையுடன் நிறுத்திடினான். அவள் உதயரேகா உதடு துடிக்கும் சினத்துடன் மூச்சு வாங்க அவனைப் பார்த்தாள்.

அதாவது... காதல் நாடகம்.... என்னை காதலிப்பது போல் நடித்தது- அப்படித்தானே?

அவள் கோபத்தை சிறிதும பொருட்படுத்தாதவனாய் கைகளைத் தட்டினான் நரேந்திரன்.

கரெக்ட்! சரியாக கண்டுபிடித்து விட்டாயே...? அதனால் அதற்காக நாங்கள் தேர்ந்தெடுத்ததுதான் இந்த காதல் நாடகம்.

அப்படி ஒரு காதல் நாடகத்தை நடத்தத்தான் அதுவரை உன்னை விரட்டி விரட்டி மிரட்டிக் கொண்டிருந்த நான்... சட்டென ஞானம் வந்தது போல் உன்னிடம் மனம் உருகப்பேசினேன். மன்னிப்பு கேட்பது போல் சரணாகதியும் அடைந்தேன். அதற்காகவே நலான் காதலித்த பெண் ஏமாற்றிவிட்டாள். அந்தச் சாயலில் நீ இருப்பதால் உன்னைப் பழிவாங்க விரட்டினேன்... என்றெல்லாம் பொய்யாய் புளுகினேன். நீ நம்பும்படி நடித்தேன்.

என் நேரம் நான் சொன்னதை நீ உடனே நம்பிவிட்டாய். நான் நினைத்த மாதிரியே.. என் மீது நீ கொண்டிருந்த கோபக்கடல்.. கருணைக்கடலாய் மாறி.... கடைசியில் காதலாகவும் மாறிவிட்டது.

சொல்லிவிட்டு நரேந்திரன் ஏதோ உலகையே வெற்றி கொண்டவன் போல் வெடிச்சிரிப்பு சிரிக்க... காரி உமிழா குறையாய் அவனைப் பார்த்தாள்.

த்தூ! இது பெரிய சாகஸா...? ஒரு பெண்ணை திட்டம் போட்டு ஏமாற்றுவதுதான் உங்கள் வீரமா? கேவலமான தரங்கெட்ட செயல் இது...!

அவன் சொன்னதற்கு அலட்சியமாய் தோள்களை குலுக்கினான் நரேந்திரன்.

நீ என்ன வேணாலும் சொல்லிக் கொள். என்னைப் பொறுத்தவரையில் எனக்குத் தெரிந்து உலகிலேயே... நம் வாழ்க்கையிலேயே... மிகவும் கொடுமையான விஷயம் எதிலாவது தோற்பதுதான். அதிலும்.. மனதில் ஒருவரை நினைத்து அது நிறைவேறாமல் போய் காதலில் தோற்பது மிக மிக கொடுமையான விஷயம். அதுதான்... உனக்கு சரியான தண்டனை என்று முடிவெடுத்து... உன்னிடம் காதலிப்பது போல் நடித்தேன். நாடகமாடினேன். நீயும் நம்பிவிட்டாய். பெரிய சினிமாக் கதாநாயகி போல் காதல் கனவுகளில் சஞ்சரக்க ஆரம்பித்துவிட்டாய்... என்ன... டியர்..?

சொல்லியபடி நரேந்திடிரன் திரும்பிப் பார்க்க அவன் ரதிதேவி எனப்படும் மின்னல்குமாரி இடுப்பை வளைத்திருந்தவள்... தாவியவளாய் அவனந் கழுத்தை வளைத்து கட்டிக் கொண்டாள்.

இந்த விளக்கம் போதும் டியர். மீதியை நான் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் காரில் ஏறிக் கொள்ளுங்கள்! எனச் சிணுங்கினாள்.

ஓ.கே. டியர்..! என்றபடி செல்லமாய் அவள் கன்னங்களை தட்டினான் அவன். பின் உதயரேகாவின் பக்கம் திருமபி அதே கேலிப் பார்வையுடன், இந்த முன்னால் காதலனை மறந்து விடு. மன்னித்து விடு. ஓ.கேயா? சொல்லியபடி திரும்பிப் பாராமல் காரை நோக்கி நடந்தான்.

அவன் அகல.. மின்னல்குமாரி அவள் முகக்குறிப்பை உற்றப் பார்த்து அவள் அதிர்ச்சியில் உறைந்து விட்டதை உணர்ந்து குதூகலம் பொங்கியவளாய் வெடிச்சிரிப்பு ஒன்றை உதிர்த்தாள்.

என்ன... அப்படி விழிக்கிறாய்...? நீ காதலித்து ஏங்கிய நரேந்திரன்.. என்னுடைய டியர்... நாளை கட்டிக்கப் போகும் வுட்...பி..! என நிறுத்தியவள் தன் முகத்தை உதயரேகாவின் முகம் அருகே கொண்டு சென்று அவள் தவிப்பதை உற்றுப் பார்த்துவிட்டு, மனதில்... நீ நரேந்திடிரனை நினைத்து.. காதல் கோட்டைகளாய் கட்டி வைத்திருப்பாயே? அவை அத்தனையும்



இனி தூள் தூள்தான்..! வாழ்நாள் முழுவதும் ஆறாத வடு போல் அது உன் மனதை உறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். நானும் நரேனும் வாழும் சந்தோஷமான வாழ்க்கையை நினைத்து.. நீ... கொத்து... வாழ்நாள் முழுவதும் கண்ணீர் விட வேண்டும். இதுதான் உனக்க சரியான தண்டனை... எனக்கு துரோகம் செய்ததற்காக இந்த மின்னல்குமாரி உனக்கு கொடுக்கும் கொடூரமான தண்டனை... புரிகிறதா?

உதயரேகா தன் தவிப்பு கோபம் ஆற்றாமை என எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு ஒரு கணம் அமைதியாக அவனைப் பார்த்தாள்.

ஆனாலும்... இப்படி ஒரு கேவலமான நாடகத்தை நடத்த... உனக்கு எப்படி மனம் வந்தது, என்றாள்.

மின்னல்குமாரி வார்த்தைகள் தடுமாறி அவள் பேசுவதை ரசித்துப் பார்த்தவள், என்ன சொன்னாய் கேவலமா? இது... இப்படி ஒரு தண்டனைதான் உன்னைப் போன்ற துரோகிகளுக்கு சரியான பாடமாய் இருக்கும்... என அவள் சொல்ல... அவள் முடிக்கும் முன்பே உதயரேகா சீறினாள்.

துரோகியா..? நா..? இந்த முட்டாள்தனமான நினைப்பை.. பேச்சை.. முதலில் நிறுத்து...! என்றாள் குரல் உயர.

அவள் துடித்துப் பேசுவதைக் கண்டு மறுபடியும் ரசித்து வெடிச்சிரிப்பு ஒன்றை உதிரவிட்டாள் மின்னல்குமாரி.

அடடா! இந்த ஆத்திரம... கோபம்.. எல்லாம் உன்கு வருகிறதா? நன்றாக வரட்டும். இதற்காக...இப்படி நீ துடிக்க வேண்டும். அதை நான் பார்த்து ஆசைதீர ரசிக்க வேண்டும் என்றுதானே எல்லாவற்றையும் செய்தேன். நான் நினைத்த மாதிரியே நடக்கிறது... நடந்துவிட்டது... அது போதும்.... அது... போதும்.. எனக்கு!

கைகளைத் தட்டாத குறையாய் உற்சாகமான மின்னல் குமாரி குனிந்து அவள் தோள்களை பற்றி தன் பக்கம் திருப்பி தன் குண்டுக்கண்களால் உதயரேகாவை உற்றுப் பார்த்தாள்.

ஒன்றைத் தெரிந்து கொள். இந்த மின்னல்குமாரியை யாரும் ஜெயிக்க முடியாது. ஜெயித்ததாய் சரித்திரமும் கிடையாது. இப்போது யோசித்துப்பார். அன்று அழகிப் போட்டியில் நீ ஜெயித்து என்ன பிரயோஜனம். இன்று வாழ்க்கைப் போட்டியில் நீ ஜெயித்து என்ன பிரயோஜனம். இன்று வாழ்க்கைப் போட்டியில் தோற்றுவிட்டாயே! நீ உருக உருக உருக காதலித்த்வன் என் ஆசை மணாளன். விரைவில் உருக காதலித்தவன் என் ஆசை மணாளன். விரைவில் என் கணவன் ஆகப் போகிறான்...! அந்த சந்தோஷம் ஒன்றே என்னை வாழ்நாள் முழுதும் பூரித்து

புளகாங்கிதமாக்கும். உன்னை வாழ்நாள் முழுவதும் நொந்து புலம்ப வைக்கும். அது போதும் எனக்கு...!

ஒருவாறு தன் பேச்சை முடித்த மின்னல்குமாரி தன் நீளமான தலையை வேகமாய் அசைத்தவாறு, சரி.. சரி... என்னுடைய டியர் காத்திருக்கிறார். இன்னும் உன்னுடன் என்ன வெட்டிப் பேச்சு? என்றபடி திரும்பி அவசரமாய் நடக்கப்போனாள்.

மறுகணமே ஏதோ நினைப்பு வந்தவளாய் நின்று திரும்பியவள், அதே ஏளனப் பார்வையுடன்.

ஆமாம்... இனி என்ன செய்யப் போகிறாய்? இப்படியே... ரயிலேறி ஊருக்கு ஓடி விடுகிறாயா...? இல்லை.. நான் நரேன் டியருடன் நடத்தப் போகும் காதல் கல்யாண வாழ்க்கையை சந்தோஷமாய்ப் பார்த்து ரசிக்கப்போகிறாயா?



# 9

மின்னல்குமாரி சொல்லிவிட்டு விறுவிறுவென சென்றுவிட்டாள். உதயரேகா அசையாத கற்சிலை போல்தான் அப்படியே ரொம்ப நேரம் நின்றாள்.

நடப்பது... நடந்தது எல்லாம் நிஜம்தானா...? என்று நம்புவது கூட அவளுக்கு கடினமாய் இருந்தது இந்த நரேந்திரனோடு யாரோ ஒரு விருந்தாளியை வரவேற்கப் போகிறோம் என்று தானே கிளம்பினாள்.

அவனும் அந்த அபாயகரமான விருந்தாளியான மின்னல்குமாரியை காட்டும் வரை நன்றாகத்தானே அவளிடம் நடந்து கொண்டான்? சிரிக்க சிரிக்கத்தானே அவளிடம் பேசினான்? எல்லாம் நடிப்பா..?

நரேந்திரன் இப்படி குரூரமாய் நடித்து ஏமாற்றியிருக்கிறானா...? அதுவும் அந்த மின்னல்குமாரிக்காகவா?

கொஞ்சமாவது அவன் யோசிக்கவில்லையா..? இப்படி ஏமாற்றுகிறோமே அவள் மனம் உண்மை தெரிந்தால் என்ன பாடுபடும் என நினைக்கவில்லையா...?

அவள் மனம் துடிப்பது இருக்கட்டும் அவனுக்கென்று ஒரு மனம் இல்லையா...? அது இப்படி செய்வது எல்லாம் சரியென்றுதான் அவனுக்கு போதித்து தட்டிக் கொடுக்கிறதா...?



அவள்... சொன்னால்... என இவன் கிளம்பினானாம். விரட்டி விரட்டி பழி வாங்கினானாம்.. எல்லாம் அவளுக்காகவாம்... அந்த பொல்லாத டியர் மின்னல்குமாரிக்காகவாம்.!

ஒரு கணம் முன்பு படித்த சாட்டையால் விளாசினாற்போல் வரும் பாரதியின் வரிகள் தான் அவள் ஞாபகத்திற்கு வந்தது.

படித்தும் மதியிழந்து போன அந்த தரங்கெட்ட மனிதர்களைப் பார்த்து ஐயோ...! எனத்தான் பதறி கதறினான் பாரதி.

அது எவ்வளவு உண்மை என்பதை இப்போது உணர்ந்தாள் அவள். அவளுக்கு உண்மையில் தான் ஏமாற்றப்பட்டதை விட நரேந்திரன் இப்படி தரங்கெட்டுப் போய் நடந்து கொண்டானே என்பதுதான் ஜீரணிக்க முடியாத பாறாங்கல்லாய் உடம்மையே கிழித்தது.

இதுதான் காதல் மயக்கமா? அந்த மின்னல்குமாரியிடம் அவ்வளவு பித்து பிடித்திருக்கிறதா? அவ்வளவு பித்துப் பிடித்து மின்னல்குமாரியின் மனது எப்படிப்பட்டது என்பது ஏன் புரியாமல் போயிற்று?

எல்லாவற்றுக்கும் சூத்ரதாரியாய் இருந்த நடத்தியிருக்கிறாளே!

யோசிக்க யோசிக்க கொதிப்பான மனநிலையிலே தவித்தவள் குழம்பவும் ஆரம்பித்தாள்.

உதயரேகாவிற்கு மீண்டும் அந்த எஸ்டேட்டை நோக்கி செல்ல மனமே இல்லை. அங்கு போய் என்ன செய்...?

அமந்த காதல் துரோகி நரேந்திரனும், அகம்பாவக்காரி மின்னல்குமாரியும் கொஞ்சி காதல் வசனம் பேசுவதை ரசித்தா பார்க்க முடியும்?

அதிலும்.. நயவஞ்சக நரி போல் ஏமாற்றி அவள் மன உணர்வுகளை சாகடித்த நரேந்திரனின் அந்த செய்கை, மன்னிக்க கூடியதா.... என்ன?

அவனைப் போன்ற துரோகிகளின் முகத்தில் விழிப்பதே பாவமே! இனி எப்படிப் போய் அவன் முகத்தில் விழிப்பாள்?

அப்படி விழித்து அவமானப்படுவதைவிட திரும்பி ஊருக்குச் செல்வதே மேல் என நினைத்தாள் உதயரேகா.

ஆனாலும் அதற்கும் மனமில்லை! இன்னொரு மனம் உடன்பாடில்லாமல் திடும்மென விழித்து... அவளை வாட்டியது. இப்படி புறமுதுகு காட்டி ஓடிச்செல்வது போல் ஊருக்குச் சென்றால்.. என்ன பயன் கிடைக்கும்? வாழ்நாள் முழுவதும் இதை நினைத்து நினைத்து கண்ணீர் விட்டு அழுவதுதானே மிஞ்சும்?

அப்படித் தோற்றுப்போனவள் போல் எங்கோ முடங்கிக்கிடப்பதை விட தைரியம் கொண்டவளாய் இவர்கள் முன் வீரமாய் நடைபோடுவதுதானே கம்பீரம்?

தப்பு செய்த அவர்களே ஓடி ஒளியாமல் தலை நிமிர்ந்து நிற்கும்போது அவர்களின் சூழ்ச்சியால் பாதிக்கப்பட்ட நாம் ஏன் கோழை போல் ஓட வேண்டும்?

நினைத்தவளுக்கு நரேந்திரனின் கேலிப் பார்வையும் அந்த அலட்சியச் சிரிப்பும் மனதில் உதித்து சினததை அதிகப்படுத்தியது. என்ன ஒரு திணக்கம் அவனுககு!

அவன் மீது காதல் வயப்பட்டதால்.. அவள் புத்திதான் பேதலித்து விடுவாளா!

அவன் ஏமாற்றியதை உணர்ந்ததும், இவ்வளவு நாள் அவன் காதலித்தது நடிப்பு என்பதை உணர்ந்ததும் அவளுக்கு தெளிவு வந்து விடாதா?

இன்னமும் அவனையே நினைத்து மனதுள் உருகிக் கொண்டிருக்க... அவள் என்ன முட்டாளா?

யோசித்து தீர்மானமாய் முடிவெடுத்தாள் உதயரேகா.

எவ்வித பதட்டமுமில்லாமல் எஸ்டேட் பங்களாவுக்குள் திரும்பவும் நுழைன்தாள் அவள்!

---



10

உதயரேகாவின் நினைப்பு பொய்க்கவில்லை. அவள் திரும்பவும், எவ்வித சங்கோஜமும், சங்கடமும் இல்லாமல் வேலைக்கு வருவாள் என மின்ஷல்குமாரி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவள் வீட்டினுள் நுழைவதைப் பார்த்ததும் அவ்ள் முகம் கறுத்டதது.

விடுவிடுவென முன்புறம் அவள் பக்கம் ஓடி வந்தாள். சிடுசிடுத்த குரலில், இன்னும் நீ கிளம்பவில்லை...? மூட்ண்ட முடிச்சுகளை எடுத்துக் கொண்டு போக வந்தாயா? என்றதும் உதடுகளை சிலுப்பியவாறு அவளைப் பார்த்தாள் உதயரோக.

நான்.. போக வேண்டுமா? எதற்கு...? என்றாள் புரியாதவள் போல் புருவங்களை உயர்த்தியவாறு.



அவள் அப்படிக் கேட்டது மின்னல்குமாரியின் முகத்தில் கோபக்கோடுகளை அதிகப்படுத்தியது.

ஓஹோ! அப்படியானால் நான் நரேன் டியருடன் சந்தோஷமாக பொழுதுகளை கழிப்பதை வயறெரியப் பார்க்கப் போகிறாய். அப்படித்தானே?

அவளது பதிலைக் கேட்ட உதயரேகாவின் முகமும் அனலாய் சிவந்தது. ம்ஹூம்! அப்படி சில ஈனப்பிறவிகள் கொஞ்சுவதை பார்த்தாலோ... ரசித்தாலோ.... என் கண்கள்தான் குருடாகப் போய்விடும்....! என்றாள் சூடாக.

நறநறவென பற்களைக் கடித்தாள் மின்னல்குமாரி.

என்னிடம் நீ பேச்சில் கூட ஜெயிக்க முடியாது. விடமாட்டேன்... என்பது போல் முறைத்தவள்,

சரிதான்... அந்த விஷயம்... பழைய குருடியான.. நரேனை காதலித்த ஈனப்பிறவியான... உனக்குத் தெரிந்ததுதானே! என கோபம் குறையாமல் முடிக்கவும் செய்தாள்.

அவள் மூச்சு வாங்க கொதித்து கோபப்படுவதை அலட்சியமாய் பார்த்த உதயரேகா, இவளிடம் என்ன வெட்டிப் பேச்சு? என்பதுபோல் உள்ளே விடுவிடுவென அகல முயன்றாள்.

அதையும் கைகளை உயர்த்தி தடுத்தாள் மின்னல் குமாரி.

முதலில்... என் கேள்விக்கு பதில் சொல்.. என்றாள்.

பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் வேலை பார்ப்பது உன்னிடமில்லை. மதிப்பிற்குரிய சாந்தினி அம்மாள் அவர்களிடம்தான்.

சாந்தினி அம்மாள் யார்? எனது அத்தை... நான் அவர்களது அன்பு மருமகள்...

அப்படி நீ மருமகளாவது முதலில் நடக்கட்டும்.. அப்புறம் பதில் சொல்கிறேன்...

அவள் கைகளை தட்டி விட்டவாறு உள்ளே தன் ரூமை நோக்கிச் சென்றுவிட்டாள் உதயரேகா.

மின்னல்குமாரி என்ன செய்ய என ஓரிரு கணம் விழித்துவிட்டு கைகளை தேய்த்தபடி நடந்தாள்.

நல்லவேளையாய் நடந்த விஷயம் எதுவும் சாந்தினி அம்மாளுக்கோ பத்மினிக்கோ வேறு யாருக்கும் தெரியாததாகவே இருந்தது.

அதனாலே காலை டிபன் முடிந்து எஸ்டேட் அலுவலக ரூமை நோக்கி கிளம்பிய அவளை சாந்தினி அம்மாளே கூட்டிப்போய் மின்னல்குமாரியிடம் அறிமுகப்படுத்தினாள்.

இது... என் உறவுப் பெண்... என அவளை அறிமுகப்படுத்தி வைக்க அப்போதுதான் மின்னல்குமாரியைப் பார்ப்பது போல் பெரிதாய் ஒரு வணக்கத்தை போட்டுச் சமாளித்தாள் உதயரேகா.

பதிலுக்கு மின்னல்குமாரியும் போலியாய் ஒரு நமஸ்கரிப்பு செய்தவள், இது... உங்கள் அலுவலக செகரட்டரி..? உங்களிடம் வேலை பார்ப்பவள். அப்படித்தானே? என வேண்டுமென்றே வேலை பார்ப்பவளிடம் அழுத்தம் கொடுத்து மட்டம் தட்டினாள் அவள்.

ஆனால் சாந்தினி அம்மாளோ, அவள் வேலை பார்த்தாலும், வேலைக்கு வந்த கொஞ்ச நாளிலே... நம் குடும்பத்திலே ஒருத்தி போல் ஆகிவிட்டாள். நல்ல திறமைசாலி...! என சொல்லவும் மின்னல்குமாரியின் முகம் கறுத்தது.

அதனாலே விடாது. அம்மா, வேலை பார்ப்பவர்கள்... வேலைக்காரர்களாய்த்தான் இருப்பார்கள். வீட்டுப் பெண்கள் போல் அவர்களால் ஒரு போதும் வர முடியாது... என்றதும் சாந்தினி அம்மாளும் பதிலுக்கு இல்லை குமாரி. நீ நினைப்பது தவறு. அவர்களும் நம்மைப் போல் மனிதர்கள் தானே? அதிலும் நம் உதயரேகா கெட்டிக்காரி. வந்த கொஞ்ச நாளிலே நம் குடும்ப பாரம்பரியங்களை புரிந்து கொண்டு... எல்லா விஷயங்களையும் கற்றுக்கொண்டாள்... என மறுபடியும் சொல்ல மேலும் எரிச்சலானாள் மின்னல்குமாரி.

அதிலும் உதயரேகாவை தன் முன்னிலையிலே திறமைசாலி, கெட்டிக்காரி என விளிப்பது அவளுக்கு ஆத்திரத்தையே கிளப்பியது.

திரும்பவும் நிமிர்ந்து கண்களை உருட்டி விழித்தவள், ஆமாம்... ஆமாம்... நீங்க்ள சொல்வது போல் பெரிய கெட்டிக்காரிதான்... வீட்டு ஆண்களை மயக்க நினைக்கம் சாகஸம் நிறைந்தவர்கள்தான்..! என குத்திப்பேசினாள்.

உதயரேகாவோ இவளது பேச்சையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டிய அவசியம் நமக்கில்லை. பதிலடி கொடுத்து விட வேண்டியதுதான் என நினைத்தவள், அப்படி மயக்கும் வித்தையை என்னை விட நீங்கள் நன்று அறிந்து வைத்திருக்கிறீர்களே... அது உங்களுக்கு மறந்து போயிற்றா? என்றாள்.

அதற்கும் மின்னல்குமாரி விடவில்லை. நான் ஒன்றும் மயக்கவில்லை. மய்க்க வேண்டிய அவசியமுமில்லை. இது எனக்கு உரிமையுள்ள இடம்... என்றாள் உதயரேகாவை முறைத்தவாறு.



ஆமாம்.. உரிமையுள்ள இடம்... அதில்தானே உன்வீரத்தை, சாகஸத்தைக் காட்ட முடியும்? என அவள் சொல்லியதையே அவளுக்கு திருப்பினாள்.

அவர்கள் பேச்சும் செயலும் சாந்தினி அம்மாளை ஓரளவு கலவரப்படுத்தியது என்றே சொல்லலாம். என்ன... இது.. சம்பந்தமில்லாமல் ஏதேதோ பேசுகிறார்கள் என்றே எண்ணினாள். மேலும் இவர்களுக்கு முன்பே ஒருவரையொருவர் தெரியும் என்பதும் புரிந்தது.

நீங்கள் பேசுவதைப் பார்த்தால்... உங்களுக்கு முன்பே பழக்கம் உண்டா? என்றாள் சாந்தினி அம்மாள் தன் மூக்கு கண்ணாடியை உயர்த்தியவாறு.

ஆமாம் அம்மா... நாங்கள் இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள்தான்... என தன்னிலையாய் விளக்கம் கொடுத்து கொண்டிருந்த கோபத்தை தணிக்க ஆரம்பித்தாள் உதயரேகா.

ஆனால் மின்னல்குமாரியோ, ஒரே காலேஜில் படித்தோம். ஆனால் இவளிடம்ட நான் பேசுவது கூட கிடையாது... என்றாள் மறுபடியும் குத்தலாய்.

பதிலுக்கு கொடுக்க உதயரேகாவிற்கு வாய் தறு துறுத்தாலும், சாந்தினி அம்மாள் முன் இப்படி மல்லுக்கட்டி சண்டையிடுவது முறையாகாது என நினைத்தவள், வெவ்வேறு பிரிவுகளில் படித்தோம் என்பதால் பார்க்கும் சந்தர்ப்பும் குறைவு..! எனவும் சமாளித்தாள்.

விஷயம் புரியாமல், ஆனாலும் நீங்கள் இருவரும் தெரிந்தவர்களாய் இருப்பது நல்லதாய் போயிற்று... என்கவும் இருவரும் திகைக்கவே செய்தனர்.

எதற்கு அப்படிச் சொல்கிறீர்கள்? என்றதும்,

எல்லாம் நம் நரேனுக்கு வசதிதான்..! என்றாள் சாந்தினி அம்மா;ள மறுபடியும் புதிராய்.

அதன் பின் உதயரேகா அங்கு நிற்கப் பிடிக்காமல் விறுவிறுவென அலுவலகம் சென்றுவிட்டாள்.

தனக்குரிய வேலைகளை சிரத்தையாய் கவனிக்க ஆரம்பித்துவிட்டாள்.

ஆனால்.. எல்லாவற்றையும் விட அலுவலகத்தில் நரேந்திரனைப் பார்த்ததும் தான் அவளுக்கு ஆத்திரம் எரிமலை போல் கொப்பளித்தது.

சரியான கல்நெஞ்சக்காரன்! எல்லா அக்கிரமங்களையும் செய்துவிட்டு ஒன்றுமே நடக்காதது போல் ஒன்றுமே தெரியாத அப்பாவி போல் அல்லவா நடமாடி வருகிறான்.

இவளை சும்மாவிடக்கூடாது. நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்விகள் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் தான் அவள் மனது ஆறும். பெண்ணிடம் விரும்புவது போல் நடித்து ஏமாற்றுவது என்ன ஒரு பெரிய வீரத்தனமா?

அவள் நினைத்து அலுவலக பைலை காட்டும் சாக்கில் ஒவ்வொரு முறை நரேந்திரனை நெருங்கும் போதும் நந்தி போல் குறுக்கே வந்து நின்று கொண்டிருந்தாள் மின்னல்குமாரி. இவள் சம்பந்தமில்லாமல் அலுவலகம் வருவதே தப்பு! இதில் போதாதென்று குறுக்கே வேறு வந்து நிற்கிறாள். நரேந்திரனைப் பார்த்து அடிக்கடி அசடாய் இளித்துக்கொண்டு... நீங்கள் வேலை பார்க்கும் ஸ்டைலை பார்க்க வந்தேன் டியர்... என சினிமாக் கதாநாயகி போல் உடம்பை குலுக்கி மினுக்கி பேசிக்கொண்டு.. இவளை என்ன செய்வது? இந்த மின்னல் குமாரியை எப்படித் தடுப்பது எனவே யோசித்தாள் உதயரேகா.

ஆனால் அவளோ, இவ்வளவு சொல்லியும் உனக்கு அறிவில்லை..? இன்னமும் என் காதலரை துரத்துகிறாய்? நரேன்.. என் ... டியர்.. என்னவர்... இன்னும் உனக்கு அது உரைக்கவில்லை...? என சீண்டி வெறுப்பேற்றினாலும் உதயரேகா அதை சட்டை செய்யாமலே நடந்தாள்.

இவள் போன்ற ஈனப்பிறவிகளுடன் வீணாக வாயைக் கொடுத்து பேசுவதே தவறு... என விலகியே சென்றாள். ஆனால் மின்னல்குமாரிதான் அலுவலக பணியாளர்கள் பார்க்கிறார்கள் என்ற உணர்வே இல்லாமல்சதா நரேந்திரன் பின்னாலே வால் பிடிப்பது போல் சுற்றிக் கொண்டே இருந்தாள்.

ஓரிரு சமயம் இதைக் கவனித்த நரேந்திரனே எரிச்சலடைந்து, என்ன இது.. என்னையே சுற்றிக் கொண்டு இருக்கிறாய்? போய் அம்மாவைப் பார். அவர்களிடம் ஏதாவது பேசிக்கொண்டிரு...! என்றெல்லாம் சொல்லிப் பார்த்தான்.

ஆனால் அப்போதெல்லாம் போவது போல் பெரிதாய் தலையாட்டி அகலும்ம மின்னல்குமாரி வெளியே செல்லாமல் சுவர்ஓர மறைவில் போய் நின்று கொண்டு நரேந்திரன் ரூமையே பார்க்க ஆரம்பிப்பாள்.

அவள் நடவடிக்கையெலலாம் உற்றுக் கவனித்த உதயரேகா ஒரு விஷயத்தை கண்டுபிடித்தாள்.

நரேந்திரனை இப்படி அடிக்கடி வைத்த கண் வாங்காமல் பார்க்கும் அளவுக்கு மின்னல்குமாரிக்கு அவ்வளவு ஆசையா... என வியந்தவள்... சற்று ஆராய்ச்சிக்குப் பின் அதை கண்டுபிடித்தாள்.

மனின்ல்குமாரி நரேந்திரனை பார்ப்பதைத் விட உதயரேகா செனறு அவனுடன் பேசி விடக்கூடாது... அடிக்கடி அவள்ள பேச விடக்கூடாது... அடிக்கடி அவளை பேச விடக்கூடாது என்பதிலே கவனமாய் இருந்தாள்.



அப்படி நரேந்திரனுடன் உதயரேகா ஏதாவது அலுவல் விஷயங்களை கேட்டுக் கொண்டிருந்தாலும் பொறுக்க முடியாமல் ஏதாவது பேச்சும் கொடுத்து இடைஞ்சல் செய்வதிலேயே குறியாயிருந்தாள் மின்னல்குமாரி.

இவளை என்ன செய்வது? எப்படித் தடுப்பது? என சில நேரம் செய்வதறியாமல் தவிக்கத்தான் செய்தாள் உதயரேகா.



## 11

உதயரேகாவிற்கு எப்போதும் எந்த சூழ்நிலையில் நரேந்திரனைப் பார்த்தாலும் பற்றிக் கொண்டுதான் வரும். ஆனால் அடக்கிக் கொள்வாள். தன் உணர்ச்சிகளுடன் விளையாடியவன் முன் எவ்வித உணர்ச்சியைக் காட்டாமல் இருப்பதே சரி என எண்ணினாள்.

மேலும் மின்னல்குமாரி, நரேந்திரன் இருவரது திட்டப்படி அப்படி காதலித்து ஏமாற்றினால், அவள் ரொம்பவும் உடைந்து விடுவாள் என்பததானே அவர்களது எதிர்பார்ப்பு! அந்த எதிர்பார்ப்பு படி அவள் பாதிப்படைந்தது போல் முகத்தை சோகமாய் வைத்துக் கொண்டு நடமாடினால் அது அவர்களுக்கு வெற்றி பெற்றது போல் அல்லவா ஆகிவிடும்?

அதனாலே சோகங்களை எல்லாம உள்மனதில் வைத்து பூட்டி கொண்டுதான் நடமாடினாள். அதிலும் மின்னல்குமாரி முன் கொஞ்சமும் வெளிக்காட்டாமல் மகிழ்ச்சியாய் இருப்பது போல் கூட நடித்தாள்.

மின்னல்குமாரியோ அவளை எங்கு பார்த்தாலும் கடித்து திங்காத குறையாய் வெறியோடுதான் இருந்தாள். எதையாவது முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வம்பிழுக்கவே முயன்றாள்.

அலுவலகத்திற்கு ஒரு நாள் நரேந்திரன் வருவதற்கு முன் வந்தவள் தாம் தீம் என பணியாளர்களை விரட்டி குதிக்கத்தான் செய்தாள். என்ன இது? நரேன் டியருக்கு... இந்த மஞ்சள் வண்ணம் பிடிக்காது என்று தெரியாது..? எல்லாவற்றையும் கண்ணுக்கு குளிர்ச்சியான பச்சை வண்ணத்திற்கு மாற்றுங்கள்...! என்றாள்.

அவள் சொன்னதால் அலுவலக சுவரில் இருந்து திரைச்சீலை வரை பச்சை வண்ணத்திற்கு மாறியது. ரூமின் ஏர்கண்டஷனர் சரியில்லை. வேறு நல்ல பிராண்ட் கண்டிஷனர் வாங்கி மாட்டுங்கள் என மாற்றினாள். அவன் உட்காரும் குஷன் நற்காலி, மேஜை என எல்லாவற்றையும் வாஸ்து சாஸ்திரம் எனச் சொல்லி திசைகள் மாற்றி போடச் சொன்னாள்.

உதயரேகா அவன் என்ன மாற்றம் சொன்னாலும் தலையாட்டியபடி பணியாளைக் கூப்பிட்டு மின்னல் குமாரி சொல்வதை கேட்கும்படி கூறிவிட்டு அகன்று விடுவாள்.

இப்படித்தான் போய்க்கொண்டிருந்த மின்னல்குமாரி ஒருநாள் எல்லை மீறியவளாய் அவளைப் பார்த்து, ஏன் உதயரேகா, நீ என் நரேன் டியருக்கு செகரட்டரியாக வேறு இருக்கிறாய்? பார்ப்பதற்கு இன்னும் கொஞ்சம் அழகாகத் தெரிந்தால் நன்றாக இருக்குமே? என்னிடம் சில பியூட்டி க்ரீம்கள் இருக்கிறது. உபயோகிக்கிறாயா? என அக்கறையாய் கேட்பது போல் அவள் அழகை மட்டம் தட்டி பேச, பதிலுக்கு உதயரேகா சினமாய் முறைத்தவள், பார்.. மின்னல்குமாரி, என்னுடைய பர்ஸனல் விஷயங்களில் தலையிடாதே. உன் வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்..! என்று கடுமையாய் எச்சரித்தும் பயந்து விலகியே போனாள்.

ஆனாலும் அவளுக்கு எப்படியாவது எந்த வழியாவது உதயரேகாவை எரிச்சல் படுத்த வேண்டும். அவள் அப்படிப் புழுங்கித் தவிப்பதை ஆனந்தமாய் ரசிக்க வேண்டும் என்றே புத்தியில் ஓடியது.

அதனாலே அவள் இருக்கும் சமயங்களில் அவளை வெறுப்பேற்ற வேண்டுமென்றே நரேந்திரன் நரேன் டியர், நரேன் டார்லிங், நரேன் செல்லம் என அழைத்துக் கொஞ்சுவாள். சினிமாக் கதாநாயகி போல் குனிந்து பைலை பார்த்துக் கொண்டிருக்கும் அவன் கழுத்தை வளைத்துப் பிடித்துக் கொள்வாள்.

அக்கறையாய் ஏதோ சந்தேகம் கேட்பது போல் அவன் தோளோடு சாய்ந்தபடி பேசுவாள். தனியே நடக்கத் தெரியாதவள் போல் அவன் கரங்களோடு கோர்த்தபடியே நடப்பாள். அவளின் இந்த அதீத கொஞ்சல் நடவடிக்கைகளில் நரேந்திரனே சில சமயம் எரிச்சலடைந்து, இது.. அலுவலகம்... பணியாளர்கள் இருக்கிறார்கள். இங்கு டீஸன்ஸி முக்கியம்... என கடிந்து கொள்ளும் போது, பயப்படாதீர்கள் நரேன் டியர். இது நம் அலுவலகம். நம் பணியாளர்கள்.. என அசடு வழிந்து அதையும் சமாளிப்பாள்.

மின்னல்குமாரி முன் காட்டிக் கொள்ளாவிட்டாலும் உதயரேகாவிற்கு அவளது கொஞ்சல் பயங்கர எரிச்சலை ஏற்படுத்தும். வெட்கம் கெட்ட ஜென்மங்கள்... என முணுமுணுத்தபடி அகல்வாள்.

அவள் தடுத்தாலும் மறந்தாலும் பழைய எண்ணங்கள் பீறிட்டுக் கிளம்பும். முன்பு நரேந்திரன் இப்படித்தானே அவளை சுற்றி வந்து கொஞ்சினான்? காதல் வசனம் பேசினான்? ஏன் ஓரிரு சமயம் பெரிய ரோமியோ போல் அணைக்கக் கூட செய்திருக்கிறானே?



எல்லாமே.. அவனது நடிப்பாம்! மின்னல்குமாரிக்காக அவன் செய்த பழி வாங்கும் விளையாட்டாம்..! எவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

சில சமயங்களில் அவன் நடந்து கொண்டதை நினைத்துப் பார்க்கும் போது அவளுக்கு பயங்கர ஆத்திரம் கிளம்பும். நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்வி கேட்டு அவனை திணற அடிக்க வேண்டும்என துடிப்பாள்.

அதே கொதிப்பான மனநிலையில் ஓரிரு சமயம் அலுவலகத்தில் தனியாக இருக்கும் அவனிடத்தில் வெடித்தும் இருக்கிறாள். எவ்வளவு கேவலமான செயலைச் செய்திருக்கிறீர்கள்? மின்னல்குமாரி சொன்னதற்காக சினிமா வில்லன் போல் கபடநாடகம் ஆடிஎன்னிடம் நடித்திருக்கிறீர்களே... உங்களுக்கு வெட்கமா இல்லை...?

அவள் எவ்வளவு ஆத்திரப்பட்டுக் கேட்டாலும் கொஞ்சமும் சுரணை இல்லாதவன் போல் ஒரு இளிப்பு இளித்தபடி நிற்பான் நரேந்திரன். அவள் என்ன கேள்வி கேட்டாலும் பதில் வராது. அதே இளிப்பும் அசட்டுப் புன்னகையையும் தான் வெளிப்படுத்துவான். இவனிடம் பேசுவதே பாவம்..! என கோபித்துச் சென்று விடுவாள் அவள்.



## 12

ஒரு மாதம் இப்படியே சிந்தனையும், தவிப்புமாய் கழிந்திருந்தது.

அன்று... பங்களா மொட்டை மாடியில் இரவு நேரம், அமைதியான மனநிலையில் காற்று வாங்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது.. உதயரேகா கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை. பின்னால் நரேந்திரனின் கனைப்புக் குரல். கைகளைக் கட்டியபடி மாடிப்படியேறி வந்து கொண்டிருந்தான் அவன்.

அவனைப் பார்த்ததும் அவள் முகம் போன போக்கே சரியில்லை. அமைதியான நிலவொளியை, அசையும தென்னங்கீற்றுகளை, சுகந்தமான தென்றலை இனிமையாய் அனுபவித்து கவலைகளை மறப்போம் என்று பார்த்தால்... இவன் வந்து தொலைத்திருக்கிறானே!

ஏதோ.. பார்க்கக் கூடாதவனை பார்த்து விட்டது போல் விடுவிடுவென முகம் வெட்டி அகலப் போனாள்.

அவளுக்கு நேராய் வந்து நின்று கொண்டு தடுத்து நிறுத்தினான் நரேந்திரன்.

அவன் கை விரல்கள் மெல்ல அவளது முகத்தைத் திருப்ப அவன் விழிகள் பெரிதாக உற்றுப் பார்த்தான்.

அட... முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் அழகை இன்றுதான் பார்க்கிறேன். அடாடா கொள் வெடித்தால் கூட முகம் என்னமாய் ஜொலிக்கிறது...?

ச்சீ... விடுங்கள்.

ஓங்கி அவன் கைகளைத் தட்டி விட்டாள் அவள்.

அவள் நரேந்திரனாவது அசருகிறதாவது...?

அவளின் உதடு துடிக்கும் கோபத்தை ரொம்பவும் ரசித்தவன், காதலிக்கு தொட்டால் கோபம் கூட வருகிறதா...? இதோ... பாரம்மா... இது ஒன்றும் அந்நிய முகம் இல்லை.. உன் முன்னாள் காதலனின் அன்பு முகம்தான்! என்றான் குரலில் ஏளனம் பொங்க.

அவள் இன்னும் ஆத்திரத்தில் விரல்களைப் பிசைந்தாள்.

கைகளில் மட்டும் ஏதாவது வசமாக அகப்பட மறுக்கிறதே..! கையில் மட்டும் கூராய் எதுவும்கிடைத்து விட்டால் இந்த முகத்தை அப்படியே குத்தி... கிழித்து...

பொங்கிய ஆவேசத்தை எல்லாம் அடக்கவே சிரமப்பட்டாள் அவள்.

அவள் உணர்ச்சிகளை எல்லாம் புரிந்தவன் போல் அவனும் தயாரானான்.

என்ன கைகள்... அந்த பிஞ்சு விரல்கள் எல்லாம் பரபரக்கிறதா? ஓங்கிக் கன்னத்தில் அறை துடிதுடிக்கிறதா..? அவ்வளவு வேகமா அகைளுக்கு? என்றவன் ஒரு கணம் நிறுத்த பார்வையில் முறைப்பைக் கூட்டியபடி, எங்கே அறை பார்ப்போம்..? அந்த உன் தைரியத்தையும் தான் பார்த்து விடுகிறேன்! என்றான் சவாலாய்.

அவன் அடிப்பதற்கு வாகாய் கன்னங்களை முன் வந்து காட்டுவது போல் கூட உதயரேகாவிற்கு ஒரு கணம் தோன்றியது.

இவன் செய்த காரியங்களுக்கு இவனைப் பளார் பளார்! என அறையக்கூடச் செய்யலாம். தப்பில்லை தான்! ஆனால் அப்படி அறைவதற்கு வட விரல்கள் இவன் மேல் பட வேண்டியிருக்குமே!

அப்படி இவனைத் தொடுவது கூட பெரும் பாவமே! என நினைத்தாள் அவள்.

என்ன யோசிக்கிறாய்? தைரியமிருந்தால் அடிபார்ப்போம்... என்றான் அவன் மறுபடியும்.



அவள் தோள்களை அலட்சியமாய் குலுக்கியவள்

ம்ஹூம், ஈனப் பிறவிகளை பார்வையால் பார்ப்பதே பாவம்... இதில் தொட்டு அடிக்க வேறு செய்ய வேண்டுமா? என்றாள்.

அவள் சொல்வதைக் கேட்டு அவன் கண்களளின் ஜொலிப்பு கூடியது.

நான்... ஈனப் பிறவி.. என்றால் நீ மட்டும் யாரம்மா? என்றான் தலை சாய்த்து.

இவனிடம் என்ன விளக்கம் சொல்வது? என யோசித்தாவள் மறுகணமே படபடவென பேசினாள்.

நான் தப்பு ஒன்றும் செய்யவில்லை...

நீ செய்தது தப்பு இல்லை, துரோகம்! அவன் திருத்தினான்.

துரோகமா? நானா.. உதயரேகாவிற்கு தன்னை மீறி சிரிப்பு வந்தது.

சிரிக்காதே! நீ செய்ததை எல்லாம் நினைத்து நீதான்... வெட்கப்பட வேண்டும்.!

உதயரேகா நிமிர்ந்து அவனையே முறைத்தாள். என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்?

" மின்னல்குமாரி அழகிப் போட்டியில் தோற்றது இயல்பாக நடந்த ஒன்று. அதற்காக நான் ஏன் வெட்கப்பட வேண்டும்?

அவன் அவசரமாய் குறுக்கிட்டான்.

நான் அதைச் சொல்லவில்லை...

அடுத்த **அக்ஷயா** மாத நாவலில்

**அகிலாகோவிந்த்** எழுதும்

**"காத்திருப்பேன் கண்மணி!"**

உன்னதமான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!

பின் வேறு என்ன? என்பது போல் அவள் நிமிர... அவன் அவள் விழிகளை ஊடுருவினான்.

நான் சொல்ல வருவது.. மனோகரன்.. பற்றி...!

மனோகரனா? யார் அது?

அவள் முகம் திகைப்பாகியது.

ஆம்... மனோகரன்... மின்னல்குமாரியின் ஒரே சகோதரன்! அவனை நீ ஏமாற்றவில்லை? காதலிப்பது போல் நடித்து கடைசியில் எட்டுத்தறுக்கவில்லை..? அவன் சாவுக்கு நீதானே காரணம்...?

அவன் படபடவென பேசி விட்டுப் போக அவள் குழம்பியவளாய் அவனையே பார்த்தாள்.

என்ன உளறுகிறீர்கள்...? மனோகரனையோ... அவன் மின்னல்குமாரியின் சகோதரன் என்பது பற்றியோ... எனக்கு எதுவும் தெரியாது...

சும்மாவாக நடிக்காதே! மனோகரனை உன் பின்னாலே நீ சுற்று வைத்து... உன் அழகில் மயக்கி... அவனை பித்தன் போல் மாற்றி... கடைசியில் அவனை தற்கொலை செய்யவும் வைத்து விட்டாயே..! எவ்வளவு பெரிய பாதகி நீ..! தோழி மின்னல்குமாரியின் சகோதரன் என்று கூட பார்க்காமல் தோழிக்கே துரோகம் செய்திருக்கிறாயே...?

அவன் பாட்டுக்கு அடுக்கிக் கொண்டே போக... அவள் படபடவென சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

அவளின் தொடர்ந்த சிரிப்பலையைக் கண்ட நரேந்திரன் திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தினான். கண்களை உருட்டியபடி முறைத்தான்.

நான்.. வேதனையான விஷயத்தைச் சொல்வது உனக்கு கேலியாக இருக்கிறதா? அவ்வளவு கல்நெஞ்சமா உனக்கா?

வேதனை! கல்நெஞ்சம்..!

அவள் மறுபடியும் உச்சரித்துப் பார்த்தபடி சிரிக்க ஆரம்பித்தாள்.

உன் சிரிப்பை முதலில் நிறுத்து...! என்றான் அவன் ஆத்திரமாய்.

அவள் டக்கென சிரிப்பை நிறுத்தி பதிலுக்கு முறைத்தாள், சரிதான்! ஒரு முட்டாள் இன்னொரு முட்டாளுக்கு கதை ஒன்று சொல்லியிருக்கிறது. அதை இந்த முட்டாளும் உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கிறது...!

ஹேய்... என்ன உளறுகிறாய்..?

அவன் சுட்டு விரலை எச்சரிப்பது போல் உயர்த்தினான்.



அவள் சட்டை செய்யாமல் மறுபடியும் சிரித்தாள்.

மின்னல்குமாரியின் மீது அவ்வளவு மயக்கமா? அவள் எதைச் சொன்னாலும் நம்பிவிட வேண்டியது தானே. காதுகளில் பூவென்ன... பூக்குவியலையே சுற்றி விடுவாள்...

அவன் சற்று முன்னால் வந்து குரலை உயர்த்தினான்.

நீ என்னதான் சொல்ல வருகிறாய்?

எனக்கு மின்னல்குமாரியை மட்டும்தான் கல்லூரி வாழ்க்கையில் தெரியும். மற்றபடி அவள் குடும்பத்தைப் பற்றியோ, அவள் சகோதரன் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது.. ஏன்... நான் அவர்களை பார்த்தது கூட கிடையாது.

நீ சொல்வது உண்மையா?

எதையும் மறைக்க வேண்டிய அவசியம எனக்கில்லை.

அவள் கொஞ்சமும் அச்சமின்றி கைகளை விரித்துச் சொன்னது அவளை நம்ப வைத்தது.

தலையில் கை வைத்தபடி பெரும் சிந்தனைக்குப் போனான் நரேந்திரன்.

முதல் முறையாய் அவன் தடுமாறுவதைக் கண்டு அவளும் அதிர்ச்சியானாள்.

இவன் சொல்வதைப் பார்த்தால் அந்த மின்னல்குமாரி என்னென்னவோ பொய்களைச் சொல்லி ரீல் விட்டிருக்கிறாளா?

மனோகரனாம்... அவளது சகோதரனாம்! அவன் உதயரேகாவின் அழகில் மயங்கி காதல் கொண்டானாம். உதயரேகாவும் அவனைக் காதலிப்பது போல் நடித்தாளாம். கடைசியில் உதயரேகா ஏமாற்றியதை உணர்ந்து அந்த மனோகரனும் தற்கொலை செய்து கொண்டானாம்!

என்ன.. ஒரு கட்டுக்கதை...!

உண்மையிலே... அந்த மனோகரனைப் பற்றி, அப்படி ஒரு சகோதரன் இருப்பது பற்றிகூடத் தெரியாதே! மின்னல்குமாரி கல்லூரியில் பழகிய நாட்களில் அது பற்றி சொன்னது கூட கிடையாதே!

அப்படியானால்.. நரேந்திரனிடம் மின்னல்குமாரி நன்கு புளுகியிருக்கிறாள்!

எதற்காக...?

அவள் மீது வெறுப்பு வரவேண்டும் என்பதற்காகவா? அப்படி அவள் உதயரேகா மேல் வெறுப்பு வந்ததால் தான் நரேந்திரன்... மின்னல்குமாரியின்

கைப்பாவையாய் மாறி அவளின் கொடூரமான பழிவாங்கும் திட்டத்திற்கும் ஒத்துக் கொண்டானா?

நினைத்துப் பார்த்த உதயரேகாவிற்கு படபடவென எல்லாம் புரிவது போல் இருந்தது.

அந்த சாகஸக்காரி மின்னல்குமாரி இவனை தன் பழிவாங்கும் திட்டத்திற்கு வசப்படுத்த இப்படியெல்லாம் வசவுகளைச் சொல்லி நம்ப வைத்திருக்க வேண்டும்.

இவன் நரேந்திரனும் அவள் மீது உள்ள காதல் மயக்கத்தல்... அவள் சொன்னது எல்லாவற்றையும் அப்படியே நம்பி விட்டான்!

எவ்வளவு பெரிய அநியாயம்! அந்த சூழ்ச்சிக்காரி சொன்னாள்... என்றாள் இவனது அறிவு எங்கே போயிற்று?

கொஞ்சமாவது.. இப்படியெல்லாம் நடந்திருக்குமா..? என யோசித்துப் பார்த்திருக்க வேண்டாம்..?

எதற்காக இப்படி மதியிழந்து போனான்? எதனால் இப்படி மூடத்தனமாய் நடந்து கொண்டான்? ஒரு பெண் பொய் சொல்லி தன்னை ஏமாற்றுகிறாள் என்பது புரியாத அளவுக்கு முட்டாளாய் இருந்திருக்கிறானே!

அவ்வளவு பெரிய முட்டாளா இந்த நரேந்திரன்?

நிமிர்ந்து கோபமாய் பார்த்தவள், அவன் நரேந்திரன் இன்னமும் தலையைப் பிடித்தபடி தீவிர சிந்தனையில் இருந்தது கண்டு எரிச்சலே அடைந்தாள்.

முட்டாளுக்கு புரிந்ததா... இலலை இன்னும் புரிய விலலையா? என்றாள் ஆத்திரமாய்.



## 13

நரேந்திரன் அன்று படுத்தவனுக்கு தூக்கம் வந்த பாடில்லை.

நடை பயில்பவன் போல் ரொம்ப நேரம் தன் ரூமின் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தான்.

முதல் முறையாய் பொறி போல் மின்னல்குமாரியின் மீது ஏற்பட்ட சந்தேகம் விறுவிறுவென வளர ஆரம்பித்தது.



ஒருவேளை... நடந்தது எல்லாம் உதயரேகா சொல்வது போல் இருந்து மின்னல்குமாரி சொன்னது அத்தனையையும் பொய் என்று ஆகி விட்டால்?

நினைத்துப் பார்த்தவனுக்கு ஒரு கணம் உடம்பே நடுங்குவது போல் இருந்தது. அப்படி மட்டும் நடந்து விட்டால் எவ்வளவு பெரிய தவறு இழைத்தவனாய் அவன் ஆகி விடுவான்? கொஞ்சமா... நஞ்சமா... மின்னல் குமாரியின் வார்த்தைகளை நம்பி அவளுக்காக பழி வாங்குவதற்காக உதயரேகாவை எவ்வளவு துன்புறுத்தியாயிற்று? காதல் என்ற பெயரில் அவள் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் விளையாடியாயிற்று? அவை எல்லாம்.. எவ்வளவு பெரிய தவறுகளாய் மன்னிக்க முடியாத குற்றங்களாய் ஆகிவிடும்?

அதன்பின் உதயரேகாவைத்தான் நிமிர்ந்து பார்க்க முடியுமா? அவள் முகத்தில்தான் முழிக்க முடியுமா?

பெரும் பாவம் செய்த பாவி போல் அல்லவா ஆகிவிடும்!

அந்த நிலைமைக்கு நமக்கு வந்து விடுமா?

ஒரு கணம் நெற்றியில் கை வைத்தபடி திடுக்கிடலுடன் யோசித்தான் நரேந்திரன.

அவன் அப்படி பயப்படுவதற்கும் காரணமிருந்தது.

மின்னல்குமாரியின் குணத்தைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும். எப்போதுமே அவளுக்கு தான், தனது கொள்கை, தனது செல்வாக்கு என்றெல்லாம் ஒரு கர்வம் உண்டு. அவள் சில விஷயங்களில் அத்து மீறிப் போகும் போது அவனே கண்டித்திருக்கிறான். அவளைத் திருத்தவும் முயற்சித்திருக்கிறான்.

அப்போதெல்லாம் மின்னல்குமாரி திருந்துபவள் போல் தலையாட்டுவாளே தவிர முழுவதுமாய் தன் தவறை ஒப்புக் கொள்ள மாட்டாள். திருந்த முயற்சிக்க மாட்டாள்.

அதனாலே அவளது அந்த விடாத பிடிவாத குணத்தை அறிந்தே நரேந்திரனுக்கு அவள் மீது சந்தேகம் விழ ஆரம்பித்தது.

ஒரு முடிவிற்கும் வர.. முடியாமல் ரூமின் குறுக்கும் நெடுக்குமாக விறுவிறுவென நடந்தான் நரேந்திரன்.

முதலில்... மின்னல்குமாரியைப் பற்றிய உண்மையை கண்டு பிடிப்போம், அதன் பின் ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து முடிவெடுப்போம்.. என ஒரு தீர்மானத்திற்கு வந்தான் நரேந்திரன்.

மறுநாளே.... பிசினஸ் டூர் என சொல்லிக் கொண்டு யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் மின்னல்குமாரியின் சகோதரன் படித்த கல்லூரியைத் தேடிச் சென்றான் நரேந்திரன்.

## 14

மூன்று நாட்கள் பிசினஸ் டூர் சென்று விட்டு அன்று பங்களா திரும்பியிருந்தான் நரேந்திரன்.

வந்தவன் காலையில் வேலைக்கு வந்ததில் இருந்தே ஒருவித படபடப்புடன் இருப்பதை உதயரேகா கவனித்தாள். இடையிடையே என்றுமில்லாததா; அவனது பார்வை தன்னை திருட்டுத் தனமாய் வருடிச் செல்வதைக் கண்டு திடுக்கிடவே செய்தாள் அவள்.

அதற்காகவே எரிச்சலடைந்தவள் போல் அவனைச் சந்திக்காமல், பணியாளர்கள் மூலமாகவே பைல்களை அனுப்பி கையெழுத்து வாங்கினாள்.

அவன் எதிரே ரூமில் இருப்பதை தவிர்த்து எஸ்டேட் பணிகளை பார்வையிடச் செல்வது போல் அலுவலகத்தை விட்டு வெளியே கிளம்பினாள்.

அவள் அப்படிக் கிளம்புவதைப் பார்த்து, கூடவே, நானும் வருகிறேன்... என்று கிளம்ப ஆரம்பித்தான் நரேந்திரன்.

உதயரேகா திடுக்கிட்டுத் திரும்பியவள் அவனைப் பார்த்து முறைத்தாள்.

உங்களுக்கு இங்கு நிறைய வேலை இருக்கிறது இங்கு இருங்கள்... என்றாள்.

எனக்கு இங்கு வேலை இல்லை. அங்குதான் இருக்கிறது.. என்றபடி இரு பொருள் பட அவளை நோக்கி கையைக் காட்டினான் அவன்.

உங்களைத் தேடி உங்கள் அருமைக் காதலி இங்கு சுண்டிப்பாய் வருவார்கள். அதனால் நீங்கள் இங்கு இருப்பது அவசியம்... என்றாள் அவளும் விடாமல்.

அவள் அப்படிச் சொன்னதும் அவன் முகம் விசித்திரமாய் மாறியது.

அவளைக் காதலி என்று சொலலாதே... மின்னல் குமாரி என்றே சொல்..

அவன் கறார் குதலில் சொன்னதும் அவள் திரும்பி அதிசயமானாள்.

என்ன... அதற்குள் காதல் கசந்து விட்டதா?

காதலும் இல்லை, ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை.... அவன் குரல் சூடேறச் சொன்னது கண்டு நடக்கப் போனவள் நின்றே விட்டாள்.



விழிகளால் திரும்பி அவனை உற்றுப் பார்த்தாள்.

என்ன வேதாளம் திரும்பவும் மரம் ஏறுவது போல் தெரிகிறதே!

அவள் சொன்னதற்கு அர்த்தம் புரியாமல் அவன் திகைத்தான்.

அவள் கேலிச் சிரிப்பு சிரித்தாள்.

அதுதான்.... காதல் நடிப்பு! இம்முறை மின்னல் குமாரியிடம் நடித்து முடித்தாயிற்றா...?

அவள் கேட்டுக் கொண்டபடி அவனையே உற்றுப் பார்க்க... அவனோ பதில் சொல்லாமல் வேறு விதமான சிந்தனைக்குப் போயிருந்தான்.

உதயரேகாவிற்கு அதைக் கண்டும் பொறுக்க முடியவில்லை. மறுபடியும் சீண்டினாள்.

என்ன அப்படி ஒரு சிந்தனை...? இம்முறை என்ன சொல்வது என்றா... இல்லை அடுத்து விளையாட புதுக்காதலி கிடைப்பாளா என்றா...?

முதலில் என்னுடன் வா...!

சொல்லியபடி அவன் விறுவிறுவென ஜீப்பில் ஏறினான்.

இவன் என் உரிமையாய் அழைப்பது...? நாம் என்ன சொல்வது? என சினமாய் நினைத்து அவள் அப்படிடயே அசையாமல் நின்றாள்.

அவன் ஜீப்பிலேறி இஞ்சினை ஸ்டார்ட் செய்தவன் திரும்பி, ம்ம்.. உன்னைத்தான் ஏறு! என்று சொன்னதும் டக்கென கட்டளைக்கு கீழ்ப்படிந்தவள் போல் ஏறி அமர்ந்தாள்.

அவனது சிந்தனையின் வேகத்தைப் போலவே ஜீப்பையும் வேகமாய் ஓட விட்டான் நரேந்திரன்.

ஒன்றும் பேசாது இருந்தவள் அவன் சாலையையே வெறித்தவாறு இறுக்கமான முகத்துடன் ஓட்டுவதைப் பார்த்து புரியாமல் அதிரத்தான் செய்தாள்.

பத்து நிமிட பயணத்திற்குப் பின் பெரிய ஆலமர நிழல் ஒன்றில் சரக்கென நிறுத்தினான் நரேந்திரன்.

அவள் மெல்ல இறங்க... அவனுக்கு முன் கீழிறங்கி கைகளைத் தேய்த்தபடி நடந்தான். இரண்டு மூன்றடி நடந்து அமைதியான சூழலை உணர்ந்ததும் டக்கெனநின்றான்.

உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்... என்றான் அவளை நோக்கி முழுவதுமாய் திரும்பி.

என்ன விஷயம்...? என்பது போல் புருவம் உயர்த்திப் பார்த்தாள்.

மின்னல்.... மின்னல்குமாரியைப் பற்றிய விஷயம்...

அவன் சொல்ல ஆரம்பித்ததுமே அவன் என்ன சொல்லப் போகிறான் என்பது அவளுக்கு புரிந்து விட்டது. ஆயினும் தெரியாதவள் போலவே கேட்டாள்.

ஏன்... அவளுக்கென்ன..? என்றாள் குரலை உயர்த்திக் கொண்டு.

அவள் சொன்னது எல்லாம் பொய். உன்னைப் பற்றி இல்லாததும் பொல்லததுமாய் புளுகி இருக்கிறாள்...

அவன் குரலில் ஏற்றம் இறக்கம் காட்டி உச்சரித்தபோது அவளுக்கு சிரிப்புதான் பொத்துக் கொண்டு வந்தது.

அடடா... எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு! நல்ல ஆராய்ச்சிதான்! இகழ்ச்சியாய் உதடு சுழித்து அவள் சொல்ல... மறுபடியும் அவள் அருக்கே வநது கைகளை உயர்த்தினான் அவன்.

நான் சொல்வது உண்மை. மின்னல்குமாரியை இப்போதுதான் நன்கு புரிந்து கொண்டேன். அவள் உன்னைப் பழி வாங்க என்னை ஒரு கருவி போல் நன்றாக உபயோகித்து இருக்கிறாள். அதற்காக என்னிடம் நடித்து பொய்களைப் புளுகி ஏமாற்றவும் செய்திருக்கிறாள். அவன் நரேந்திரன் விறுவிறுவென சொல்லிக்கொண்டே போக அவள் சட்டென அமைதியானாள். அவன் பேசி முடிக்கும் வரை கைகளைக் கட்டிக் கொண்டு இருந்தவள் நிமிர்ந்து அவனையே முறைப்புப் பார்த்தாள்.

ஓஹோ! இப்போது எல்லா உண்மைகளும் தெரிந்து தெளிந்து விட்டீர்கள். அப்படித்தானே?

அவன் சீறலாய் இருந்தவன் சட்டென அமைதியாகி மெல்ல தலையை மட்டும் ஆட்டினான்.

சரி, இப்போது... என்ன செய்யப் போவதாக உத்தேசம்?

அவள் குரலில் கேலியோடுதான் கேட்டாள்.

அவன் நரேந்திரன் ஓரிரு கணம் அவள் முகத்தையே உற்றுப் பார்த்துவிட்டு, ஒன்றும் செய்யப் போவதில்லை.. என்றான் சலனமில்லாத குரலில்.



15

ரூமிற்கு வந்த உதயரேக தூக்கம் தொலைந்தவளாய் நிம்மதியின்றி நடந்து கொணண்டிருந்தாள்.

நரேந்திரன் எல்லா உண்மைகளையும் தெரிந்து கொண்டேன்... என்று தெளிவாய்ச் சொல்லி விட்டானே!

அப்படியானால்... அப்படியானால்... மின்னல்குமாரி மோசக்காரி என்பது இந்நேரம் அவனுக்கு புரிந்திருக்கும்!

அது போதுமே!

அது தெரிய வேண்டும் என்றுதானே அவள் ஆசைப்பட்டாள். அதற்காகத்தானே பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

இப்போது எல்லாம் சரியாயிற்று. மின்னல்குமாரியின் சுயரூபம் நரேந்திரனுக்கு புரிந்தாயிற்று.



இனி அவளைப் பற்றி... அவளுக்காக அவன் செய்தது பற்றியெல்லாம் மனம் கேள்விகள் கேட்கும். மூளையில் எது சரி... எது தவறு என்பது எல்லாம் உரைக்கும். அவனுக்கு புததியும் வரும்!

அவனுக்கு புத்தி வருகிறதோ இல்லையோ? இல்லை இன்னமும் முட்டாள்தனமாகவே அவன் இருந்துவிடப் போகிறானோ... என்னவோ.. போகட்டும்!

ஆனால்... இனி... அவளுக்கு இங்கு என்ன வேலை?

அவள் இனியும் இந்த எஸ்டேட் வேலையில் ஒட்டிக் கொண்டு... இது போல ஈனப்பிறவிகள் அடிக்கும் கூத்துக்களை பார்க்க வேண்டும் என்று அவசியமில்லையே!

ஏதோ... அவர்கள் சாந்தினி அம்மாள் சொன்னார்கள். அந்த அன்பு முகத்திற்காக, அவர்களின் நல்ல குணத்திற்கா அவள் இவ்வளவு நாள் சுரணை இல்லாதவள் போல் இருக்க ஒப்புக் கொண்டாள்.

இருந்தும் விட்டாள்.

இதோ... இன்று கதாநாயகனுக்கு உண்மை தெரிவது போல் நரேந்திரனுக்கு தெரிந்து விட்டது. மின்னல்குமாரியின் வேஷம் கலைந்து விட்டது...

இனி அவன் பாடு! அவள் பாடு!

என்னவும் செய்யட்டும்...

எப்படியும் போகட்டும்...

அவள் கிளம்பிவிட வேண்டியதுதான்..

இனி அவளை யாரும், எந்தக் காரணமும் சொல்லி தடுக்கவும் முடியாது!

கைகளைப் பிசைந்தபடி யோசித்தவள் குட்டி போட்ட பூனையாய் விறுவிறுவென அங்கும் இங்கும் நடந்தவள் கடைசியில் தீர்மானமாய் அந்த முடிவையும் எடுத்தாள்.

மறுநாளே.. சாந்தினி அம்மாளிடம் சொல்லிக் கொண்டு எஸ்டேட்டை விட்டு கிளம்பிவிட வேண்டியதுதான். மூட்டை முடிச்சுகளுடன் சொந்த ஊரைப் பார்த்து சென்று விட வேண்டியததான்!

சென்று விடலாம்!

அப்படியே...இந்த எஸ்டேட்டை... இங்கு நடந்தவைகளை... இங்கு சந்தித்தவர்களை... எல்லாம் மறந்து விடலாம்!

ஆனால்.. ஆனால்.. நரேந்திரன்?

அவனை மறக்க முடியுமா?

திடும்மென புதுசாய் ஒரு கேள்வி மனதில் முளைத்தபோது... அவளுக்கு சினமே கொதிப்பாய் ஏற்பட்டது.

நரேந்திரன்... என்ன பெரிய நரேந்திரன்? அவள் மறக்க முடியாத அளவுக்க அவன் என்ன மன்மதனா?

இல்லை... அவளை உருகி உருகிக் காதலித்த காதலனா?

இல்லையே! காதலிப்பது போல் நடித்த நயவஞ்சகன் அல்லவா?

அவனையா...இன்னும் நினைத்துக் கொண்டிருப்பாள்? மறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருப்பாள்?

என்ன ஒரு பேத்தல் இது..!

மனம் ஒருபுறம் யோசித்தாலும் இன்னொரு புறம, உன்னால் நரேந்திரன் மறப்பதை விடு.. தினம் தினம் அவனை பார்க்காமல் இருப்பது.. முடிகிற காரியமா? எனவும் கேட்டது.

இது என்ன புதுவகை குழப்பம்! இவ்வளவு நடந்த பிறகும் உள்ளூர அவன் மீது ஆசை இருக்கிறதா என அவள் திகைக்கவும் செய்தாள்.

அவன்... என்ன செய்தாலும்... குறி பார்த்து அவள் முகத்திலேயே சாணியை அடிப்பது போல் கரியைப் பூசினாலும்... அவனே கதி என மயக்கத்தில் கிடக்க... அவள்.. என்ன நரேந்திரன் பக்தையா? இலலை... அந்த அளவுக்கு அவன் மீது அவளுக்கு பித்துப் பிடித்து விட்டதா?

திடுக்கிட்டு அப்படியே யோசித்தவள் சுயபரிசோதனை செய்வதுபோல் தன்னையே தன் மனதையே விருப்பு வெறுப்பின்றி ஆழமாய் ஒருமுறை ஊடுருவிப் பார்த்தாள்.

அமைதியை நெஞ்சில் தவழ விட்டவாறே எண்ணங்களை ஒழுங்குப்படுத்திப் பார்த்தாள்.

ஒரு விஷயம், ஒரு உண்மை அவளுக்குப் புரிந்தது.

நரேந்திரனை இவ்வளவு நடந்த பிறகும அவள் மனம் நாடுவதும் விரும்புவது உண்மை தான்!

ஏனெனில், அவள் அனைப் போல் நடிக்கவில்லையே..!

உண்மையாகத்தானே... அவனை விரும்பினாள், காதலித்தாள்!

ஏமாற்றியது அவன்தான்! அவள் இல்லையே!

அப்படி இருக்கும்போது அவள் அவன் மீது வைத்த காதலும் மெய்தானே?

அவன் நாடகமாடட்டும்... அவளுக்க துரோகம் செய்யட்டும்.

ஆனால் அவள்...?

அவன் மீது தூய்மையான காதலைத்தானே வைத்தாள். உளமார... முழு மனதுடன்... மனப்பூர்வமாகத்தானே அவனை விரும்பினாள்?

அதனால்... இவ்வளவு நடந்த பிறகும் மனதில் அவள் நேசித்த களங்கமில்லாத நரேந்திரனின் பிம்பம் அப்படியே இருக்கிறது.

நிஜத்தில் அவன் மாறிவிட்டாலும்... அவள் நேசித்த... அவள் மனதில் பூஜித்த நரேந்திரன் நல்லவன்தானே!

அவன் நடித்திருந்தாலும், அவளைப் பொறுத்தவரை இனிமையாகப் பேசி காதலனாய் மன்மத சிம்மாசனத்தில் உட்கார்ந்தவன் தானே...!

அவனுடன் பழகிய அந்த கள்ளங்கபடமில்லாத நாட்கள்.. அந்த இனிய உணர்வுகள்... அவை போதுமே....



காலம் முழுவதும்... அவனை விட்டு விலகி இருந்தாலும்... அந்த உணர்வுகளை அடிக்கடி மனதில் ஓட விட்டு... ஆனந்தப் பட்டுக் கொள்ளவோ... திருப்தி அடைந்து கொள்ளவோ... அவளால் முடியும் தானே!

மனதில் தொடர்ந்து இது போன்ற நினைப்புகள் கிளம்பி அவளை சாந்தப்படுத்தவும் செய்தது.

அன்று அரைகுறையாய் தூங்கி விட்டு மறுநாள் காலை எழுந்ததும் முதல் வேலையாய் சாந்தினி அம்மாளைத் தேடிப் போனாள் உதயரேகா.

அம்மாளிடம் தான் வேலையை விட்டு விலகி ஊருக்குச் செல்லும் விஷயத்தைச் சொல்லவே சங்கடமாய்த்தான் இருந்தது.

ஆனால்தான் வேறு வழியில்லையே!

தடுமாற்றக் குரலில்தான் சொன்னாள். சாந்தினி அம்மாளும் தன் பங்கிற்கு அவளைத் தடுத்து நிறுத்தத்தான் முயற்சி செய்தாள்.

ஆனால் உதயரேகா, பாருங்கள் அம்மா, நரேந்திரன் இப்போது மின்னலகுமாரி பற்றி சகலமும் தெரிந்து தெளிந்து விட்டார். இனி உங்களுக்கு பயமில்லை. என் வேலையும் முடிந்து விட்டது. நான் கிளம்புகிறேன்! என்றவள் அதே பிடிவாதத்தோடு கிளம்பியும் விட்டாள்.

நரேந்திரனிடமும் ஒற்றை வார்த்தையில், கிளம்புகிறேன்.... என்று சொல்லிவிட்டு பதிலுக்கு காத்திராமல் கிளம்பினாள்.

கையில் தன் உடமைகளுடன் அவள் வாசலை நோக்கி நடக்க... எதிரே... ஒய்யார நடை நடந்தபடி வந்து கொண்டிருந்தாள் அவள்!

மின்னல்குமாரி!

மின்னல்குமாரியை அங்கு எதிர்பார்க்காததால் உதரேகா எரிச்சலே ஆனாள்.

போகிற நேரத்தில் இவள் முகத்தில் விழிக்க வேண்டாம் என்று பார்த்தால்... வந்து.. தொலைத்து விட்டாளே!

சரி... இவளிடம்.. ஒரு வார்த்தை சொல்லிவிட்டு செல்வோம்... என்றபடி உதயரேகா லேசாய் அவளைப் பார்த்து புன்னகைக்க.. பதிலுக்கு டூத் பேஸ்ட் விளம்பரக்காரி போல் அத்தனை பற்களையும் காட்டி சிரித்தாள் அவள்.

அவள் பெட்டியும கையுமாய் வெளியேறுவதைப் பார்க்கையில்தான் மின்னல்குமாரியின் முகத்தில் என்ன ஒரு பரவசம்! முகமே வெடித்து விடும் அளவுக்கு என்ன ஒரு சந்தோஷம்!

அதை உற்றுக் கவனித்த உதயரேகா, சரி அப்படியாவது இவள் திருப்திப் பட்டு கொள்ளட்டும.... என்ற நினைப்போடு நடக்க.. பக்கத்தில் வந்து உரிமையாய் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள் மின்னல்குமாரி.

என்ன... நீ... என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் கிளம்பிவிட்டாய்? என்ன இருந்தாலும் நான் உன் தோழி அல்லவா?

மின்னல்குமாரி இப்படிக கேட்டதும் உதயரேகாவிற்கு சிரிப்புதான் வந்தது. சரிதான், இப்படி நேரம் பார்த்து நேரத்திற்கு தகுந்தாற்போல் வேஷம்

போடுவதில் மின்னல்குமாரி கில்லாடியாயிற்றே.... என நினைத்தவள் அவளுக்கு ஏற்றாறபோல், உன்னிடம் சொல்லத்தான் உன்னைத் தேடி வந்தேன். நீயே சொல்லிவிட்டாய்! என்றாள்.

அவள் கைகளைப்பிடித்து தரதரவென உரிமையாய் தன் ரூம் பக்கம் இழுத்துச் சென்றாள் மின்னல்குமாரி.

என்ன.. என்ன...? என திகைப்பாய் கேட்டவளை,

ஊருக்குப் போகிறாய். நாம் பிரியப் போகிறோம். என்னதான் நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நாம் நண்பர்களாய்ப் பிரிவோமே! என்றபடி தன் ரூமில் உள்ள இருக்கை ஒன்றில் உதயரேகாவை உட்கார்த்தி வைத்தாள்.

உதயரேகாவும் பதிலுக்கு ரெடிமேடாய் புன்னகைத்து, ஓ... அதற்கென்ன...? உன் மேல் எனக்கு எவ்வித கோபமும் இல்லை... நீ... எப்போதும் என் தோழிதான்! என்றாள்.

சரி..... முதலில் நாம் பழையதை மறந்து நட்பாகிவிட்டதற்கு இந்த பழச்சாறை நீ பருக வேண்டும்.... என்றபடி மின்னல்குமாரி தயாராய் பிப்பாயில் வைத்திருந்த பழச்சாறை எடுத்து நீட்டினாள்.

புன்னகையுடன் அதை வாங்கிப் பருக ஆரம்பித்தாள் உதயரேகா.

அவள் அப்படிப் பருகுவதை ஒருவித விஷமச் சிரிப்புடன் பார்க்க ஆரம்பித்தாள் மின்னல்குமாரி.

## 16

உதயரேகா பழச்சாறை குடித்து விட்டு மின்னல்குமாரியிடம் விடைபெற்றுச் சென்று விட்டாள்.

அவள் செல்வதற்கு வசதியாய் மின்னல்குமாரியே போன் செய்து ஆட்டோ பிடித்துக் கொடுத்தாள். தன் உடமைகளுடன் அதில் ஏறி ரயில்வே ஸ்டேஷன் நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள் உதயரேகா.

பங்களாவை விட்டு ஆட்டோ மெல்ல நகருகையில்... எல்லோரையும் பிரிகிற சோகத்திடில் அவள் கண்களே குளமாகியது. சிரமப்பட்டு அடக்கியவள் அதற்குப் பின் எதையும் பார்க்க விரும்பாதவள் போல் கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

ஆட்டோ எஸ்டேட் பங்களாவை விட்டு வெளியேறி வேகம் பிடித்தது.

அதே நேரம்



மின்னல்குமாரியின் ரூமிற்குள் புயலாய் நுழைந்தான் நரேந்திரன்.

மின்னல்குமாரி குஷன் இருக்கையில் ஒய்யாரமாய் சாய்ந்தபடி இருந்தவள் நிமிர்ந்தாள். நரேந்திரனைப் பார்த்ததும் அவள் முகம் கறுக்க ஆரம்பித்தது.

நரேந்திரனும் முகம் இறுகியவனாகவே அவள் முன்னால் போய் கைகளைக் கட்டியபடி நின்றாள்.

நீ போட்ட வேஷம் கலைந்து விட்டது! என்றான்.

அவனது கடுமையான குரலுக்கு கொஞ்சமும் அசராமல் அலட்சியமாய் அவனைப் பார்த்தாள் மின்னல் குமாரி.

என்ன... நான் சொல்வது புரிகிறதா... இல்லையா? என்றான் நரேந்திரன் குரலை உயர்த்தியபடி.

புரியவில்லை. தெளிவாகச் சொல்லுங்கள்... என்றாள் அவளும் குரலை உயர்த்திக் கொண்டு.

நீ உதயரேகா பற்றிச் சொன்னது எல்லாம் அப்பட்டமான பொய். உன் சகோதரனின் தற்கொலைக்கு அவள் காரணமும் இல்லை. உன் சகோதரன் போதைப் பழக்கங்கள் எல்லை மீறியதால்தான் தற்கொலை பண்ணியிருக்கிறான் என்பதையெல்லாம்.. உன் சகோதரன் படித்த கல்லூரிக்குச் சென்று விசாரணை செய்தே கண்டு பிடித்து விட்டேன்...

சொல்லியபடி அவள் அதிர்வாள் என நரேந்திரன் அவளது முகத்தையே உற்றுப் பார்க்க கொஞ்சமும் அதிராமல் சிரித்தாள் அவள்.

நீங்கள் கண்டு பிடித்து விட்டது நேற்றே எனக்குத் தெரியும். நேற்று நீங்கள் உதயரேகாவிடம் பேசிக்கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டேன... என்றாள் அவள்.

என்ன ஒட்டுக் கேட்டாயா?

நரேந்திரன் சீற... அலட்டாமல் சிரிக்க ஆரம்பித்தாள் அவள்.

ஆமாம். ஒட்டுதான் கேட்டேன். நேற்று உதயரேகாவிடம் தனியாக ஏதோ பேச வேண்டும் எனச் சொல்லி ஜீப்பில் அழைத்துச் சென்றபோது பின் தொடர்ந்தேன். ஆலமர நிழலில் வைத்து நீங்கள் பேசியபோது அவ்வளவையும் ஒட்டுக்கேட்டேன்!

நரேந்திரன் சீற்றம் குறையாமல் முறைத்தான்.

நீ.. என்னிடம் எவ்வளவு நாடகமாடி இருக்கிறாய்? உதயரேகா மேல் பொய்களை வாரி இறைத்து என்னை வைத்து அவளுக்கு எவ்வளவு துன்பங்களைக் கொடுத்திருக்கிறாய்? இதுவெல்லாம் ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணுக்கு செய்யக் கூடிய விஷயங்களா? பதில் சொல்!

இம்முறையும் தோள்களை அலட்சியமாய் குலுக்கிய மின்னல்குமாரி, ம்ஹூம்! அதெல்லாம் எனக்குத் தெரியாது நினைத்தேன். உங்கள் மூலமாக அதை செய்து விட்டேன். அதுபோதும எனக்கு...! வீணாக.. அவளுக்காக உங்களை அலட்டிக் கொள்ளாதீங்க டியர... என கொஞ்சல் சிரிப்புடன் முடித்தாள். நரேந்திரனோ எரிமலையாய் வெடித்தான்.

என்ன ஒரு நெஞ்சழுத்தம் உனக்கு! ஆமாம்... என்னை எப்படி அழைத்தாய்? டியர்... என்றா? இனி.. இந்த டியர், கியர் என கொஞ்சுகிற வேலையை எல்லாம் என்னிடம வைத்துக் கொள்ளாதே. பல்லை உடைத்து விடுவேன். ஜாக்கிரதை! என்றபடி சுட்டு விரலை உயர்த்தி கடும் எச்சரிப்பு செய்து விட்டு அகன்றான் அவன்.

அதே நேரம்

பங்களாவை விட்டு வெளியேறிய உதயரேகாவின் டாக்ஸி ரெயில்வே ஸ்டேஷனை நோக்கிய சாலையில் விரைவாய் சென்று கொண்டிருந்தது.

பின் ஸீட்டிலிருந்த உதயரேகா என்னென்னவோ எண்ணங்களில் தவித்துக் கொண்டிருந்தவள் திடீரென வயிற்றில் பெரும் வலியை உணர்ந்தாள். தலையை கிறுகிறுப்பது போல் இருந்தது.

அவளுக்கு சட்டென ஞாபகம் வந்தது. அந்தல் மின்னல் குமாரி கடைசியில் நல்லவள் போல் ஜூஸ் ஒன்றைக் கொடுத்தாளே? அதில் ஏதாவது கலந்திருக்குமோ?

அவள் அதற்கு மேல் சிந்திக்க முடியாதபடி அவள் நினைவு தப்ப ஆரம்பித்தது. சுய நினைவிழந்தவளாய் பின் சீட்டிலேயே அப்படியே மயக்கமாகி விழுந்தாள் உதயரேகா.



## 17

எல்லாம் முடிந்திருந்தது.

ஒரு வாரம் வேகமாய் ஓடியிருந்தது.

அன்று உதயரேகா கண்விழித்த போது தான் எஸ்டேட் பங்களாவிற்கு வந்து விட்டதை உணர்ந்தாள்.

தான் எங்கு இருக்கிறோம்? என பார்த்தாள்.

இது... இந்த ரூம்... நரேந்திரனின் பிரத்யேக ரூம் அல்லவா?

இங்கு கொண்டு யார் அவளை படுக்க வைத்தார்கள்?



அவள் கைகளை அசைத்து மெல்ல எழ முயற்சித்த போது ஒரு கரம் மெல்ல அழுத்தியது.

நிமிர்ந்து பார்வையைத் திருப்பினால்... அங்கு அது.. அது.. நரேந்திரன்தான்!

லேசான சிராய்ப்புத் தாடியுடன் கவலை பொங்கும் முகமாய் பெட்டை ஒட்டிய ஸ்டூலில் உட்கார்ந்து அவளையே பார்த்தபடி

அந்த ரூமில் அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லையா?

அவள் புரியாமல் விழித்து தலையைத் திருப்பி இருபுறமும் பார்த்தாள்.

நரேந்திரனின் முகம் பெரிதாக அவள் பக்கத்தில் வந்து கனிவாய்ப் பார்த்து இதமாய் புன்னகைத்தது.

தன்னைப பார்த்துதான் இப்படி ஒரு மென்மையான சிரிப்பு சிரிக்கிறானா என அவள் வியக்க அவனது கரங்களை மெல்ல அவள் தலையில் வைத்து பரிவாய் நீவி விட்டான்.

நீ தூங்குவது அவசியம். இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கு...!

அவன் சொல்வது காதுகளில் மந்திரம் ஒலிப்பதைப் போல் விழுந்தது.

அவள் மறுநிமிடமே அதற்குக் கட்டுப்படுபவள் போல் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

சொற்ப வினாடிகளிலேயே அவள் மறுபடியும் தூங்கிப் போனாள்.

அவள் மறுபடி கண் விழித்தபோது நேரம் மாலையை நெருங்கிக் கொண்டிருந்த ஐந்து மணி.

அதே போல் விழித்து பரக்கப் பரக்கப் பார்த்தவள் எதிரே... அதே ஸ்டூலில் அதே போஸில் அப்படியே அவளைப் பார்த்தபடியே நரேந்திரன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிடவே செய்தாள்.

என்ன இப்படியே உட்கார்ந்திருக்கிறானா? வேறு எங்கும் போகாமல் தன்னையே கவலையோடு பார்த்தபடி உட்கார்ந்திருப்பது நரேந்திரன்தானா?

நம்ப முடியாமல் பார்த்தவளின் நெற்றியில் மென்மையாய் அவன் தன் இதழ்களைப் பதித்தான்.

நடப்பது நிஜம்தான்!

நரேந்திரன் அவளுக்கு நெற்றியில் முத்தமிடுகிறான்!

என்ன இது... ? இங்கு என்னதான் நடக்கிறது...?

அவள் அதற்கு மேல் பொறுக்க முடியாமல் எழுந்து விட்டாள்.

சூடான ஆவி பறக்கும காபியை கப் அண்ட் ஸாஸரில் நீட்டினான்.

முதலில் இதைக் குடி! என்றான்.

ஒரு கணம் தயங்கியவள் மறு நிமிடமே வாங்கி ஒரே மூச்சில் குடித்தாள்.

நிமிர்ந்து அவனையே பார்த்தாள்.

சொல்லுங்கள்... என்றாள்.

அவன் இம்முறை சோகமாய் புன்னகைத்தான். எதைச் சொல்ல..? ஆனாலும்... மின்னல்குமாரி உனக்கு விஷம்வைத்துக் கொடுக்குமளவுக்கு மோசமானவள் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... என்றான்.

அவளுக்கு அப்போதுதான் நடந்த எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் ஞாபகத்திற்கு வந்தது. மின்னல்குமாரி, நல்லவள் போல் திருந்தி மன்னிப்பு கேட்பதுபோல் பேசி தன்னிடம் ஜூஸ் குடுத்தது... தான் கொஞ்ச நேரத்திலே டாக்ஸியில் சென்றபோது மயக்கமானது... டிரைவர் அதை கவனித்து யாருக்கோ... போன் செய்ய தன்னை யார் யாரோ தூக்கிக் கொண்டு... ஆஸ்பத்திடிரி வராண்டாவில் ஓடியது... அரை குறையாய் நினைவுக்கு வர.. அவள் நினைப்பை புரிந்தவன் போல் நரேந்திரன் விளக்கினான்.

ரொம்பவும யோசித்து திகைக்காதே.. என்றபடி அவளைப் பரிவாய் பாரத்தவன், நீ டாக்ஸியில் மயங்கி விட்டதும்... டாக்ஸி டிரைவர் உடனே எனக்குத்தான் செல்போனில் தெரிவித்தான்....

அவருக்கு எப்படி உங்கள் நெம்பர்?

அவன்... வழக்கமாய் நம் எஸ்டேட்டைச் சுற்றிப் பார்க்க வரும் விருந்தாளிகளுக்கு கைடு போல் செல்பவன்தான்... அதனால் என்னிடம் நேரிடையான தொடர்பு அவனுக்கு உண்டு. அதனாலே... உடனே... என்னிடம்தான் தெரிவித்தான். நான் பதறி ஓடி வந்து பார்த்தால்... பின் சீட்டில் வாயில் நுரை தள்ள மயங்கியபடி நீ.. அந்த நேரம்பார்த்து ரோட்டில் லாரி ஒன்று கவிழ்ந்து விட்டதால்... சரியான டிராபிக் ஜாம வேறு.. இரண்டு பர்லாங் தூரத்தில் ஹாஸ்பிட்டல்... வேறு வழி...? சினிமாக் கதாநாயகன் போல் உன்னை கைகளில் ஏந்திக் கொண்டு... அரக்கப் பரக்க ஓடினேன்...

என்ன.. என்னை அப்படித் தூக்கிக் கொண்டு ஓடினது... நீங்கள்... நீங்கள்தானா...?

மறுபடியும் நமப முடியாமல் கேட்டு விழித்தவளின் முகத்தில், கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான் அவன்.

அப்படி அவன் முத்தமிட்டதைக்கூட அவள் சற்றும் உணராமல் தன்னை காப்பாற்ற வேண்டும் என தனக்காக... நரேந்திரன் தன்னை தூக்கி கொண்டு ஆஸ்பத்திரி... நோக்கி ஓடியிருக்கிறானா? அவசர அவசரமாய் ஆஸ்பத்திடிரி பணியாளர்களை விரட்டி டாக்டரைத் தேடி முறையிட்டு... தன்னை... காப்பாற்றத் துடித்தது இவன்தானா? நம் மேல் அவ்வளவு அன்பா இவனுக்கு?



அப்படியே நினைத்தவள் மறுகணமே, இவ்வளவு நாள் இல்லாத அன்பு... பாசம்... திடீரென்று... எப்படி எங்கிருந்து பொத்துக் கொண்டு வந்ததாம்? என சினமாய் கொதிக்கவும் செய்தாள்.

அவள் முகமாற்றத்தை வைத்தே அவள் எண்ணத்தை புரிந்து கொண்டவனாய், உண்மைதான் கண்மணி. அந்த அன்பு திடீரென பொத்துக்கொண்டு வந்ததுதான்...! என்றான் லேசாகச் சிரித்தபடி.

அவள் முறைத்ததும் அந்த சிரிப்பு மாறாமலே விளக்கினான் அவன். மின்னல்குமாரி மோசமானவள் என்பது தெரிந்ததுமே அவளை நம்பி அவள் பேச்சுக்காக உன்னை துன்புறுத்தியதை எல்லாம் நினைத்து குமைந்தேன். உனக்கு எவ்வளவு பெரிய தவறு இழைத்து விட்டேன் என உள்ளுக்குள் மருகினேன். அதனாலே... நீ கோபமாய் என்னை விட்டு வெளியேறி ஊருக்கு கிளம்பியதும்... உன் முகத்தில் விழிக்கவே நான் தகுதியற்றவன். எனக்கு இந்த தண்டனை சரி... என்றே நினைத்து உன்னைத் தடுக்காமல் அந்த ஏக்கப் பார்வை பார்த்தேன். ஆனால்.. அப்படி... உனக்கு எல்லாக் கொடுமைகளும் செய்துவிட்டு சும்மாவாக இருந்தால் எல்லாம் சரியாகிவிடுமா? செய்த தப்புகளுக்கெல்லாம் பரிகாரம் தேட வேண்டாம்? குச்சியால் குத்தியது போஸ் காயப்படுத்திய உன் மனதை தங்கத் தாம்பாளத்தை வைத்து தாங்க வேண்டாம்? உன் இருதயத்தை அன்பு மலர்களால் பூஜிக்க வேண்டாம்...?

அவனை மேலே பேச விடாதபடி அவளுள் சிரிப்புச் சத்தம் எழுந்தது.

என்ன சிரிக்கிறாய் கண்மணி...?

என்ன... என்ன... சொன்னீர்கள்... கண்மணியா? இப்படியெல்லாம் கொஞ்சம்கூட உங்களுக்குத் தெரியுமா...? அதுவும் அந்த மின்னல்குமாரி இல்லையென்றதும் கொஞ்சுவதற்கு ஆள் இல்லாமல் போய்... என்றவள் சட்டென ஞாபகம் வந்தவளாய் புருவம் உயர்த்தினாள்.

ஆமாம்... மின்னல்குமாரி... எங்கே? இன்னும் இங்கு தான் இருக்கிறாளா..?

அவள் பரபரத்துக் கேட்க, பயப்படாதே. அவளை அடித்து துரத்தி இரண்டு நாட்களாயிற்று. அவளது ஊரை நோக்கி ஓடியே விட்டாள்.... என்றான் அமைதியாய்.

என்ன அடித்து துரத்தியா?

நிஜமாகவே... அடிக்காத குறைதான். அவ்வளவு ஏச்சுகள், வசவுகள். இங்கு உள்ள சிறு வாண்டுகளில் இருந்து பெரியவர்கள் வரை காறை உமிழாத குறைதான். அந்தப் பேச்சுக்களைத் தாங்க முடியாமல் மூட்டை

முடிச்சுகளை தூக்கிக் கொண்டு ஓடியே விட்டான். அவள் செய்த காரியத்திடிற்கு அவளை போலீசில் ஒப்படைத்துகம்பி எண்ண வைக்க வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டேன். வீட்டில் உள்ளவர்கள் தடுத்து விட்டார்கள்.

அப்படியானால் கடைசி வரை அவள் திருந்த வில்லை. அப்படித்தானே?அவள் திருந்தவில்லைதான். ஆனால் அவளைப் பார்த்து நான் திருந்தி விட்டேன்... என்றான் நரேந்திரன் அழுத்தமான குரலில்.

அட... இது.. வேறா...? நீங்கள் எப்போது எதனால் திருந்தினீர்கள்...? என குரலில் கேலியோடு அவள் கேட்கவும் அவன் என்ன பதில் சொல்வதென்று ஒரு கணம் திகைத்தான்.

அட... தடுமாறுவது போல் கூடத் தெரிகிறது...? என்ன... பேசுவது என்றா.. அல்லது இம்முறை எப்படி நடிப்பை நடிப்பதென்றா...?

அவன் மறுபடியும் சலனமில்லாமல் சிற அவன் அமைதியானவன் போல் கைகளைக் கட்டிக்கொண்டான். அவனது கம்பீரமான முகத்தில் ஆழ்ந்த சோகம் ஒன்று படருவதை உற்றுக் கவனித்தாள் அவள்.

என்னை இதைவிட மோசமான வார்த்தைகளால் எல்லாம நீ குத்திக் கிழிக்க வேண்டும். ஏனெனில் உனக்கு உரிமை உண்டு கண்மணி. அவ்வளவு கொடூரனாய் ஒரு ஈனப் பிறவி போல் உன்னிடம் நடந்திருக்கிறேன்...

ஈனப்பிறவி? அவள் அடிக்கடி மனதில் அவனைப் பற்றி நினைத்த வார்த்தை அல்லவா? அதையே அவன் உபயோகிக்கிறான்?

அவள் திகைத்து கண்கள் விரியப் பார்த்தபோது அவனும் திரும்பி அவளது மை விழிக் கண்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கூடவே தாங்க முடியாதவன் போல் மருகவும் செய்தான், என்ன ஒரு விழிப் பார்வை? கள்ளங் கபடமில்லாத அப்படி ஒரு அபார வீச்சு... நான் முழுவதும் பார்த்துக் கொண்டே ரசிக்கலாம் போல் இருக்கிறதே. இப்படி ஒரு அபார அபூர்வ அழகை பக்கத்தில் வைத்துக் கொண்டு அதை உணராமல் இவ்வளவு நான் பூஜிக்காமல் இருந்திருக்கிறேனே. சரியான மடையன்தான் நான்!

அவன் அவள் அழகை அப்போதுதான் இன்னொரு கோணத்தில் வியந்து பார்த்து, ரசித்தாலும் அவளுள் கோபம் வேறு விதமாய் கூடியது.

ம்...ம்... சொல்கிறேன்... என்றபடி நீளமான மூச்செடுப்புடன் பேச ஆரம்பித்தான் நரேந்திரன்.

கண்மணி, மின்னல்குமாரி சொன்ன கதையளப்பில் முக்கியமானது அவளது சகோதரன் பற்றித்தான். அவன் கெட்ட பழக்கங்களினால், போதை வஸ்துகளால் சுயநினைவு இன்றி ஒரு நாள் தானாகவே தற்கொலை



செய்திருக்கிறான். அதை இவள் அப்படியே பிளேட்டை மாற்றும் கதையாய்.... உன் பின்னால் காதல் என்று அவன் அலைந்தானாம். நீயும் முதலில் அவன் காதலிப்பது போல் நம்ப வைத்து விட்டு அவனை ஏமாற்றி விட்டியாம். மற்ற சக மாணவ மாணவியர்கள் முன்னால் அவனைக் கேவலமாகப் பேசி விரட்டி விட்டாயாம். அதனால் அவன் மிகவும் மனமுடைந்து ரூமில் போய் தற்கொலை செய்து கொண்டானாம். அதனால் அவன் தற்கொலை செய்ததற்கு அவனைக் காதலித்துவிட்டு ஏமாற்றிய நீதான் முழுக் காரணம் என் மின்னல்குமாரி கதையாய் சொல்லி விட்டாள். நானும் அப்படியே உண்மை என நம்பித் தொலைத்து விட்டேன்....

அவன் சொல்ல உதயரேகா புருவம் சுருங்கப் பார்த்தவள், ம்ஹூம்.... நல்ல நம்பிக்கை! அவன் முட்டையிலிருந்துதான் குதிரைக் குட்டி வெளி வந்து ஓடியது என்று சொன்னால் கூட நம்பத்தானே செய்வீர்கள்... எல்லாம்.. அந்த மயக்கம்... மின்னல்குமாரி மீதான தீவிர மோகம்... அப்படித்தானே? என்றாள் அதே சீண்டும் குரலில்.

அதை ஆமோதிப்பது போலவே தலையசைத்தான் நரேந்திரன். நீ சொல்வது சரிதான். ஆனால் மின்னல் குமாரியின் மீது மோகம் ஏற்படவில்லை. ஒருவித மயக்கம். கவர்ச்சியினால் ஏற்பட்ட ஒருவித தடுமாற்றம். அதனாலே அவள் சொல்வதை சீர்தூக்கி சிந்தித்துப்பார்க்காமல் உண்மையென்று நம்பினேன். மகுடிக்கு அடங்கும் பாம்பு போல அவள் சொன்னபடியெல்லாம் தலையாட்டி ஆடினேன். ஈவு இரக்கமில்லாமல் உன்னை துன்புறுத்தி கொடுமைப்படுத்த... சினிமா வில்லன் போல் அல்லவா வெறி பிடித்து உன்னை விரட்டியிருச்கிறேன்... எனச் சொன்னவன் நிறுத்தி விட்டு ஒரு கணம் கண்களை மூடியவன், அதற்காக ரொம்பவும் வருந்துகிறேன். உன் மன்னிப்பைக் கோருகிறேன். மன்னிப்பாயா உதயரேகா? என்றான் கெஞ்சல் குரலில்

முதலில் ஞானோதயம் பெற்ற கதையை முழுவதுமாய்ச் சொல்லுங்கள்... மற்றதை பிறகு பார்ப்போம்... எனறாள் விரட்டுபவளாய்.

சொல்கிறேன். அவள் மின்னல்குமாரி சொல்வதை எல்லாம் நம்பி அதன்படியே செய்து கொண்டிருந்த நான்... ஒரு நாள் தற்செயலாய் அவளது சகோதரன் பேச்சை எடுத்து உன்னைச் சீண்ட....நீ... மடமடவென உண்மையை உரைத்துவிட்டாள். அவள் மின்னல்குமாரியிடம் போய் கேட்டாலோ. அவள் தான் சொன்னதே உண்மையென்று பொய்ச் சத்தியம் அடித்தாள். இருந்தும் நான் சொன்னதே உண்மையென்று பொய்ச் சத்தியம் அடித்தாள். இருந்தும் நான் அவளை நம்பவில்லை. பிஸினஸ் டூர் என்று சொல்லிவிட்டு இரண்டு நான் மின்னல்குமாரியின் சகோதரன் படித்த காலேஜுக்கே சென்று விசாரித்தேன். அங்குதான் எல்லாக் குட்டும்

வெளிப்பட்டது. நீ சொன்னதுதான் உண்மை என்பது புரிந்தது. அத்தோடு நான் விடவில்லை. இன்னொன்றும் செய்தேன்.

அப்படி என்ன செய்தீர்களாம்?

நீங்கள் இருவரும் படித்த கல்லூரிக்கும் சென்றேன். எனக்குத் தெரிந்த பேராசிரியர் மூலம் விசாரித்த போது அந்த உண்மையும் வெளிப்பட்டது.

எந்த உண்மை?

உனக்கும் மின்னல்குமாரிக்கும் கல்லூரி அழகிப் போட்டியினால் ஏற்பட்ட மோதலும், மின்னல்குமாரி அதில் உன்னை தவறாக நினைத்து, பகையை வளர்த்து உன்னைத் துரோகியாய் எதிரியாய் எண்ணி விட்டதை எல்லாம் உணர்ந்து கண்டு பிடித்தேன். அதன் பின் தான் எனக்கு எல்லாம் புரிந்தது. மின்னல்குமாரியின் பேச்சை நம்பி எவ்வளவு புளிமூட்டையாய் டியூப் லைட்டாய் இருந்திருக்கிறேன்... என்று....

டியூப் லைட்.... புளிமூட்டை... சரியான வார்த்தைகள்தான்... என்றவள் விடாது, ஏன் இப்படி அசடாய் இருந்த உங்களை மக்கு என்றுகூட சொல்லலாம்... என தன் ஆத்திரம் தீரும் வகையில் கூறினாலும், அவன் முகம் அதில் லேசாக வாடுவதை உணர்ந்து உதட்டைக் கடித்தாள் அவள்.

அவன் நரேந்திரனோ மறுபடியும் பெருமூச்சு விட்டவன், அவ்வளவு உண்மைகளைத் தெரிந்த பிறகும் என்னால் உடனே ஒன்றும் செய்துவிட முடியவில்லை. மின்னல்குமாரி காலைச் சுற்றிய பாம்பு போல கொடூரமானவள் என்பது நன்கு புரிந்தது. அதனால் கவனமாய் சரியான நேரம் பார்த்து உண்மையை வெளிக் கொண்டுவந்து அவள் சுயரூபத்தை எல்லோருக்கும் காட்ட வேண்டும் என்று காத்திருந்தேன். ஆனால் அதற்குள் பொறாமை பிடித்த அவள் முந்திக்கொண்டு விஷம்வைக்கும் அளவுக்குப் போய் விட்டாள்...!

இதையெல்லாம் உணராமல் உன்னை ரொம்பவும் நான் நோகடித்திருக்கிறேன். கடைசியல் மின்னல் குமாரியின் சுயரூபம் தெரிந்த போதுதான்... உன்னைப் பற்றி... நீ என் மீது வைத்திருந்த அபரீதமான அன்பு... எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடிந்தது. நான் இவ்வளவு துன்பம் கொடுத்த போதும் என்னை வெறுக்காமல் உள்ளூர நேசித்த உனது மனநிலை புரிந்தது....

நரேந்திரன் சொல்ல விழி பிதுங்கும் அளவுக்கு ஆச்சரியம் கொண்டவள், அது...அது எப்படித் தெரியும்? அதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்? என்றாள் திணறலான குரலில்.



நரேந்திரன் சிரித்தவன், 'வேறென்ன..? உன் முகம்... அந்த அழகான மை விழிக் கண்கள். அவைகள் தான் பார்வையாலே ஓராயிரம் செய்திகள் சொல்லியது. புரியாத விஷயங்களை எல்லாம் புரிய வைத்தது... அவன் சொல்ல, என்ன நம் கண்களே... நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டதா?' என திகைப்பான ஆச்சரியத்துடன் முகம் சிவந்தாள் அவள்.

'என்ன நான் சொல்வதெல்லாம் உண்மைதானே?' என அவன் கேட்டதும் அதற்கு மேலும் நிஜத்தை மறைக்க முடியாதவளாய் நாணிச் சிவந்தவள் அப்படியே குனியவும் செய்தாள்.

குனிந்த அவள் மலர் முகத்தை மெல்ல நிமிர்த்தி அவளின் அந்த மருண்ட மான் விழிகளின் பளபளப்பான படபடப்பை வெகுவாய் ரசித்தவன், 'அன்புள்ள மான்விழியே...' என வினிக்கவும் செய்தான்.

அவள் மேலும் திகைத்துப் பார்க்க அவனோ தொடர்ந்து, 'அன்புள்ள மான் விழியே இது ஆசையினால்.. ஒரு கடிதம் மட்டுமல்ல. என் உள்ளம்... அன்பாய்... உன்னை... உன்னை... மட்டும் நினைக்கும் ஒரு உள்ளத்தை உனக்கே உனக்காக பரிசாய்த் தரப் போகிறேன். மேலும்....' என்றவன் ஒரு கணம் நிறுத்தி, 'ஆமாம். என் தவறுகளுக்கெல்லாம் என்னை மன்னித்து விட்டாய்தானே?' என்றான் சந்தேகக் குரலில்.

'யார் அப்படிச் சொன்னது?' என்றாள் அவளும் அதே சந்தேகத்துடன்.

அவன் சட்டென குனிந்து அவள் கரங்களைப் பார்த்துவிட்டுச் சிரித்தான்.

அவன் அவளது இடையே இறுக்கிப் பிடித்திருந்தது போல், அவள் நெஞ்சார அவனை அணைத்துப் பிடித்திருந்தாள்.

'நீ... என்னை.. மன்னித்து விட்டது புரிகிறது...' என்றபடி அவவன் மறுபடி சிரிக்க, 'அட... கண்டு பிடித்துவிட்டானே...?' என அவசரமாய் அவள் வெட்கத்துடன் கரங்களை விலக்கப் போக, சட்டென அவைகளை இழுக்க இதமாக அணைத்துப் பிடித்தான்.

'உன்னை... உனது அருமையை நன்கு புரிந்து கொண்டேன் கண்மணி. இனி... உன்னை... நான் முன்பே சொன்னது போல் தங்கத் தாம்பளத்தில் வைத்துதான் தாங்கப் போகிறேன். உன் விழி அசைவுக்காக காத்திருக்கும் காவலனாய் அடிமைபோல் வாழ்நாள் முழுவதும் உனக்காக...'

அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டு போக...- அவன் மேற்கொண்டு சொல்ல முடியாதபடி கடகடவென சிரிக்க ஆரம்பித்தாள் அவள்.

'என்னாயிற்று?... ஏன் சிரிக்கிறாய் கண்மணி?'

திடுக்கிட்டு அவன் கேட்டதும் அவள் சிரிப்பை நிறுத்தி அமைதியாக அவனைப் பார்த்தாள்.

'எல்லா ஆண்களும்... குனிந்து நாங்கள் கழுத்தை நீட்டுவதற்காக.. மூன்று முடிச்சு போடும் முன் பேசுகிற டயலாக்கை அச்சுப் பிசகாமல் பேசுகிறீர்களே... இது யார் சொல்லிக் கொடுத்தது?' என்றாள்.

'யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. உண்மையாக இங்கிருந்து வந்தது....' என்றபடி அவன் தன் நெஞ்சுப் பகுதியைக் காட்டினான்.

'நிஜமாகவா.. இங்கிருந்தா?' என்றபடி அவள் அப்படியே தன் முகத்தை அவனது நெஞ்சில் பதித்தாள். காது மடல்கள் அதிர அவள் முகத்தை திருப்பியபோது.. நிஜமாகவே அவனது இதயத் துடிப்பின் ஓசை சன்னமாய் அவளுக்கு கேட்டது.

அவன் நெஞ்சில் கிடந்தவளின் நெற்றியில் குனிந்து மென்மையாக முத்தமிட்டான். மேலும் பிடியை இறுக்கினான்.

தான் அவனை விரும்பியது போலவே அவனும் தன்னை விரும்ப ஆரம்பித்து விட்டான்... என்பது அந்த இனிமையான முத்த ஸ்பரிசத்தில் அவளுக்குப் புரிந்தது.

அந்தப் புரிதலில் சிறக்கமாணவள் போல் தன் விழிகளை மேலும் மலர்த்தி ஆசையோடு அவனை இறுக்கிக் கொண்டாள் அவள். இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தனர் இருவரும்.

(முற்றும்)


**அக்ஷயா மாத நாவல்**

மலர் : 1 இதழ் : 5

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734



கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே, கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.



**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**


Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035.







வெற்றி நிச்சயம்

வாஸ்து வல்லுநர், Face / Palm Reader, முனீஸ்வரர் அருள்வாக்கு சித்தர்,

டாக்டர் & டாக்டர் Lion V.V.M.B. நெல்லையப்பன் நீலகண்ட சிவா

நெ.32, மகாலட்சுமி தெரு, தி.நகர், சென்னை - 17.

போன்: 044-6555 5790, 9841294932, 9444416854 www.muniswararuIvakku.com